ISSN 1888-1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி: 05 | மார்ச் 2009 | பார்வை: 55 | விலை: ரூபா 50.00




★ அறிவின் தெறிப்பும்-பெண்களும்

★ செயல்நிலை ஆய்வின் வகிபங்கு

★ தேர்ச்சிமிகு ஆசிரியர்

★ நாட்டின் விவசாய அபிவிருத்தியில்.....

★ உரையாடல்: கண்ணம்மா ஆசிரியர்





★ பாலியல் வன்முறை எனும் தொற்றுநோய்

★ சிறுகதை: "வெப்பியாரம்"




* சபா.ஜெயராசா * த.கலாமணி * சி.திகநாதன் * ஏ.பரமானந்தம்

* நிஷா * ப. அருந்தவம் * அ. முத்துக்கிருஷ்ணன் * துரைமடன்

* ஆழியாள் * மூர்

# வெளிவந்துவிட்டது

# கூடம் - 11




**விலை: 100.00**

*தொடர்பு:*
*3, டொரிங்டன் அவனியூ*
*கொழும்பு 07*
தொலைபேசி: 011 250 6272
மின்னஞ்சல்: *koodam@viluthu.org*

K.BHARANEETHARAN
Editor Jeevanathy
Editor Kadal
Kalaiaham, Alvai.

ISSN 1888 - 1246

# அகவிழி

மாத இதழ்

ஆசிரியர் : தெ. மதுசூதனன்

ஆசிரியர் குழு : சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

ஆலோசகர் குழு : பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி சபா.ஜெயராசா
(முன்னாள் பேராசிரியர் கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
(பீடாதிபதி, கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் மா.செல்வராஜா
(கல்வித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி உ.நவரட்ணம்
(பணிப்பாளர், சமூகக்கற்கை, தேசிய கல்வி நிறுவகம்)
தை. தனராஜ்
(முதுநிலை விரிவுரையாளர், கல்விப்பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(முதுநிலை விரிவுரையாளர், கல்வித்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இதழ் வடிவமைப்பு : செல்வி. த.மைதிலி

அச்சு : சேமமடு பதிப்பகம்
தொலைபேசி: 011-2472362

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:
: AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07
Tel: 011-2506272
E-mail : ahavili2004@gmail.com
ahavili2004@yahoo.com

## உள்ளே...

- அறிவின் தெறிப்பும் - பெண்களும் ... 03
- பாலியல் வன்முறை எனும் தொற்றுநோய் 07
- நான் ஒரு பெண் 10
- சுவாமி விபுலானந்தரின் கல்வித்துறை.. 13
- எதிர்கால கல்விக்கான தேர்ச்சிமிகு... 18
- ஒரு அதிபரின் டயரியிலில் இருந்து 22
- நாட்டின் விவசாய அபிவிருத்தியில்.... 24
- 5ம் தரப் புலமைப் பரீட்சையும் ஆசிரியமும் 28
- ஆசிரிய வாண்மை விருத்தியில் செயல்... 31
- வெப்பியாரம் 36
- வாசகர் பக்கம் 38

அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு. கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.

# ஆசிரியரிடமிருந்து...

மார்ச் 8 பெண்கள் தினம். வழமைபோல் இம்முறையும் கொண்டாடப்படும். இதனை வெறும் சம்பிரதாய நிகழ்வுகளாக குறுக்கி வைத்திருக்கும் சக்திகள் எம்மிடையே உள்ளனர். இன்றைய வாழ்வியல் குறிப்பாக யுத்தம் பெண்கள் மீது இழைத்துவரும் கொடுமைகள் வன்முறைகள் பன்முகப் பரிமாணம் கொண்டவை.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குடும்பத்திற்கு உள்ளே நடைபெறும் வன்முறைகள், குடும்பத்திற்கு வெளியே நடைபெறும் வன்முறைகள் என இரண்டாகப் பாகுபடுத்தலாம். ஆனால் இவ்விரண்டு வகையான வன்முறைகளும் மொத்தத்தில் பெண்களை உடல்ரீதியான வன்முறைக்கும் உளரீதியான வன்முறைக்கும் இட்டுச் செல்லும்.

பொதுவாக பெண்கள் தாம் வன்முறைக்கு உட்படுத்தப்படுவதை உணராது அவற்றை இயல்பானவையாகவும் பெண் இனத்தின் தலைவிதியாகவும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த மனப்பான்மை பெண்கள் மத்தியில் மிக மோசமான பின்னடைவை ஏற்படுத்துகின்றன. ஆனால் இந்த எதார்த்த உண்மை உணரப்படாமல் பெண்கள் வாழ்வது அல்லது வாழவேண்டுமென நிர்ப்பந்திக்கும் 'ஏற்பு மனோநிலை' 'கருத்தேற்றம்' வலுவாக அனைத்து வடிவங்களிலும் செல்வாக்கு செலுத்துகின்றது.

எனவே பரவலான முறையில் பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய விழிப்புணர்வுக் கருத்தாடல்கள் எம்மிடையே விரிவு பெற வேண்டும். குறிப்பாக எமது கல்விச் சூழலில் நடை பெறும் பெண்களுக்குகெதிரான பராபட்சம், சுரண்டல், ஒடுக்கமுறை மற்றும் வன்முறைகள் குறித்து நாம் விழிப்புணர்வு கொள்ள வேண்டும். இந்தப் புரிதல் தான் சமூகத் தளத்தில் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் வன்முறைகள் பற்றிய அக்கறைகளையும் அவற்றுக்கு எதிரான மனோபாவத்தையும் வளர்க்கும்.

யுத்தச் சூழலை காரணமாகக் கொண்டு பெண்கள் மீது கட்டவிழ்க்கப்படும் வன்முறையானது மிக மோசமானது. உடலியல் உளவியல் ரீதியில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியது. இதைவிட யுத்தத்தின் காரணமாக பாலியல்பலாத்காரம், சித்திரவதை, காணாமல் போதல், சட்டத்துக்கு புறம்பான மரண தண்டனைகள், சிறை வாழ்க்கை போன்ற அசாதாரண நிகழ்வுகளைப் பெண்கள் எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக அகதிமுகாம்களில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறையும் முக்கியமான ஒரு வன்முறைப் பிரச்சினையேயாகும். மேலும் பாலியல் துஷ்பிரயோகம் மிக மோசமாக நிகழ்வதற்கு இங்கு நிறைய வாய்ப்புகள் உண்டு. சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் பலவடிங்கலும் நிகழ்த்தப்படும்.


ஆக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய விழிப்புணர்வு எம்மிடையே இன்னும் விரிவாக்கம் பெற வேண்டும். இதற்குச் சாதகமாகவே நாம் நாம் இம்முறை சில படைப்புகளை இங்கு பிரசுரிக்கின்றோம். 'குஜராத் சம்பவம்' நமக்குள் இன்றுவரை நிகழ்ந்தேறும் பல்வேறு சம்பங்களை நினைவுபடுத்தும். எமது கூட்டு நினைவுகளில் மறைக்கப்படும் சம்பவங்களை அதன் கொடூரங்களை வலிகளை எமக்கு ஞாபகப்படுத்தும். எமது மறதிக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்தும். இந்த சமூகப் பொறுப்பை உணர்ந்து தான் அகவிழியும் பயணிக்கின்றது.

இன்றைய பின்காலனித்துவச் சூழலில் பெண்களின் சமூகத் தகுதி கல்வியினை அடிப்படையாகக் கொண்டு மேலும் மேலும் மேம்பாடு காணும் பண்பாடாகவும் பரிணமித்து வருகின்றது. ஆகவே 'பால்நிலையும் கல்வியும்' தொடர்பான சிந்தனையும் ஆய்வும் எம்மிடையே இன்னும் ஆழப்பட வேண்டும். குறிப்பாக ஆசிரியர் சமூகத்தின் மத்தியில் இந்த மரபு முழுமையாக உள்வாங்கப்பட வேண்டும். ஏனெனில் ஆசிரிய ஆளணியினரின் பெரும்பாலானோர் பெண்களாகவே இருக்கிறனர். ஆனால் ஆசிரியர்களின் செயற்பாடுகளை முகாமை செய்வோரில் பெரும்பகுதியினர் ஆண்களாகவே காணப்படுகின்றனர். இதனால் பல்வேறு பிரச்சினைகளை பெண் ஆசிரியர்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

ஆண்களின் முகாமைத்துவ புலக்காட்சி அந்தஸ்து நிலையிலும் ஆற்றுகை நிலையிலும் பெண் ஆசிரியர்களின் மீது பெரும் தாக்கங்களை ஏற்படுத்து-கின்றன. எமது சமகால கல்விப் புலம் இதனை தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றது. ஆசிரிய வாண்மைத்துவப் பண்பாடும் சீர்மியமும் கூட ஆண் மேலாட்சிக்கு உட்பட்டதாகவே உள்ளது. இதனால் பெண்களுக்கு சாதகமான வாண்மைத்துவ பண்புசார் விருத்திக்கான கோலங்கள் முழுமையாக உள்வாங்க முடியாமல் உள்ளது. இதுவரையான மாற்று நடவடிக்கைகளும் ஆண் ஆசிரியர்களை மையப்படுத்தியே இடம் பெற்று வருவதையும் இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

எதிர்காலத்தில் நாம் பெண்நிலை நின்று ஆசிரியத்துவம் பற்றிய சிந்தனையிலும் ஆய்வுகளிலும் ஈடுபடுவது இன்றைய காலத்தேவையாகின்றது.

தெ.மதுசூதனன்






**சபா.ஜெயராசா,**
முன்னாள் பேராசிரியர்,
கல்வியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.


**கல்வியும் பால்நிலைச் சமத்துவமும்**

*பிரஞ்சுப் புரட்சி, அமெரிக்கப்புரட்சி, ஆகியனவும் சுரண்டலையும் பறிப்பையும் முறியடிப்பதற்கான மார்க்சிய சிந்தனைகளும் பெண்களின் சிந்தனைகளிலே கோட்பாட்டு நிலையிலும், வினைப்படுநிலையிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின.*

# அறிவின் தெறிப்பும் - பெண்களும் - வினைப்படும இயக்கங்களும்

ஐரோப்பாவில் நிகழ்ந்த பொருண்மிய நிகழ்ச்சிகளும், சமூகமாற்றங்களும், கல்விநிலைப்பட்ட செயற்பாடுகளின் எழுச்சிகளும் "பெண்கள் இயக்கங்கள்" (Women's Movements) என்ற விசை கொண்ட வினைப்பாடுகளைத் தோற்றுவித்தன. 1777ஆம் ஆண்டில் அபிகெயில் அடம்ஸ் என்பார் அரசியல் வாதியாகிய தமது கணவனுக்கு எழுதிய கடிதத்தில், ஆண்களுக்குரிய மட்டுப்பாடில்லா அதிகாரம் பற்றிக் குறிப்பிட்டார். அத்துடன் பெண்களுக்குரிய கவனமும் நீதியும் கிடைக்கப் பெறாவிடில், தமது குரல்களுக்கு இடம் கிடைக்கப் பெறாததும், தமக்குப்பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெறாததுமான சட்டங்களுக்கு எதிராகப் புரட்சி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பிரஞ்சுப் புரட்சி, அமெரிக்கப்புரட்சி, ஆகியனவும் சுரண்டலையும் பறிப்பையும் முறியடிப்பதற்கான மார்க்சிய சிந்தனைகளும் பெண்களின் சிந்தனைகளிலே கோட்பாட்டு நிலையிலும், வினைப்படுநிலையிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின. பிரெஞ்சுப் புரட்சியால் முன்னெடுக்கப்பட்ட மனித உரிமைப் பிரகடனம் பெண்ணியம் பற்றிய முன்னோடி நூலை 1792ஆம் ஆண்டில் மேரிவூல்ஸ்ரோன் கிறாப்பற் எழுதுவதற்கு விசை கொடுத்தது. அமெரிக்க விடுதலைப் பிரகடனம் கிறாப்ற் எழுதுவதற்கு விசை கொடுத்தது. மேலும் அமெரிக்க விடுதலைப் பிரகடனம் 1848 ஆம் ஆண்டிலே முதலாவது பெண்ணிய மாநாட்டு அறிக்கையை வெளியிடுவதற்கு எழுவிசையாய் அமைந்தது.

ஐரோப்பாவில் நிகழ்ந்த தொழிற்புரட்சியும் முதலாளித்துவத்தின் எழுச்சியும் பெண்கள் மற்றும் சிறாரின் உழைப்பைத் தீவிரமான பறிப்புக்கு உள்ளாக்கியது. அதற்கு முன்னர் குடும்பநிலையிலே பாதிப்புக்கும் பறிப்புக்கும் உட்பட்ட பெண்கள் தொழிற்சாலை மட்டங்களிலும் குடும்பநிலையிலும் பறிப்புக்கு உட்படுத்தப்பட்டார்கள். தொழில் புரியும் தொழிற்சாலைகளிலே ஓய்வு உறக்கமின்றிப் பெண்கள் பறிப்புக்கு உட்படுத்தப்பட்ட சம்பங்கள் பல பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது கைத் தொழிற்புரட்சிக்கு குடும்ப நிலை, தொழிற்சாலைநிலை என்ற "இருநிலைப்பறிப்புக்கு" (Dualexplotation) பெண்களை இட்டுச் சென்றது. இதை வேறு விதமாகக் கூறுவதானால் இரண்டு தனியுரிமைகளின் தாக்கத்துக்குப் பெண்கள் உட்படுத்தப்பட்டனர். குடும்பத்திலே ஆணின் தனியுரிமையும்,

தொழிற்சாலையிலே முதலாளியின் தனியுரிமையும் என்ற இருதனியுரிமைகள் பெண்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்தன.

தொழிற்சாலைகளிலே வேலைக்குச் செல்லாத மத்திய தர வகுப்பினரான பெண்கள் பிறிதொருவகையான பறிப்புக்கும் சுரண்டலுக்கும் உட்படுத்தப்படும் நிலைக்குத்தள்ளப்பட்டனர். நிலமானிய சமூக அமைப்பின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் அவர்களால் வழங்கப்பட்ட உழைப்பு பணப்பெறுமதியற்ற" கட்டாய உழைப்பாக நீடித்தது. தமது கணவனின் நம்பிக்கை நல்லெண்ணத்திலே (Goodwill) தான் பெண்களின் வாழ்க்கை தொடர்ந்தது. நம்பிக்கை நல்லெண்ணத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி அவர்களைப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியது. 1867 ஆம் ஆண்டிலே பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படல் வேண்டுமென ஜோன்ஸ்ரு வேட்மில் பிரித்தானிய நாடாளுமன்றத்திலே சமர்ப்பித்த மசோதா நிறைவேற்றப்படாமை உயர் மற்றும் மத்தியதர வகுப்பைச் சேர்ந்த ஆண்களின் பெண்கள் தொடர்பான புலக்காட்சியைப் புலப்படுத்தியது.

பெண்கல்வி விரிவாக்கம் வாண்மை நிலைத் தொழில்களிலே பெண்களின் உள்நுழைதல் அதிகரிப்பு, உயர் கல்வி வாயிலாக மார்க்சியம் உள்ளிட்ட விடுதலைக் கோட்பாடுகளை அறியும் வாய்ப்புக்கள் முதலியவை விடுதலை நோக்கிய பெண்கள் வினைப்பாடுகளுக்கு விசையூட்டின. மத்தியதர வர்க்கப் பெண்களின் பொதுவான விடுதலை நோக்கு கோட்பாட்டு நிலையில் "மென் வினைப்பாடுகளாக" (Soft Actions) அமைந்த வேளை, தொழிற்சாலைகளிலே பணிபுரிந்த புதிய தொழிலாளிகளாகிய பெண்களின் விடுதலை வினைப்பாடுகள் தீவிரத்தன்மை கொண்டவையாய் அமைந்தன.

அமெரிக்காவிலே தோற்றம் பெற்ற "அடிமை எதிர்ப்பு இயக்கம்" (Abolitionist) பெண்கள் விடுதலை இயக்கத்துக்கு ஒருவகையிலே தூண்டுதலளித்தது. ஆயினும் அடிமை எதிர்ப்பு இயக்கத்திலே நேரடியாகப் பங்குபற்றுவதற்குப் பெண்களுக்கு ஆரம்பகாலங்களில் வாய்புத்தரப்படவில்லை. 1840 ஆண்டில் நிகழ்ந்த உலக அடிமை எதிர்ப்பு மாநாட்டிலே திரைமறைவாக இருந்து பார்வையிடுவதற்குமட்டும் பெண்களுக்கு வாய்ப்புத்தரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா மற்றும் ஐ.அமெரிக்க நாடுகளிலே காணப்பட்ட நிலை பிரான்சிலும் காணப்பட்டது. பிரான்சியப் புரட்சியிலே பெண்கள் முக்கிய பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. 1879ஆம் ஆண்டிலே பிரெஞ்சு சோசலிச காங்கிரஸ் பெண்களுக்குரிய முழுமையான சமூக மற்றும் அரசியல் உரிமைகளை வலியுறுத்தியது. ஆனாலும் பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கும் விடயத்திலே பிரெஞ்சு சோவிஸ்டுகள் தயக்கம் காட்டினர். பெண்களுக்கு வாக்குரிமை தரப்பட்டால் அவர்கள் ரோமன் கல்தோலிக்க திருச்சபையின் பணிப்புரையை அடியொற்றியே தமது வாக்கை அளிப்பார்கள் என பிரெஞ்சு சோசலிஸ்டுகள் நம்பினார்கள்.

ஐரோப்பாவிலே படித்த பெண்களிடத்துத் தோற்றம் பெற்ற முதலாவது இயக்கம் வாக்குரிமையை இயக்கமாகும். பெரும்பாலும் மத்தியதரவர்க்கத்துப் படித்த பெண்களே இவ்வியகத்திலே தீவிரபங்கு கொண்டனர். அவர்களில் ஒரு சாரார் தீவிரத்தன்மை கொண்டவர்களாகவும் இன்னொரு சாரார் மென் போக்காளர்களாகவும் காணப்பட்டார்கள்.

பெண்கள் தமது விடுதலையின் பொருட்டு வாக்குரிமையை நம்பியதிலே பல நேர்ப்பரிமாணங்களும் காணப்படுகின்றன. எதிர்ப் பரிமாணங்களும் காணப்படுகின்றன. 1928 ஆம் ஆண்டைத் தொடர்ந்து நாடாளுமன்ற வாக்குரிமை வழியாக அவர்கள் சமவாய்ப்புக் கல்வி விரிவாக்கம், மகப்பேற்று விடுமுறை, சமூக நலப் பாதுகாப்புகள், புதிய சட்டவாக்கங்கள் முதலியவற்றைப் பெற்றுக் கொண்டமை நேர்ப்பரிமாணங்களாகின்றன. ஆனால் அவற்றால் மட்டும் பெண்கள் பல நிலைகளிலே பறிப்புக்கு உள்ளாக்கப்படுதல் தடுக்கப்படவுமில்லை தவிர்க்கப்படவுமில்லை என்பது அதன் எதிர்ப்பரிமாணம். தனிச்சொத்துரிமையின் வாய்ப்புக்களும் செல்வக்குவிப்பும் ஆண்களிடத்தே பொதிந்திருத்தலை நாடாளுமன்றத்தாற் கட்டுப்படுத்தவோ மாற்றியமைக்கவோ முடியாதிருத்தல் அதன் எதிர்ப்பரிமாணம்.

> பெண்கல்வி விரிவாக்கம் வாண்மை நிலைத் தொழில்களிலே பெண்களின் உள்நுழைதல் அதிகரிப்பு, உயர் கல்வி வாயிலாக மார்க்சியம் உள்ளிட்ட விடுதலைக் கோட்பாடுகளை அறியும் வாய்ப்புக்கள் முதலியவை விடுதலை நோக்கிய பெண்கள் வினைப்பாடுகளுக்கு விசையூட்டின.

கல்விநிலையைப் பொறுத்தவரை 1920 ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் பெண்களுக்குப் பட்டம் வழஙகும் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தது. அதன் தொடர்ச்சியாகவே புதிய அறிவு வீச்சுக்கு உட்பட்ட பட்டதாரிகளாகிய பெண்கள் பிரித்தானியாவிலே விடுதலை வினைப்பாடுகள் பலவற்றை முன்னெடுத்தனர். அவற்றின் தாக்கங்கள் ஆசிய நாடுகளிலும் எதிரொலித்தன. கல்வி விரிவாக்கமும், அரசியல் மயப்பாடும் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பெண்கள் தொடர்பான அறிகை நிலைக்கருத்துவினைப்பாடுகள் எழுச்சி கொள்ளலைத் தூண்டின. அறிவுவளர்ச்சி பெண்கள் தொடர்பான நடப்பியல் நிலவரங்களுக்கு வெளிச்சம் கொடுத்தது.

1. கல்வி சார்ந்த நிலையிலோ கல்வி சாரா நிலையிலோ சம வேலைக்கு ஆண்களுக்குரிய வேதனம் பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்ற முன்மொழிவு.

2. உலக வருமான உற்பத்தியில் பத்து சதவீதத்துக்கு மேல் பெண்களால் ஈட்டித்தரப்படுகின்றது. ஆனால் ஒரு சதவீத சொத்துரிமை மட்டுமே பெண்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளமை வெளிக்காட்டப்பட்டது.

3. கைத்தொழில் சார்ந்த நாடுகளிலும், சாரா நாடுகளிலும் பெண்களே ஆண்களைக் காட்டிலும் கூடுதலான நேரம் வேலை செய்தல் சுட்டிக்காட்டப்பட்டது.

4. அனைத்து நாடுகளினதும் ஆட்சிமன்றுகளில் பெண்கள் மிகக் குறைந்த விழுக்காட்டுப் பிரதிநிதித்துவமே பெற்றுள்ளமை வெளியிடப்பட்டது.

5. அனைத்து நாடுகளிலும் உள்ள உயர்பதவிகளிலும், பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவிகளிலும் பெண்கள் மிகக் குறைந்த விழுக்காட்டினராகவே காணப்படுதல் எடுத்துரைக்கப்பட்டது.

6. முழுநேர வேலைக்குக் கூடுதலாக ஆண்களும் மிகுந்த சுரண்டல் காணப்படும் பகுதி நேர வேலைகளுக்கும் தற்காலிகமான வேலைகளுக்கும் பெண்களே கூடுதலாக அமர்த்தப்படும் அநீதி வெளிக்கொண்டுவரப்பட்டது.

7. வீட்டு வேலைகள் உத்தியோக வேலைகள் என்ற இருதளங்களிலே பெண்கள் தொழிற்படும் பொழுது உத்தியோக வேலை என்ற ஒரு தளத்தில் மட்டுமே ஆண்கள்தொழிற்படுவதனால், ஆண்களின் உத்தியோக வேலைத்திறன் பெண்களைக் காட்டிலும் மேலோங்கியுள்ள நிலையிலே தொழில் கொள்வோரிடத்து ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கும் போக்கு அதிகரித்துக் காணப்படுதல் வெளிக்காட்டப்பட்டது.

8. வேலை நிலையங்களில் பெண்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படும் நிலை தொடர்ந்து கொண்டிருத்தல் ஆதாரங்களுடன் சுட்டிகாட்டப்பட்டது.

9. இனமோதல்கள் இடம் பெறும் நாடுகளிலும், இனமேலாதிக்கம் ஓங்கிய நாடுகளிலும், பெண்களே அதிக தாக்கத்துக்கு உள்ளாக்கப்படுதல் தக்க சான்றுகளுடன் வெளியிடப்பட்டது.

மேற்கூறிய எழுபொருட்கள் (Issues) அல்லது பிரச்சினை முற்கவிப்புக்கள் தொடர்பாக மத்திய தரவகுப்பும் பெண்களது அறிகை முறைமையிலே முரண்பாடான நிலை காணப்படுகின்றது. ஒரு சாரார் தமக்கும் மேற்கூறிய பிரச்சினைகளுக்கும் சம்பந்தமுமில்லை தொடர்புகளும் இல்லையென எண்ணி ஒதுங்கிக் கொள்கின்றனர். சிலர் தாம் பெற்ற கல்வி அறிவின் காரணமாக அறிகைநிலையில் அப்பிரச்சினைகளை நோக்குகின்றனரேயன்றி வினைப்பாடுகளோடு இணைந்து கொள்ளவில்லை. மத்தியதர வகுப்பினரின் இன்னொருசாராரே, வினைப்பாட்டாளராய் (Activists) எழுச்சி கொண்டுள்ளனர். அவர்களால் தொழிலாளி வர்க்கப் பெண்களுக்கும் குடும்பப் பெண்களுக்குமான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இரண்டு விதமான வளர்ச்சிகள் இடம் பெறத் தொடங்கியுள்ளன.

தொழிலாளி வர்க்கப் பெண்களின் இயக்கங்கள் வர்க்க சார்புடன் இயங்கும் நிலை தோற்றம் பெற்றுள்ளது. பெண்கள் இயக்கம் வர்க்க இயக்கம் ஆகிய இரண்டையும் இணைத்துச் செயற்படுத்தும் வளர்ச்சி இந்தியாவின் வங்காளத்திற் காணப்படுகின்றது.

மத்தியதரவர்க்கத்துப் பெண்கள் இயக்க வினைப்பாட்டாளர்களுள் ஒரு சாரார் வர்க்கப் போராட்டத்தையும் பெண்கள் இயக்கத்தையும் வேறுபடுத்தி நோக்குகின்றனர். இவ்வாறாகக் கருத்தியல் நிலையிலே பெண் இயக்கங்கள் பன்மை நிலையைக் கொண்டுள்ளன. கருத்தியல் (Ideology) என்பது வினைப்பாட்டு முனைப்புடன் இணைந்த வடிவமாக இருப்பதனால் கருத்தியல் பற்றிய தெளிவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் கல்வி நடவடிக்கைகள் மேலெழத் தொடங்கியுள்ளன. அதேவேளை கருத்தியலின் பரிமாணங்களாகப் பின்வருவன சுட்டிக்காட்டப்படுகின்றன.

1. பெண்களின் அனுபவங்களையும் புறவுலக இயல்பையும் கருத்திலே கொள்ளல்.

2. அரசியல் மற்றும் சமூகவியல் சார்ந்த நிலைகளிலே செயற்படுத்தப்படக் கூடியதும் அருவநிலையாகச் சிந்திக்கக் கூடியதுமான நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கிக் கொள்ளல்.

3. வினைப்படுதலையும் போராடும் இயல்புகளையும் உருவாக்கிக் கொள்ளலும் நெறிப்படுத்திக் கொள்ளலும்.

4. கடப்பாடு (Commitment) கொண்ட இயல்புகளை உட்பொதிந்திருத்தல்

5. சமூக மற்றும் அரசியல் நிலைகளிலே தருக்க உறுதிப்பாட்டைக் கொண்டிருத்தல்.

காலங்காலமாக நிகழ்ந்து வந்த பெண்கள் மீதான அழுத்தங்களினிடையே "பழகிப் போனவர்களாக" பெண்கள் மாற்றப்பட்ட நிலையில் அவர்களின் மீட்புக்கு மரபுகளிலிருந்து "மாறுபட்ட" (Alternative) கல்வி முறைமையின் முக்கியத்துவம் பற்றிய சிந்தனைகளே எழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளன.

சிறப்புப் பார்வை:

# பாலியல் வன்முறை எனும் தொற்றுநோய்

அறிமுகம்

நமக்கு 'போரும் வாழ்வும்' ஒன்றும் புதிதல்ல. ஆனால் பாரதூரமான சமூக பொருளாதார அரசியல் மற்று பண்பாட்டு மாற்றங்களை சமூகம் எதிர் கொண்டு வருகின்றது. இந்த நிலையில் நமது சமூகத்தில் 'பெண்களின் நிலை' எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என ஆராய வேண்டிய தேவையும் நமக்கு உள்ளது. இதைவிட சமூகத் தளங்களில் மற்றும் சமூக நிறுவனங்களில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பன்முகப்பட்டவை.

குறிப்பாக கல்வித்துறையில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் சமூகப் பரிமாணம் இன்னும் முழுமையாக ஆராயப்படாமலேயே உள்ளன. இந்த ரீதியில் தான் எமது சமகால விடயங்களை ஆராயவும் உரையாடவும் நாம் தயாராகி வருகின்றோம். இதற்குத் துணை செய்யும் வகையில் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றை முன்வைத்துள்ளோம். இது வெறும் கதையல்ல. மாறாக நம்மிடையே தினமும் ஆங்காங்கு அரங்கேறிக் கொண்டிருக்கும் ஆண் திமிர்த்தனத்தின் அடாவடித்தனங்கள் சொல்லிமாளா. இதற்கு கல்வி நிறுவனமும் விதிவிலக்கல்ல. சரஸ்வதிக்கு நேர்ந்த கொடுமை பாலியல் வன்முறை சமூகத் தொற்று நோயாக படர்ந்து வருகின்றது. இலங்கையும் இதற்கு உட்பட்டது தான். எமது கல்வி நிறுவனங்களில் இந்தளவு மோசமாக இல்லாவிட்டாலும் பெண்கள் மீதான தொந்தரவுகளும் வன்முறைகளும் இம்சைகளும் தொடரத்தான் செய்கின்றன. இதற்கு எமது ஆசிரியர்களும் விதிவிலக்கல்ல. எமக்கு கிடைக்கும் பல செய்திகள் நிகழ்வுகள் குறித்து நாம் கண்டதுண்டு சொன்னதில்ல, கேட்டதுண்டு கண்டதில்லை.

இன்று எமக்கு திணிக்கப்படும் போரியல் வாழ்வின் பின்னாலும் பெண்கள் மீது இழைக்கப்பட்டுள்ள கொடுமைகள் மற்றும் போர்ச் சுமைகள் இன்னும் சொல்லப்படாதவை. அந்த வலியின் அழுத்தத்தின் சூழல் எம்மீது படந்து கொண்டு தான் உள்ளன. ஆனால் அவை பேசப்படாமலேயே இருக்கும். இத்தருணம் நமக்கான தெரிவு அதுவாகவே இருந்தாலும் தவிர்க்க முடியாது.

பால்நிலை தொடர்பான கல்வி சமூக இருப்புடன் இணைந்து காணப்படுகின்றது. சமூக இருப்பு பொருளாதார முறைமையுடன் நேரடித் தொடர்பு கொண்டது. அத்துடன் கல்வி முறைமையுடனும் நேரடித் தொடர்பு கொண்டது. இது வாழ்வியல் சார்ந்த தெரிவுகளிலும் இருப்புகளிலும் பெரும் மாற்றங்களை உருவாக்கி வருகின்றன. பெண்களின் வாழ்க்கை ஆண்கள் மயப்பட்ட பொது வாழ்க்கையாக மாற்றமுறுகின்றது.

இன்று பின்னோக்கிப் பார்க்கும் பொழுது கல்வி வாயிலாக பெண்கள் ஈட்டும் தொழில்களை நோக்கினால் ஆண்களோடு ஒப்பிடும் பொழுது நிலைக்குத்து நிலையிலும், குறுக்கு நிலையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதாவது நிலைகுத்து நிலையில் கூடிய சம்பளம் மட்டும் பெறும் தொழில்களில் ஆண்களே அதிகமாக இடம் பெற்றுள்ளனர். கிடை நிலையில் பார்க்கும் பொழுது ஆசிரியர், தாதியர் போன்ற தொழில்களில் பெண்களின் எண்ணிக்கையே கூடுதலாகக் காணப்படுகின்றது. அதிக பொறுமையுடனும் குறைந்த ஊதியத்துடனும் மேற்கொள்ளப்படும் பல தொழில்களை பெண்களே மேற்கொண்டு வருகின்றனர். எடுத்துக் காட்டாக பாலர் கல்வி ஆசிரியத் தொழில் இலங்கையில் முற்றிலும் பெண்களுக்குரியதாக ஒதுக்கப்பட்டு விட்டது. இன்னொருபுறம் இது பாரம்பரியமான குடும்ப வகிபங்குடன் இணைந்திருந்தலாகவும் அமைந்துள்ளது.

சமகாலக் கல்வியுலகம் 'பால்நிலையும் கல்வியும்' தொடர்பான பன்முக ஆழந்த ஆய்வுகளை வேண்டி நின்கின்றது. இதற்கான அருட்டுணர்வை விழிப்புணர்வை உரையாடலை ஏற்படுத்தவே "பாலியல் வன்முறை ஏனும் தொற்றுநோய்" கட்டுரை இடம் பெறுகின்றது.

குஜராத் சம்பவம் எல்லோருக்குமான பொதுவான வெளியை முன்வைக்கின்றது. அதாவது பெண்நிலை நின்று சிந்திக்கும் மாற்றங்களை உருவாக்கும் முயற்சிகளுக்கு எம்மைத் தயார்ப்படுத்துகின்றது. இதனையே நாம் வேண்டி நிற்கிறோம்.

அறிமுகமும் தேர்வும்:
-மூர்-

# பாலியல் வன்முறை எனும் தொற்றுநோய்

அ.முத்துக்கிருஷ்ணன்

சிறப்புப் பார்வை

குஜராத் மாநிலத்தில்
நடைபெற்ற சம்பவம்
ஒன்றை முன்வைத்துள்ளோம்.
இது வெறும் கதையல்ல.
மாறாக நம்மிடையே
தினமும் ஆங்காங்கு
அரங்கேறிக்
கொண்டிருக்கும்
ஆண்திமிர்த்தனத்தின்
அடாவடித்தனங்கள்



சபர்மதி ரயில் எரிப்பைத் தொடர்ந்து நரேந்திர மோடியின் ஆசியுடன் களமிறங்கிய சங்பரிவாரங்கள் 2000 முஸ்லிம்களைப் படுகொலை செய்தனர். இந்த இனப்படுகொலை உலகையே உலுக்கியது. 150 000 பேர் வீடுகளை இழந்தனர். சிசுக்கள் கொலை பெண்கள் மீது பாலியல் வன்புணர்வு என ஆர்.எஸ்.எஸ். இன் குறிக்கோள்கள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படுகின்றன. பில்கிஸ் பானுவை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி அவரது 3 வயது மகளை தெருவுக்கு இழுத்து வந்து தரையில் அடித்துக் கொன்றார்கள். அதைத் தொடர்ந்து பில்கிஸின் குடும்பத்தார் 14 பேர் கொல்லப்பட்டனர். கொலை செய்யப்பட்ட பில்கிஸின் உறவினர்கள் அனைவரையும் குஜராத் காவல் துறையினர் மூட்டை மூட்டையாக உப்பை கொட்டிப் புதைத்தது பின்னர் தெரிய வந்தது. அங்கு புதைக்கப்பட்ட எந்த பிணத்திற்கும் தலை இல்லதிருந்தது.

பிணங்களைத் தோண்டி எடுத்து தடயவியல் ஆய்வுகள் நடத்தப்பட்ட நீண்ட நெடிய விசாரணைகளுக்குப் பிறகு 2008 பிப்ரவரியில் தீர்ப்பு வெளிவந்தது. காவல் துறையினர் 6 பேர் மற்றும் குற்றவாளிகள் 14 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த வழக்கை குஜராத் நீதிமன்றத்தில் விசாரித்தால் தீர்ப்பு என்னவாக இருந்திருக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. பில்கிஸ் பானுவின் மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் 2004 ஆகஸ்டில் இவ்வழக்கை விசாரிக்கும்படி சி.பி.அய்.க்கு உத்தரவிட்டது.

குஜராத் மாநிலம் எவ்வாறு மனநோய் அகமாக உருமாறியுள்ளது என்பதனை தொடர் நிகழ்வுகள் நமக்கு உணர்த்திக் கொண்டே வருகின்றன. மதவெறியர்களின் செயல்களுக்கு உறுதுணையாக இருக்கும் அரசு ஆயுதங்கள் கொடுத்துதவும் காவல் துறை வழக்குகளை சுக்கு நூறாய் பிரித்தெரியும் நீதிமன்றங்கள். இவைதான் 21ஆம் நூற்றாண்டில் உள்ள குஜராத்தின் சித்திரம். தொடர்ந்து குஜராத் அரசு மூடி மறைக்க முயலும் ஒரு புதிய கதைக்குள் இனி நாம் செல்லலாம். குஜராத்தின் சற்றும் முன்னேற்றம் காணாத கிராமப்புறத்தில் வசிக்கும் தலித் பெண் சரஸ்வதியின் கதை இது.

குடும்பம் : மேகசானா மாவட்டத்தின் விச்நகர் வட்டத்தில் உள்ள சேதல்வசானா கிராமத்தில் வசிக்கும் சரஸ்வதியின்

தந்தை ஒரு தினக்கூலி. சரஸ்வதியுடன் பிறந்தவர்கள் அய்வர். பத்தாம் வகுப்பில் 89 மதிப்பெண் மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் 70மதிப்பெண் பெற்றார் சரஸ்வதி. தங்கள் மகள் எந்த சிறப்புப் பயிற்சியும் இல்லாமல் கல்வியில் சிறந்து விளங்குவதை உணர்ந்த பெற்றோர் கல்விக்கு செலவாகும் பணத்தைத் திரட்ட முடியாததால் தங்கள் மகளின் கல்வியை பாதியில் நிறுத்தினர். மருத்துவப் படிப்பை லட்சியமாகக் கொண்ட சரஸ்வதியால் குடும்பச் சூழல் காரணமாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தான் சேர முடிந்தது. சூலை 24 2007 அன்று அவர் பத்தான் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தார்.

பத்தான் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்கள் : பேரா. மகேந்திர பிரஜாபதி எம்.எஸ்.சி. பி.எட்.; பேரா. அதூல் பட்டேல் எம்.எஸ்.சி. எம்.பில். பிஎச்.டி.; பேரா. சுரேஷ் பட்டேல் எம்.ஏ. பி.எட். (சமூகவியல்); பேரா. கிரண் பட்டேல் எம்.எஸ்சி. பி.எட். பி.எச்டி. (கணிதம்); பேரா. அஸ்வின் பர்மர் எம்.ஏ. பி.எட். எல்.எல்.பி.; பேரா. மணிஷ் பர்மர் ஓவியத்தில் பட்டதாரி ஓவிய ஆசிரியர்; பேரா. பாரதி பட்டேல் 1997இல் விரிவுரையாளராக பத்தான் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பணியில் சேர்ந்த இவர் 2001இல் பணிமாற்றம் செய்யப்பட்டார். வழக்கு தொடுத்து மீண்டும் பத்தான் பள்ளிக்கு வந்தார்; ஜசோதா சோசி: பெண்கள் விடுதியில் உள்ள காப்பாளர்.

திட்டங்கள் : பேடி பச்சாவோ (மகளை காப்பாற்று) கன்யா கேள்வாணி (பெண் குழந்தை கல்வி) என்கிற பெண் குழந்தைகளை மேம்படுத்தும் சிறப்புத் திட்டங்கள் முதல் மலம் அள்ளி மோட்சம் பெறும் திட்டம் வரை அனைத்தும் நரேந்திர மோடியின் ஆட்சியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வரலாற்று சாதனைகளே.

கொடுமை : பத்தான் கல்லூரியில் இருக்கை கிடைத்ததும் சரஸ்வதியின் தந்தை அந்தக் கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர் பலூச் அவர்களை பொருளாதார உதவிக்காக நாடினார். அவருடன் அவரது சக பேராசிரியர்களின் கூட்டுதவியுடன் பணத்தை திரட்டிக் கொடுத்தார்.

செப்டம்பர் 11 2007 அன்று பேராசிரியர் அஸ்வின பர்மர் சரஸ்வதியை கல்வி தொழில்நுட்ப அறைக்கு வரச் சொன்னார். சரஸ்வதி அந்த அறைக்குச் சென்ற பொழுது அங்கு உள்ளே ஏற்கனவே மனிஷ் பர்மர் மற்றும் மகேந்திர பிரஜாபதி இருந்தனர். சரஸ்வதி உள்ளே நுழைந்ததும் அஸ்வின் பர்மர் கதவை பூட்டினார். சரஸ்வதியின் ஆடைகளை களைந்து நிர்வாணப்படுத்தி அவரை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் அஸ்வின். அதன் பின்னர் மற்ற இருவரும் அவரை வல்லுறவுக்கு ஆட்படுத்தினர். மூவரும் அவர்களது கைபேசி புகைப்படக் கருவியில் சரஸ்வதியின் நிர்வாணத்தை பல கோணங்களில் புகைப்படம் எடுத்தனர். மூவரும் அவரை கடுமையாக



மிரட்டினார்கள். ஒரு வார்த்தை வெளியே பேசினால் கூட புகைப்படங்கள் வெளி வந்துவிடும் கல்வியை தொடர இயலாது என்பது தான் அந்த மிரட்டலின் உட்பொருள்.

இந்த சம்பவம் நடந்து 15 நாட்கள் கழித்து மீண்டும் பரிசோதனை கூடத்திற்கு அழைக்கப்படுகிறார் சரஸ்வதி. இந்த முறை அங்கு பேராசிரியர்கள் மனிஷ்பர்மர் கிரண் பட்டேல் மற்றும் சுரேஷ் பட்டேல் காத்திருக்கிறார்கள். பாலியல் வன்புணர்வு தொடர்கிறது. அடுத்து டிசம்பர் 31 2007 முதல் சனவரி 11 2008 வரை மாணவிகள் அனைவரையும் கும்பவா கிராமத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்குள்ள பள்ளியில் நேரடியாக கல்விச் சூழல் பரிசோதனைகள் செய்வது என்பது படிப்பின் ஒரு பகுதி. அங்கு நள்ளிரவில் பல பேராசிரியர்கள் தங்கள் விருப்பம் போல் பாலியல் இச்சையை எண்ணற்ற முறை நிறைவு செய்கிறார்கள்.

ஒரு மாதம் கழித்து சனவரி 25 2008 அன்று மொத்த பேராசிரியர் கூட்டத்தின் தலைவராகத் திகழும் பேராசிரியர் அதூல் பட்டேல் கல்லூரியின் கணினி அறையில் சரஸ்வதியுடன் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டு வெளியே இது பற்றி பேசினால் கொன்று விடுவதாக மிரட்டினார். ஏற்கனவே இந்த நிகழ்வுகள் நடந்த பின்னணியில் இந்த பேராசிரியர்கள் சரஸ்வதியை பேய் ஓட்டுபவரிடம் அழைத்துச் சென்று இந்தப் பெண்ணின் உடலில் தீய ஆவி உள்ளது என்று கூறினர். இது அந்த பெண்ணைப் பற்றிய ஒரு குழப்பமான சித்திரத்தை உருவாக்கவே புனையப்பட்டது.

சூழ்நிலையின் அழுத்தம் தாளாமல் சனவரி 30 அன்று இந்த கூட்டு பாலியல் வன்புணர்வு நிகழ்வுகளைப் பற்றி தனது சக மாணவிகளிடம் கதறினார். அடுத்த நாள் சனவரி 31 அன்று கல்லூரி பிரார்த்தனையின் பொழுது மயங்கி விழுந்தார். உடனே அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு பாலியல் வன்புணர்வுக்கு சரஸ்வதி

உட்படுத்தப்பட்டதை மருத்துவர் உறுதிப்படுத்தினார். அடுத்து சரஸ்வதி கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டார். சில பேராசிரியர்களைப் பார்த்த மாத்திரத்தில் பல முறை மயங்கி விழுந்தார். உடனே பேராசிரியை பாரதி படேலின் தலைமையில் 97 மாணவிகள் கோரிக்கை மனு ஒன்றை தயாரித்து சனவரி 31 அன்று முதல்வரிடம் அளித்தனர்.

பிப்ரவரி 1 அன்று முதல்வர் தனது உயர் அதிகார அலுவலகத்துக்குச் சென்று சம்பவம் பற்றி தெரிவித்து மனுவை அளித்துள்ளார். பிப்ரவரி 5க்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளின் மீது நம்பிக்கை அற்றுப் போன நிலையில் பாரதி பட்டேல் மற்றும் மாணவிகள் உடனே தங்கள் பெற்றோருக்கு தகவல் கொடுக்க முடிவெடுத்தனர். பிப்ரவரி 4 அன்று மாணவிகளுடன் ஒரு பெரும் படையே வந்து குற்றம் சாட்டப்பட்ட பேராசிரியர்களை அடித்து உதைத்தது. உடனே நொடிப் பொழுதில் காவல் துறை சம்பவ இடத்திற்கு வந்தது. வந்திருக்காவிட்டால் அந்த பேராசிரியர்களின் தோல் உரிக்கப்பட்டிருக்கும். பிப்ரவரி 5 அன்று 25 000 பேர் பங்கேற்ற கண்டனப் பேரணி முழக்கங்கள் ஊரை நிலை குலையச் செய்தன. கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அதன் பிறகு தான் அரசின் துரித கவனம் கிடைத்தது. பேராசிரியர்களின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன. உடனே குஜராத் ஊடகங்களின் விவாதப் பொருளாக இந்த சம்பவம் மய்யம் கொண்டது. இருப்பினும் அரசு மருத்துவர்கள் சரஸ்வதியை மோசமாகவே நடத்தினர். தேசிய பெண்கள் ஆணையத்தின் குழு உடனே பத்தான் சென்று தனது விசாரணையை தொடங்கியது. பல பரிந்துரைகளை அந்தக் குழு அளித்தது. பெண்கள் கல்லூரியில் பெண் பேராசிரியர்களை மட்டுமே நியமிப்பது எனப் பல கோரிக்கைகள் அளிக்கப்பட்டன.

பிப்ரவரி 4 அன்று சம்பந்தப்பட்ட 6 பேராசிரியர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் விந்து பரிசோதனை மற்றும் சம்பவ இடங்களில் கிடைத்த தடயங்கள் என ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டன. பிப்ரவரி 7 அன்று சரஸ்வதியின் வாக்குமூலத்தை மாவட்ட மாஜிஸ்திரேட் பதிவு செய்தார். பிப்ரவரி 7 அன்று மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து நரேந்திர மோடியை சந்திக்க ஊர்வலமாக காந்திநகர் சென்றனர். ஆனால் நரேந்திர மோடியும் கல்வி அமைச்சர் ராமாலால் வோராவும் இவர்களை சந்திக்க மறுத்து விட்டனர். 2000 முதலே இந்த கல்லூரி குறித்த பல்வேறு புகார்கள் எழுந்தும் எந்த நடவடிக்கையையும் கல்வித் துறை எடுக்கவில்லை.

கல்வி ஆண்டு தொடங்கியதும் அனுமதிக்கப்பட்ட பெண்கள் அனைவரையும் தங்கள் கைபேசி புகைப்படக் கருவியில் புகைப்படம் எடுத்து அதனை அலவலக கணினிக்கு மாற்றி விடுவார்கள் பேராசிரியர்கள். பிறகென்ன கல்வி கற்பித்தல் தொடங்குகிறதோ இல்லையோ பேராசியர்களின் பாலியல் ஆண்டு தொடங்கிவிடும். இந்த கல்லூரியில் மாணவர்களின் மதிப்பெண்களில் 40-44 வரை அதாவது 200-250 மதிப்பெண்கள் வரை வழங்கும் அதிகாரத்தை அந்த கல்லூரியின் பேராசிரியர்களுக்கு வழங்கியுள்ளது கல்வி முறை. இந்த அதிகாரத்தின் அடிப்படையில் தான் பெண்களின் மீதான பாலியல் வன்முறை தொடங்குகிறது. குஜராத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் முதுகலை மாணவர்கள் ஆய்வு செய்யும் மாணவிகள் என இவர்களும் இந்த பாலியல் சித்தரவதைகளுக்கு தப்பவில்லை என்பதனை பல அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மாணவிகள் பெற்றோரின் தொடர் போராட்டத்தால் புதிய முதல்வராக ஜமுனா தரல் பதவியேற்றார். ஜமுனா பதவியேற்ற மறுகணமே பா.ஜ.க. அடியாட்களுடன் இணைந்து மாணவிகள் அனைவரையும் அவர் மிரட்டியுள்ளார். ஜமுனாவை மாற்றக்கோரி போராட்டம் தொடர்ந்தது. பிப்ரவரி 25 அன்று கல்வி அமைச்சர் ராமாலால் வோரா 15 பேர் கொண்ட குழுவை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். பிப்ரவரி 26 அன்று பெற்றோர் சங்கத் தலைவர் கேமார் சவுத்ரியின் தலைமையில் சரஸ்வதியின் தந்தை உட்பட குழு காந்தி நகருக்குப் பயணமானது. டிசம்பர் கூட்டத்தொடர் அடுத்த நாள் தொடங்க இருந்ததால் அரசு நிறையவே பதட்டத்துடன் காணப்பட்டது. பல அமைச்சர்கள் சூழ்ந்து 15 பேர் கொண்ட குழுவை மிரட்டினர். பாதிக்கப்பட்ட பெண் தலித் என்பதால் சாதிய தந்திரங்களைப் பயன்படுத்தி அந்தப் போராட்டக் குழுவை பலவீனப்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. சரஸ்வதியின் பாலியல் வன்புணர்வு தொடர்புடைய வீடியோ பதிவை எஸ்.எம்.எஸ். மூலம் பரப்பி விடப் போவதாக மிரட்டல்கள் வந்தன. அரசு அறிவித்த உதவி இன்று வரை வழங்கப்படவில்லை.

நரேந்திரமோடி அவரது அமைச்சரவை சங் பரிவாரங்கள் என இந்த கூட்டணியின் நல்லாசி பெற்றவர்கள் இது போன்ற காரியங்களில் சுதந்திரமாகவே ஈடுபடும் சூழல் தான் குஜராத்தில் நிலவுகிறது. தெகல்கா புலனாய்வில் பல்கலைக் கழக தலைமை தணிக்கையாளர் சுதந்திரமாக இனப்படுகொலையில் ஈடுபட்டதை விவரிக்கிறார். சங் பரிவாரத்தின் தொண்டர்கள் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டதை தங்கள் மாணவிகளின் முன்னிலையில் விவரிக்கின்றனர். அது சரி நரேந்திரமோடியின் அனுமதி இல்லாமல் குஜராத்தில் அணுவும் அசையாது.

(பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயர் சரஸ்வதி என்று மாற்றப்பட்டுள்ளது. நன்றி: 'தலித் முரசு' ஏப்-2008)

# நான் ஒரு பெண்

-மூர்-

குஜராத்தில் மட்டும் பெண்கள் பாதிக்கப்படுவதாக இல்லை ஆணாதிக்கச் சமூகம் நிலைபெறாக்கும் அடைந்துள்ள சமூகங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் பராபட்சங்களும் மற்றும் பாலியல் துன்புறுத்தல்களும் நிகழ்ந்துகொண்டுதான் உள்ளன. எமது சூழல்களிலும் இவ்வாறான பாதிப்புக்களுக்கு உள்ளாகும் பெண்கள் அநேகம் பேர் உள்ளார்கள்.

குறிப்பாக கல்விச் சூழலில் திரை மறைவில் நிகழும் கொடுமைகள் வலிகள் ஏராளமாகவே உள்ளன. அவற்றில் இருந்து சில குரல்களை எதிர்ப்புகளை இங்கு பதிவு செய்கின்றோம்.

குரல் - 01

எனக்கு அவர் மீது ஆரம்பத்தில் சந்தேகம் வரவில்லை. அவருக்கு எனது அப்பா வயது இருக்கும். இதனால் பயமின்றி அவருடன் பழக முடிந்தது. அவரும் வீட்டுக்கு அடிக்கடி என்னை கூப்பிடுவார். எந்த ரியூட் எழுதவேண்டுமானாலும் அவர் உதவி செய்வார்.

அவரது வீட்டுக்காரர்களும் பண்பானவர்கள். அவர் மனைவி ஆசிரியர், பிள்ளைகளும் நன்கு படிக்கிறார்கள்.

ஒரு முறை அவருக்கு சுகயீனம். இதனால் அவர் லீவில் நின்றார். அவரைப் பார்ப்பதற்காக அவரது வீட்டுக்கு சென்றேன். அப்போது ரீச்சர் பாடசாலைக்கு போகும் அவசரத்தில் நின்றார். என்னைக் கண்டவுடன் உங்கள் 'சேரை நல்லா பார் பிள்ளை...' என்று அன்பாகச் கூறிவிட்டு சென்றுவிட்டார்.

நான் அரை மணித்தியாளம் அவருடன் பேசிக் கொண்டிருப்பேன். ஆனால் அவர் ஒரு மாதிரியாக நடக்கத் தொடங்கினார். என்னை வெருட்டி காரியம் ஆற்ற முற்பட்டார். நான் அந்த தொந்தரவிலிருந்து விடுபட்டு அவருக்கு நல்ல பதிலடி கொடுத்து விட்டு வந்து விட்டேன். பின்னர் என்னை அவர் பழி வாங்க ஆரம்பித்தார். நான் நடத்தை சரியில்லாதவள் என்று புகழாரம் சூட்ட ஆரம்பித்தார். சக ஆசிரியர்களுக்கு நான் தன்னோடு தப்பாக நடக்க முயன்றதாக கதை விட்டார். பலரும் அதனை நம்பினார்கள். எனக்கு என்ன செய்வதேயென்று தெரியவில்லை.

விளைவு நான் சிறப்பு படிப்புக்கு முழுக்கு போட்டு விட்டேன். பின்னர் ஒருவாறு ஆசிரியர் பணி பெற்று நல்ல நிலைக்கு வரமுடிந்தது. ஆனால் இதற்குள் நான் பட்ட அவஸ்தை வலி சொல்லி மாளாது.



குரல் - 02

அப்போது நான் பல்கலைக்கழகத்தில் 2ம் வருடத்தில் இருந்தோம். மேற்படிப்பு முடிந்து விட்டு வந்த விரிவுரையாளர் எங்கள் அனைவருக்கும் ஈர்க்கப்படும் ஒருவராக இருந்தார்.

அவரிடம் எந்த உதவியும் பெற்றுக் கொள்ள முடியும். நாம் அடிக்கடி மாணவிகள் எல்லாம் சேர்ந்து அவரது இருப்பிடத்துக்கு செல்வோம். பல்வேறு சந்தேகங்களுக்கு விளக்கம் தருவார். அவரது மனைவி உட்பட யாவரும் எம்முடன் நெருக்கமாக அன்பாக பழகி வந்தார்கள்.

ஒருமுறை வெளிமாவட்டத்தில் இருந்து வந்த 'நிலா' என்ற தோழியை அவசரமாக வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தார். அவள் அடிக்கடி கேட்ட புத்தகம் தருவதாகவே கூறியிருந்தார். இவளும் அன்றைக்கு தனியாக வீட்டுக்கு சென்றிருக்கிறாள். அப்போது வீட்டில் விரிவுரையாளரை விட வேறு யாரும் இல்லை.

சென்றவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. எதிர்பாராத விதமாக அவளை அவர் கட்டிப்பிடித்து தொந்தரவு செய்ய ஆரம்பித்துள்ளார். அவள் அவரிடமிருந்து தப்பித்து வருதவற்குள் படும்பாடாயிற்று. அவருக்கு நல்ல அடியும் கொடுத்துள்ளாள்.

இதன் பின்னர் அவள் யாரிடமும் இது பற்றிப் பேசவில்லை. அந்த விரிவுரையாளரே பொருட்படுத்தாது நடந்து கொண்டாள். ஒருமுறை இன்னொரு சகமாணவி அவர் வீட்டுக்கு தனியாக போவதை தெரிந்து கொண்டு அவளுக்கு நேரும் ஆபத்திலிருந்து அவளை மீட்க தனக்கு நேர்ந்த அவலத்தைச் அப்போது சொன்னாள்.

அன்று முதல் அந்த விரிவுரையாளர் எமக்கு அந்நியமானவராக காட்சி தந்தார். அவரிடமிருந்து சக தோழிகளை பாதுபாப்பதே எமக்கு பெரும் பாடாயிற்று. எமது ஆண் நண்பர்களுக்கு இந்த விரிவுரையாளரது லீலைகள் தெரியவர ஒருநாள் மாணவர்கள் கூட்டாகச் சென்று அவருக்கு இருட்டடி கொடுத்துள்ளார்கள்.

அவர் பின்னர் இரண்டு வருடங்களுக்குள் வெளிநாடு சென்றுவிட்டார். பலர் இதனால் பாதுகாக்கப்பட்டனர்.

### குரல் - 03

நான் இப்போது தான் இந்தப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்துள்ளேன். இன்னும் மாதம் கூட ஆகவில்லை. எனக்கு வயது 30 தான் ஆகிறது. எனக்கு திருமணம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றும் சரிவந்தபாடாக இல்லை. எனக்கு பெரும் பாலும் செவ்வாய் குற்றம் என சோதிடம் சொல்கிறது.

இந்தப் பாடசாலைக்கு வந்த காலம் தொடக்கம் அதிபர் என்னோடு அன்பாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்வார். அலுவலக உதவிகளை என்னிடம் இருந்து பெற்றுக் கொள்வார்.

அடிக்கடி ஆள்விட்டுக் கூப்பிடுவார். இந்தக் கோப்பைப் பாரும். அதைப் பாரும். அது இருக்கிறதா? இது இருக்கிறதா? செக் பண்ணும் இப்படி ஏதாவது வேலைகள் கொடுத்துக் கொண்டே இருப்பார். அவருக்கு அருகில் இருந்து தான் யாவும் செய்ய வேண்டும். வகுப்பறைக்கு கொண்டு சென்று பார்ப்பதை அவர் விரும்புவதில்லை.

அப்படி அலுவலகத்தில் இருந்து வேலை பார்க்கும் போது என்னுடன் சம்பதா சம்பதமில்லாமல் கதைத்துக் கொண்டிருப்பார். என்னை உற்றுப்பார்பார். இவரது பார்வை நடத்தை எனக்குள் சந்தேகத்தை வலுப்படுத்தியது. இதை உறுதிப்படுத்தும் வகையில் அவர் என்னை தொட்டுப் பேச ஆரம்பித்தார். ஒரு முறை காலால் சுரண்டிப் பார்த்தார். சக ஆசிரியரது புத்திமதியுடன் எச்சரிக்கையுடன் நான் நடக்கத் தொடங்கினேன்.



இப்போது அவர் கூப்பிடும் பொழுதெல்லாம் நான் செல்வதை தவிர்த்துக் கொண்டேன். தனியாக அவர் அறைக்குள் செல்வதில்லை. இப்படி எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

அவருக்கு நிலைமை விளங்கி விட்டதால் இப்போது என்னை எடுத்தெறிந்து பேசி வருகிறார். இது எனக்கு பரவாயில்லை?

### குரல் - 04

இந்தப் பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்று ஐந்து வருடங்களாகி விட்டது. இவர் அதிபராக நியமிக்கப்பட்டமைக்கு பாடசாலை மட்டத்தில் உள்ள செல்வாக்குமிக்க ஆசிரியர்கள் பெரும் எதிர்ப்பு. இருப்பினும் அவர் வருகையை தடுத்து நிறுத்த முடியவில்லை.

எந்தவொரு திட்டங்கள் தீட்டினாலும் அவற்றை நடைமுறைப்படுத்த ஆசிரியர்களது முழு ஒத்துழைப்பு கிடைப்பதில்லை. இருப்பினும் மிகவும் கஷ்டப்பட்டு பாடசாலையை நடத்திக் கொண்டிருக்கிறார்.

பாடசாலையின் அபிவிருத்திக்கு பன்முகத்திட்டங்களை உருவாக்கி முன்னெடுக்கிறார். இதற்காக சில சந்தர்ப்பங்களில் மேல்மட்ட அதிகாரிகளை சந்தித்து கதைக்க வேண்டிய விதத்தில் கதைத்து பெற வேண்டியதைப் பெற்று வரக்கூடிய ஆற்றல் பெற்றவர். அதாவது உரிய வழிமுறைகளை உரியவாறு பின்பற்றி தனக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்ளும் வல்லமை இவரது பலமான அம்சம்.

ஆனால் இதனை விளங்கிக் கொள்ள முடியாதவர்கள் இந்த 'அதிபரை' தவறாக சித்திரிப்புச் செய்கிறார்கள். ஒருவிதத்தில் நக்கலடிப்பு சிரிப்பு மூலம் இவரது ஆளுமைக்கு சேறு பூசுவதை தமது முதன்மைப் பணியாகக் கருதுகிறார்கள்.

தலைமைப் பதவிக்கு பெண் வருவது சுலபம். ஆனால் அந்தப் பதவியில் தொடர்ந்து இருந்து கொண்டு சிறப்புப் பணிகளை மேற்கொள்வது அவ்வளவு சுலபம் அல்ல. இதற்கு கொடுக்க வேண்டி விலை அதிகம். இதைவிட பெற்ற வலி வடு அதிகம். ஆனால் பாடசாலை அபிவிருத்தியிலும் மாணவர்களது முன்னேற்றத்திலும் பெரும் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

அதிபருக்குரிய சிறந்த ஆளுமையும் அறிவும் கொண்டவர் இவர். ஆனால் இவர் பெண்ணாக இருப்ப-

தனால் இவருக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் உயர்வுகள் கிடைக்கவில்லை. ஆனால் இவை எவற்றுக்கும் தலைகுனியாது நிமிர்ந்து நிற்கிறார். ஆனால் இவள் 'பல்லைக்காட்டித்தான் வேலைகளைக் கொண்டு போகிறார் என்று மட்டம் தட்டும் உலகம் பற்றி' இந்த அதிபர் கவலைப்படுவதாக இல்லை.

குரல் - 03

எனது கைத்தொலை பேசிக்கு அடிக்கடி அனாதரவான செய்திகள் குறுந்தகவல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இது பற்றி கண்டும் காணாமல் இருந்தேன்.

எனக்கு திருமணம் முடிந்து ஒரு மாதம் கடந்த பின்னர் பாடசாலைக்கு வந்தேன். அப்புறம் எனக்கு வந்த குறுந்தகவல்கள் மற்றும் படங்கள் மிகவும் ஆபாசமாக இருந்தன.

என்னை கூனிக் குறுகச் செய்தன. நான் எனது கற்றல் - கற்பித்தல் பணியில் முழுமையாக ஈடுபட முடியாமல் மன உளைச்சல்கள் என்னை வாட்டின.

நான் இதுவரை கேட்காத வார்த்தைகள்...

இந்த நிலையில் நான் இந்த நபர் குறித்த தேடுதல் வேட்டையில் இறங்கினேன். அனுப்புவர் யார்? என்று கண்டுபிடிக்க சில உரிய வழிமுறைகளில் ஈடுபட்டேன்.

அப்பொழுது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. என்னோடு உடன் கற்பிக்கும் சக ஆசிரியரது வேலை தான் என்பது எனக்குப் புரிந்தது.



மாணவர்கள் வயது கோளாறால் செய்வது வேறுவிடயம். எல்லோருக்கும் வழிகாட்ட வேண்டிய ஆசிரியர்களே மிக மோசமாக இருந்தால்.... என்ன இருந்தாலும் ஆண்கள் என்ற தகுதி எந்த ரூபத்திலும் தனது சேட்டைகளை விடும். இதற்கு நமது ஆசிரியர்கள் சமூகமும் விதிவிலக்கல்ல.

பின்னர் அவர் முகம் பார்க்கவே எனக்கு பிடிக்கவில்லை. இதைவிட ஒருமுறை தனியாக இருந்த பொழுது மிகமோசமாக அந்த நபரை திட்டித் தீர்த்துவிட்டேன்.

இதன் பின்னர் தான் எனக்கு லேசாக இருந்தது.

ஓர் இடையீடு:

இங்கு கூறப்பட்ட சம்பங்கள் மிகச் சொற்பமே. சமூகத் தளத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் கலாசாராமாக மரபாக தொடர்கின்றன. இந்த ஆணாதிக்க சமூகத்தில் ஆண் திமிர்த்தனம் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றது. இதற்கு எமது கல்விச் சூழல் மட்டும் விதிவிலக்கல்ல.

பெண்களுக்கு எதிராக கட்டவிழ்க்கப்படும் வன்முறைகளின் பின்னால் இயங்கும் ஆண் நிச்சயமாக படித்திருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. அது போல் பெண் படிக்காத பட்டிக்காடாக மட்டும் இருக்கவேண்டிய நியதியும் இல்லை. இங்கு ஆண் x பெண் என்ற நிலையே போதும்.

இலங்கையில் பாலியல் வல்லுறவு பிராந்திய சமூகப் பிரச்சினையாக தொடர்கின்றது. கடந்த 10 வருடங்களில் அறிக்கை செய்யப்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தளம்பலின்றி அதிகரித்துள்ளன. இவ்வாறு வளர்ச்சியடைந்து வருகின்ற இந்த சமூகப் பிரச்சினைக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்வதில் சட்ட முறைமை சட்ட ஏற்பாடுகள் பயனற்றுப் போய் உள்ளன. தண்டனைச் சட்டக் கோவையில் பாலியல் தவறுகள் தொடர்பில் திருத்தம் கொண்டு வரவேண்டிய தேவையும் உண்டு.

சமகால உள்நாட்டு பாலியல் தவறுகளின் ஏற்பாட்டுக் குறைபாடுகளை குறிக்கோளாகக் கொண்டு சர்வதேச மரபுவழிமுறை மனித உரிமைகள் சட்டத்தை ஆங்கிலமரபு வழிச் சட்டத்தின் கீழ் பொதுச் சட்டத்தின் தொகுதியாக இணைக்கப்பட்டுள்ளது. அதாவது நியாயசபை தீர்ப்புகளின் விளைவானது பாராளுமன்றச் சட்டம் ஒன்றைப் போன்று பொதுச் சட்டத்தின் தொகுதியாகவும் நேரடியாக கட்டுப்படுத்துவதாகவும் காணப்படுகின்றது.

சர்வதேச நியாய சபைகளின் அண்மைக்கால தீர்மானங்கள் சர்வதேச மரபுவழிச் சட்டமாக கணிசமானளவு முக்கியத்துவம் பெற்று வருகின்றது. கற்பை இழத்தல் என்பதற்கெதிராக தனியாளின் பாலியல் சுயஉரிமை மீறல் மீது கவனம் செலுத்துகின்றது. அதாவது பாலியல் வல்லுறவு பற்றிய பால்நிலைச் சார்பற்ற வரைவிலக்கணத்தை அவை ஏற்றுக் கொண்டுள்ளன.

நாம் இவைபற்றியும் மேலும் சட்ட முறைமை சார்ந்தும் சமூக ஏற்பாடுகள் சார்ந்தும் பன்னாட்டு அனுபவங்கள் சார்ந்தும் இன்னும் விரிவாக சிந்திக்கவும் எமக்கான வழிமுறைகளை சட்ட ஏற்பாடுகளை உருவாக்கிக் கொள்ளவும் வாய்ப்புக்கள் நிறையவே உண்டு.



**சு**வாமி விபுலானந்தர் பிறந்த பூமி காரைதீவு. இங்கு சுவாமிகளின் நினைவு மண்டபம், ஸ்ரீராமகிருஷ்ண மிசன் சாரதா மகளிர் வித்தியாலயம், ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் பராமரிப்பில் உள்ள ஸ்ரீ சாரதா மகளிர் சிறுவர் இல்லம் மற்றும் புகழ் பெற்ற சைவத் திருத்தலங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க கண்ணகி ஆலயம் என்று மருதமும் நெய்தலும் சூழ்ந்த புண்ணிய பூமியாக காட்சி தருகின்றது.

சுவாமிகளின் குழந்தைப் பெயர் மயில்வாகனம். தாய் தந்தையர் கண்ணம்மை - சாமித்தம்பி. சுவாமிகளுக்கு அமிர்தவல்லி - மரகதவல்லி என்னும் உடன் பிறப்புக்கள் இருவர். மரகதவல்லி அவர்களின் மகள் கோமேதகவல்லி. இவரை கண்ணம்மா என்றே அழைக்கின்றனர். சுவாமி விபுலானந்தர் அப்படித்தான் அவரை அழைத்துவந்தார். இவர் ஓய்வு பெற்ற அதிபராக இன்று அமைதியுடன் வாழ்க்கை நடத்தி வருகின்றார்.

இவரை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடும் வாய்ப்பு அண்மையில் எமக்குக் கிடைத்தது. அவருடனான உரையாடலின் போது மட்டக்களப்பு பிரதேச புராதன கல்விமுறை மற்றும் சமூகக் கட்டமைப்பை தரிசிக்கும் வாய்ப்பும் கிட்டியது. இடை இடையே சுவாமிகளைப்பற்றிய நினைவுகளையும் அவர் மீட்டுக்கொண்டார். சுவாமிகளது புலமைச் சுவடுகளை தரிசிப்பதற்கான களங்களையும் நமக்கு அடையாளம் காட்டினார்.

சுவாமி விபுலானந்தர் ஒரு பல்கலை வித்தகர். இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியர். தமிழகத்தில் பாரதியை தெளிவாக அறிமுகப்படுத்தியவர். தமிழகத்திலும் ஈழத்திலும் பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டவர். கிழக்கிலங்கையில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் தோற்றம் பெறவும் கல்விக் கூடங்கள் உருவாகவும் காரணமானது இருந்தவர். ஆன்மீகம், கல்விப் பணி, சமூகசேவை, ஆய்வு, கலைகள் என்று பல்வேறு துறைகளிலும் தடம் பதித்த நுண் அறிவாளர், புலமையாளர். யாழ் நூல் தந்தவர். என்றெல்லாம் பல்வேறு சிறப்புகளை தன்னகத்தே கொண்ட சுவாமிகளின் சகோதரியின் மகளுடன் - அதுவும் ஒரு கல்வியியலாளருடன் உரையாடுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

1926-06-06 இல் பிறந்து இன்னும் பல வரலாறுகள் சுமந்து ஓய்வு பெற்ற அதிபராக எம்மத்தியில் காரைதீவில் வாழ்ந்து வருகின்றார் கண்ணம்மா அம்மையார்.

*உரையாடியவர்:-*
**சி. திகநாதன்**
(ஆசிரியர், மட்டு/சென்மைக்கல் கல்லூரி)

**உரையாடல்**

*மரகதவல்லி அவர்களின் மகள் கோமேதகவல்லி. இவரை கண்ணம்மா என்றே அழைக்கின்றனர். சுவாமி விபுலானந்தர் அப்படித்தான் அவரை அழைத்துவந்தார். இவர் ஓய்வு பெற்ற அதிபராக இன்று அமைதியுடன் வாழ்க்கை நடத்தி வருகின்றார்.*

## சுவாமி விபுலானந்தரின் கல்வித்துறை குடும்ப வாரிசு கண்ணம்மா உரையாடுகின்றார்.

அவரது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முயலும் பொழுது அக்கால சமூக கலாசார கல்வித் துறை இருப்பின் வரலாற்றுத் துளிர்களையும் நாம் கண்டு கொள்ள முடியும்.

குழந்தைகளுக்கு ஏடு தொடக்கு வழக்கம் நவராத்திரியை தொடர்ந்து வரும் விஜயதசமியில் நிகழ்ந்து வரும் வழக்கம். இந்த மரபு மட்டக்களப்பிலும் தொன்று தொட்டு வழங்கி வந்ததை அறிய முடிகிறது.

1930ம் ஆண்டு விஜயதசமியில் தான் தனக்கு ஏடு தொடக்கப்பட்டதாக கண்ணம்மா அம்மையார் கூறுகின்றார்.

இராமகிருஷ்ண மிசன் நிர்வாகப் பாடசாலையான காரைதீவு சாரதா பெண்கள் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வி தொடங்கப்பட்டது. இப் பாடசாலையானது காலை 8.00மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மதியம் 1.00 மணிக்கு மதிய உணவு முடிந்த பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 4.00மணிக்கு முடிவடையும். இதன் போது கிராமத்திலுள்ள அனைத்துப் பிள்ளைகளும் பாடசாலைக்குச் சென்றனர். பாடசாலை ஓலைக் குடிசையினுள் பசுமாட்டுச் சாணத்தினால் மெழுகப்பட்டிருக்கும். தரையிலே சம்மாணம் போட்டு இருந்து ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். இதில் தமிழ் இலக்கியம், இலக்கணம், கணிதம், சங்கீதம், சித்திரம் போன்ற பாடங்களை ஆர்வத்துடன் கற்பித்தனர். அதற்கான விளக்கக் குறிப்புக்களை பயிற்சிக்கொப்பியில் குறித்துக் கொண்டு பின்னேரம், இரவுப்பொழுதில் தாயின் அருகிலிருந்து விளக்கு வெளிச்சத்தில் நாம் கற்போம்.

அதனைப் பரீட்சிப்பதற்காக இக்காலத்தில் பாடசாலையின் முகாமையாளராக கடமையாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சதாசிவம் ஐயர் அவர் மாதாந்த வருடாந்தச் பரீட்சைகளை எழுத்துப் பரீட்சையாகவும், வாய்மொழிப் பரீட்சையாகவும் நடாத்துவார். அப்போது இக்காலத்தில் சுவாமிகள் இலங்கையில் இருந்தால் அங்கு கட்டாயம் பிரசன்னமாகுவார். அப்போது சதாசிவ ஐயர் தலைப்பாகையுடன், வேட்டி, சால்வை அணிந்து காணப்படுவார். அவரைக் காணும் போது பயமின்றி பக்தியே நமக்குள் அதிகரிக்கும். அதனால் நான் அவரிடம் பணிவாக விடையளிப்பேன். அதன் பின் எங்கள் எல்லோரினதும் பரீட்சைப் புள்ளிகள் காலை ஒன்று கூடலின்போது எல்லா மாணவர்கள், ஆசிரியர்கள் முன்பும் வாசித்துத் காட்டப்படும். அத்துடன் இவ் ஒன்றுகூடலின்போது முதலாவது தேவாரம் இசையோடு பாடப்படும், ஆசிரியர்களால் நற்சிந்தனை கூறப்படும், நாயன்மாரின் குருபூசை தினம், பெரியார்களின் வரலாறுகள் எல்லாம் வாசிக்கப்படும்.

இக்காலத்தில் படிக்கின்ற புத்தகங்கள் அனைத்தும் காசு கொடுத்தே வாங்க வேண்டும். அதற்காக சுவாமி அவர்கள் நூலகத்துக்கு சென்று தேவையான புத்



தகங்களை தேர்வு செய்யும்படி கூறுவார். அப்புத்தகங்கள் அனைத்தையும் வாசித்து அதனை அவரிடம் மீண்டும் கூறுவேன். பின்பு அப்புத்தகங்களை மார்கழி விடுமுறைக்கு முன்பதாக ஒப்படைத்து விடுவேன். இக்காலத்தில் தரம் 8,9 இல் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். இக்கற்றலை சிறப்பாக முன் கொண்டு செல்ல எனக்கு பெரிதும் துணை புரிந்தவர்களாக மனோர்மணி, பத்மாவதி போன்ற ஆசிரியர்களை குறிப்பிடமுடியும். இவர்கள் எனது தமிழ் அறிவை கண்டு பிடித்து வெளிப்படுத்திய ஆசிரியர்கள் என்பேன்.

1942ம் ஆண்டு உலகப்போர் ஏற்பட்டு உக்கிரமம் அடைந்த வேளையில் ஜப்பானிய விமானங்கள் கல்முனைக் கடலில் குண்டுகளை வீசின நான் அப்போது J. S. C (க.பா.த.வ) பரீட்சை எழுதிக் கொண்டிருந்தேன்.

இதன்போது எங்களை மேற்பார்வை செய்து கொண்டிருந்த ஆசிரியர் மேசையின் கீழ் பதுங்கிக் கொள்ளுமாறு உத்தரவிட்டார். அதன்படி மேசையின் கீழ் அப்போது நாம் அணிந்திருந்த வெள்ளைநிறச் சீருடையுடன் புகுந்து கொண்டோம். அதன்பின் அப்பரீட்சையை நிறைவு செய்து கையளித்து விட்டு வாகன வசதிகள் எதுவும் இல்லாமையினால் அண்ணனுடன் துவிச்சக்கர வண்டியில் எனது ஊருக்குச் சென்றேன். பின்னர் 1944 S.S.C பரீட்சை எழுதி திறமைச் சித்தியெய்தினேன். இப் பரீட்சையானது கணிதம், தமிழ், விஞ்ஞானம், சரித்திரம், சித்திரம், சங்கீதம், ஆங்கிலம், இலக்கணம் ஆகிய பாடங்களைக் கொண்டிருந்தது. இதில் நான் திறமைச் சித்தி பெற்றுக் கொண்டேன். இதன்பின் சுவாமிகளின் தூண்டுதலினால் அமிர்தவல்லி அம்மையாரின் மூத்த மகளான சாரதா அக்கா படித்துக்கொண்டிருந்த யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் என்னையும் சேர்த்துவிட்டால் படிப்புக்கு சிக்கல் ஏற்படாது என முடிவு செய்யப்பட்டது.

அதன்படி நானும் எனது விவேகானந்த ராசா அண்ணனும் மட்டக்களப்புக்கு சென்று அங்கிருந்து

புகையிரத வண்டியில் யாழ்ப்பாணம் மருதனா மடத்துக்கு சென்றடைந்தோம். அன்றிரவு அக்கா படித்துக்கொண்டிருந்த இடத்தில் தங்கி இருந்து அடுத்த நாட்காலை நேர் முகப்பரீட்சைக்காக முதல் தடவையாக சேலை அணிந்து கொண்டு சென்றேன். அந்த அவையில் 7 பெரியவர்கள் காணப்பட்டனர். அவர்களுக்கு கைகூப்பி வணக்கம் செலுத்தினேன். பின் நேர்முகப்பரீட்சை தொடங்கியது. அதில் முதலாவதாக What's Your Name? எனக் கேட்கப்பட்டது. அதன் பின் ஒவ்வொன்றாக வினவப்பட்டு என்னை சங்கீதப் பாடலொன்றைப் பாடுமாறு பணித்தனர். பாடிமுடிந்தபின்பு அதில் இருந்த தலைமை அதிகாரி கூறினார், "நாங்கள் சின்னப் பிள்ளைகளை கல்லூரிக்கு இணைப்பதில்லை" என்று கூறினார். இதற்கு நான் கூறினேன் 'சேலை உடுத்தியிருக்கிறேன் தானே அப்படியாயின் பெரியவள் தானே' என்று கூறினேன். அப்பொழுது எல்லோரும் சிரித்தனர். நான் பின் அக்காவிடம் என்னை அவளுடன் சேர்ந்து படிக்க அனுமதிக்காததை கூறி அழுதேன். பின்னர் அங்கு வேலை முடிந்து விட்டதால் அன்றிரவே அண்ணனும் நானும் புகையிரதத்தில் மட்டக்களப்புக்கு புறப்பட்டு வந்தோம்.

அடுத்த நாட்காலை கல்லடி சிவபுரியில் சுவாமி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் நல்லையா மாஸ்டருடன் உரையாடிக்கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் அருகே அழைத்து வந்து நலம் விசாரித்தார். நான் அங்கு நடந்தவற்றை கூறினேன். அப்போது உணவு அருந்தி விட்டு வரும்படி சுவாமி கூறினார். நாங்கள் உணவு அருந்திவிட்டு வந்ததும் அவர் அருகில் சென்றோம். அப்போது நல்லையா மாஸ்டர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அமைக்கப் போகிறார். கண்ணம்மாவுக்கு எல்லாம் வசதியாய் போச்சு என்றார். நான் மிகுந்த சந்தோசத்துடன் காரைதீவுக்கு திரும்பினேன். அதன் பின் சில நாட்கள் கழித்து நல்லையா மாஸ்டர் எங்களது வீட்டுக்கு வந்தார் நான் அவருடன் சென்று என்னோடு S. S. C படித்துச் சித்தியடைந்த 3 பிள்ளைகளின் வீடுகளுக்கும் சென்றோம். இதன் பின்னர் நான் உட்பட 40 பிள்ளைகள் முதன் முறையாக உருவாக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு எழுத்துப் பரீட்சை, நேர்முகச் சோதனைகளின் பின்னர் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்குள் முதல் மாணவர் தொகுதியாக உள்ளீர்க்கப்பட்டோம்.

1946-1947 ஆசிரியர் பயிற்சி கலாசாலை படித்த மாணவிகளின் நானும் ஒருத்தி. இக் கலாசாலை தற்போது ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை அமைந்திருந்த கட்டிடத்திலே சுவாமிகளின் அனுமதியுடனோடும் நடைபெற்றது. இக் கலாசாலையின் அதிபராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி தம்பிராசா என்ற சிறந்த குணவதி பண்பாளர் எங்களை வழிப்படுத்தினார். அவரின் கீழ் 11 ஆசிரியர்கள்



கடமையாற்றினர். இங்கு 40 மாணவர்கள் கல்வியை தொடர்ந்தோம். காலையில் 5.00 மணிக்கு நித்திரை விட்டு எழ வேண்டும். இறை வழிபாட்டை முடித்த விட்டு 8.00மணிக்கு பாடங்கள் ஆரம்பிக்கப்படும். இதில் தமிழ், கணிதம், அகநூல், சங்கீதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களும் வகுப்பறை கற்பித்தல் முறைகளும் பாடங்களாக்கப்பட்டிருந்தது. இதைவிட சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களில் கலை, இலக்கியம் தொடர்பான பாடங்கள் நடைபெறும். இக் காலத்தில் மாதத்துக்கு ஒரு வாரம் அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கு சென்று கற்பித்தல் பயிற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். இதற்காக அப்பயிற்சி தொடங்குவதற்கு முதல் இரு நாள் முன்பே குறித்த பாடசாலை அதிபரிடம் சென்று நான் படிப்பிக்கப் போகும் தரத்தை கூறியவுடன் அதற்கான வேலைத்திட்டம், நேர சூசி நமக்கு கிடைக்கும். அதைக் கொண்டு நாம் தயார்படுத்தியதை எங்களது ஆசிரியர்களிடம் காட்டிய பின்பே பாடசாலைக்கு செல்ல அனுமதிக்கப்படுவோம். எனக்கு கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு துணையாக இருந்த ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை அதிபர் நாகையா மாஸ்டர், எனது கலாசாலை ஆசிரியையான திருமதி நல்லையா ஆசிரியையும் நான் என்றும் மறக்க முடியாது. இவர்கள் நல்ல குணவான்கள். விளங்காத மாணவர்களுக்கும் தமிழ் சொல்லிக் கொடுப்பதற்கும் எப்போதும் என்னை அனுமதிப்பார். இக் காலத்தில் நடிக்கப்பட்ட நாடகங்களில் துஸ்சியந்தன் - சகுந்தலை நாடகத்தில் நான் துஸ்சியந்தனாகவும், அரிச்சந்திரன் சந்திரமதி நாடகத்தில் சந்திரமதியாகவும், மீராபாய் நாடகத்தில் மீராபாயாகவும் நடித்துள்ளேன். எமது கலாசாலையில் மாதாந்த தவணை வருடப் பரீட்சைகள் நடைபெறும். இதன் போது கொழும்பிலிருந்து பல அதிகாரிகள் இங்கு வருவார்கள். இவர்களால் நடாத்தப்படும் பரீட்சையில் சிறப்பான சித்தியடைந்தால் மட்டுமே ஆசிரியர் என்ற அனுமதி கிடைக்கும் இரண்டு வருடங்களை எமக்கு பயிற்சிக் காலமாக கொண்டமைந்தது.

ஒருநாள் சுவாமிகள் "தண்ணளியே செங்கோலாய்..." எனத் தொடங்கும் யாழ் நூலின் முதற் பாடலினை நான் உட்பட என்னைக் கற்பித்த ஆசிரியைகளுக்கும் சிவபுரியில் வைத்து பரீட்சிக்கப்பட்டது. இதில் நான் மட்டுமே சிறியவள் மற்றும் விரிவுரையாளர்கள் 10 பேர். இவர்கள் அனைவருக்கும் யாழ் நூல் பாடல் பிரதி அச்சடித்து கொடுக்கப்பட்டு பாடமாக்கி எழுதச் சொல்லப்பட்டது. பாடலை சரியாக எழுதுபவர்களுக்கு வீணையும் பரிசாகும் எனவும் கூறப்பட்டபோது, நான் நல்லையா, தங்கேஸ்வரி ஆசிரியர்களை விட நான் சிறப்பாக எழுதி வீணையை பெற்றுக்கொண்டு குப்புச்சாமி ஐயாவுடன் காரைதீவு வந்து சேர்ந்தேன்.

நான் படித்துக் கொண்டிருந்த காலம் கூப்பன் காலம். கூப்பனுக்கு மட்டும் மா வழங்கப்படும் அதிலிருந்தே பிட்டு, பாண் என்னும் உணவுகளை தயாரிக்கப்படும். அரிசிச் சோற்றை காண்பது கஸ்டம் ஏனெனில் 2ம் உலகமகாயுத்தம் நடந்து கொண்டிருந்ததால் ஆங்கில அரசு அரிசியை ஒரு பிரதேசத்துக்குள் இருந்து இன்னுமொரு பிரதேசத்துக்குள் கொண்டு செல்ல அனுமதிப்பதில்லை. ஆனாலும் வயற்காரருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள அளவு அரிசி கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது. நாங்கள் வயற்காரர்கள் என்பதால் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், எனது அண்ணனும் உணவுக் கட்டுப்பாட்டாளராக பணிபுரிந்ததாலும் மட்டக்களப்பு நகரிலுள்ள கல்லடி உப்போடை மிசன், நல்லையா மாஸ்டர், என்னைப் படிப்பித்த பிற ஆசிரியர்களது வீடுகளுக்கு சென்று அரிசி கொடுத்தேன். இதன் பின் கலாசாலையில் 2 வருடங்களும் பூர்த்தியாகி விட்டது. அதனால் மட்டக்களப்பு புளியந்தீவிலுள்ள கல்வி அலுவலகத்துக்கு சென்றேன். அங்கு கல்வி அதிகாரியாக கடமை ஆற்றிக் கொண்டிருந்த சோமசுந்தரம் அவர்களிடம் எனது சுயவிபரத்தை பதிவு செய்து விட்டு மார்கழி மாதம் வீடு திரும்பினேன்.

*1948.02.15* இல் எனக்கு ஏடு தொடங்கப்பட்ட பாடசாலையிலேயே ஆசிரியையாக கடமையாற்றும் பேறுபெற்றேன்.

இக்காலப்பகுதியில் எனது தமக்கையான சாரதா அவர்களே அதிபராக அங்கு பணிபுரிந்து வந்தார். இதனால் எனது கற்பித்தல் பணியை சிறப்பாக முன்னெடுக்க வாய்ப்பு ஏற்பட்டது. காலையில் பாடசாலை தொடங்கியதும் மாணவர்களுக்கு தேவையான புத்தகங்களை நூலகத்திலிருந்து எடுத்து கொண்டு வகுப்பறைக்கு செல்வேன். 18 - 20 மாணவர்கள் வகுப்பறையில் இருந்தார்கள். பாடம் தொடங்கியதும் முதல் 5 - 10 நிமிடங்கள் எல்லோரும் வாசிக்க வேண்டும். அதிலிருந்து சில வினாக்களைக் கேட்பேன். அதற்கு பதிலளிக்க முடியாதவர்களுக்கு பாடத்தை விளங்கப்படுத்துவதுடன், விடையளித்த



மாணவர்களுக்கு இன்னும் வினாக்களைக் கேட்பேன். இக்காலத்தில் கற்பித்தலை திறம்பட மேற்கொள்ள பாடசாலை முகாமையாளர்கள் எனக்கு சிறப்பாக உதவினார்கள். இதன்பின் நான் துணைத் தலைமை ஆசிரியரானேன். அப்பொழுது பிரவேச பண்டிதர், பால பண்டிதர் ஆகிய பரீட்சைகளில் தோற்றி சித்தியடைந்தேன்.

இதன்போது எனக்கு ஏற்படும் சந்தேகங்களையும், விளக்கங்களையும் அறிந்து கொள்வதற்காக சுவாமிகளுக்கு கடிதம் எழுதுவேன். அவர் அதற்கான பதிலை எழுதி அனுப்புவார். அப்போது கல்லடி உப்போடையில் இருந்தார். நான் அங்கு சென்று மேலதிக விளக்கத்தை பெற்றுக் கொள்வேன். அப்போது சுவாமிகளால் செய்கை பண்ணப்பட்டு வந்த கல்லடி உப்போடை சிவானந்தா இல்ல தோட்டத்துக்கு தேவையான பயிர் விதைகளை தேடிக் கொண்டு கொடுப்பதுடன் சுவாமிகள் எழுதிய யாழ் நூல் குறிப்புக்களை எனது கைப்பட அழகாக எழுதி கொடுத்தேன். இதன் பின்பும் சுவாமிகள் காரைதீவுக்கு வரும் போதெல்லாம் எங்களது வீடு வந்து பல நல்ல விடயங்கள் பற்றிக் கதை வடிவிலே என்னோடு ஒத்த பிள்ளைகளையும் அழைத்து நிலா முற்றத்தில் வீட்டுத்திண்ணையில் இருந்து கூறிக்கொண்டிருப்பார்.

இக்காலப்பகுதியில் சுவாமிகள் திருக்கைலாச யாத்திரை சென்று மீண்டும் ஈழத்துக்கு மீண்ட போது கல்லடி - சிவானந்தா சிவ புரியில் தங்கியிருந்தார்.

நானும் எனது அம்மாவும் அவரை தரிசிப்பதற்காகவும், அவர் பேசுகின்ற சொற்பொழிவை கேட்பதற்காகவும் அங்கு அங்கு அடிக்கடி செல்வோம். அதன்போது ஒருநாள் அடுத்த நாட்காலை சிவபுரியிலுள்ள பிரதான தண்ணித் தொட்டியில் திருக்கைலாசத்திலிருந்து கொண்டுவந்த நீரை அதனுள் ஊற்றி எங்களை தீர்த்தமாடச் சொன்னார். அனைத்து இல்லப் பிள்ளைகளும் குதுகலித்துக் கொண்டு தீர்த்தமாடினோம். அப்போது சுவாமி நான் பல நாட்கள் கஸ்டப்பட்டு செலவழித்து நீராடியதை நீங்கள் இன்று இலகுவாக ஆடுங்கள்" என்று சொன்னார்.

இக்காலத்தில் எமது பாடசாலைக்கு அருகில் அனாதைப் பிள்ளைகளுக்கான சாரதா மகளிர் இல்லம் சுவாமிகளின் ஆலோசனையின் பெயரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் அரசாங்க சபை முக்கியஸ்தரமான துரைசாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதன் போது அவருக்கு வாசித்த கவிதை:

*அரசாங்க சபைக்கொரு முதல்வர் - புகழ்*

*யாழ்ப்பாண நாட்டுக்கொரு தலைவா என்றும் காரேறு - மூதூர்*

*பெண்கள் சாரதா வித்தியாலயத்தில் ஆருமற்ற அநாதையாகச் - சேம சாலை திறந்திட - சீர் சான்றாண்மையாக இங்கு வந்தீர் - இதற் கான்ற கை மாறியற்றலாமோ - என்றும்*

*ஈன்ற பொழுதிலும் பெரிதாகவே உவர்க்கும் சான்றோன் எனவே யாண்டு புகழ் பெருகும் - சீர்*

இந்த இல்லத்திற்கான காணியும் வீடும் சுவாமிகளின் மாமாவான இராமநாதபிள்ளை அவர்களால் எழுதிக் கையளிக்கப்பட்டது. இவ் இல்லத்தில் யாழ்ப்பாணம், மலையகத்தை சேர்ந்த மாணவியர்களும் வந்திருந்து படித்தனர். இவர்களுக்கான மருத்துவம், கல்விக்கான உபகரணங்கள் உணவு தேவைகளை சுவாமிகளே முன்னின்று பூர்த்தி செய்து வந்தார். எனது அம்மா நல்ல கை வைத்தியம் செய்வார். அவர் அடிக்கடி இல்லத்திற்கு சென்று பிள்ளைகளுக்கு வைத்தியமும் பார்ப்பார். நான் பாடசாலை விட்டு வந்து பின்னேரங்களிலும் சனி ஞாயிறு நாட்களிலும் அங்குள்ளவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பேன். இதன் போது பிள்ளைகள் தமக்கு தெரியாத, விளங்காத விடயங்களைக் குறிப்பெடுத்து வைத்திருப்பர். அதை நான் தெளிவுபடுத்துவேன். சுவாமிகள் வெளிநாடுகளில், வெளி இடங்களில் இருந்தபோது எழுதப்படும் கடிதங்களில் முதலாவது வசனம் இல்லத்தை போய் பார்க்கவும், பாடம் சொல்லிக்கொடு என்றே எழுதுவார். இதனால் எனக்கு இல்லம் மீது மிகுந்த மரியாதை உண்டு. இன்று எனது பேத்தியான மஞ்சிரேகா ஆங்கிலம், கணிதம் போதிப்பதற்காக நாளாந்தம் சென்றுகொண்டு இருக்கிறார்.

அதே பாடசாலையில் நான் தலைமை ஆசிரியராக 1972ல் கடமையாற்றிய காலங்களில் பாடசாலை கட்டிடங்கள் குறைவு இதற்காக நாடகம், கோலாட்டம் முதலான கிராமிய கலைகளை கொண்ட அரங்கங்களை ஏற்படுத்தி அதிலிருந்து கிடைத்த 20,000 மேற்பட்ட நிதியை கொண்டு பாடசாலையில் கட்டிடங்களைக் கட்டுவித்தேன். இதற்காக என்னுடன் ஆசிரியர்கள் அனைவரும் நல்ல ஒத்துழைப்பு வழங்கினர். அதனால் அவர்களது மேல் நிலைக்கல்வி வளர்ச்சிக்கான வாய்ப்புக்களையும் வழிவகைகளையும் ஏற்பத்திக் கொடுத்தமையால் பலர் இறுதிக் காலங்களில் அதிபராகும் வாய்ப்பும், கல்வி அதிகாரியாகும் வாய்ப்பும் ஏற்பட்டது.

இவ் வேளையில் தமிழ், முஸ்லிம் பிள்ளைகள் யாவரும் சாரதா பெண்கள் பாடசாலையில் ஒன்றாகவே கல்வி கற்றனர். அவர்களில் இன்று குறிப்பிடத்தக்கவராக முஸ்லிம் கலாசார அலுவல அமைச்சின் செயலாளராக இருந்த S. H. M. ஜெமீலுக்கு நானே ஏடு தொடக்கி விட்டேன். எவ்வளவு அன்னியோன்னியமாக இன ஒற்றுமையுடன் நாம் வாழ்ந்து வந்தோம் தெரியுமா.

இதன் பின்னர் மிசன் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. இதனால் ஒருசாரார் மிசன் பக்கமும் இன்னொரு சாரார் அரசாங்கப் பக்கமும் அணி திரண்டனர். நான் அப்பாடசாலையில் அதிக காலம் வேலை செய்து வந்தேன். இதனை சிலர் பொறுக்கமுடியாமல் என்னை வேறு பாடசாலைக்கு அனுப்பும்படி அனாமதேய கடிதங்களை கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். ஆனாலும் எனது சேவையில் நம்பிக்கை கொண்டிருந்த அதிகாரிகள் அதனை முறியடிப்பு செய்தனர் தொடர்ந்து சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் ஏடு தொடங்கி அப்பாடசாலையிலேயே தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றி 1984 இல் நான் ஒய்வு பெற்றேன்.

நான் கடந்து வந்த இக் காலத்தில் மிசனுக்காகவும், பிள்ளைகளின் கல்வி விருத்திக்காகவும் இன ஒற்றுமைக்காகவும், முயன்று சேவை செய்து வந்துள்ளேன். இது எனது வாழ்நாளில் கிடைத்த பெரும் கொடை எனக் கருதுகின்றேன். இதனால் எதிர்காலத்தில் வரும் மாணவர் சமூகம் உலகமே வியந்து பார்க்கும்படி அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும். அதற்காக சோம்பலின்றி செயற்படவேண்டும். சமயத்தையும், தமிழையும் எக் காலத்திலும் உயிராய் மதிக்க வேண்டும். இதுவே என் ஆசையும், வேண்டுகோளும்.

இவ்வாறு தனது அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.





ஏ.பரமானந்தம், ஆசிரியர்
கல்வியலாளர்,
தேசிய கல்வியியற்கல்லூரி, வவுனியா.

ஆசிரியம்

மரபுவழிவந்த வழிகாட்டலாகவும், பரம்பரை வழியாகவும் பேணப்பட்டு வந்தது. வர்க்கமுறை தொடர்ந்து பேணுபவதாகவும் இருந்து வந்தது. மற்றும் குருகுலமுறையில் ஆன்மீகம் சார்ந்த கல்வியே பெரும்பாலும் பேணப்பட்டது.

# எதிர்கால கல்விக்கான தேர்ச்சிமிகு ஆசிரியர்

இலங்கைக் கல்வி வரலாற்றில் தமிழர் கல்வி பாரம்பரியம் தனித்துவமானது. இலங்கையின் மன்னராட்சி முறையை ஆய்வு செய்து பார்க்கின்ற போது யாழ்ப்பாண இராட்சிய காலம் தமிழர் கல்வி பற்றி தகவல்களை பெறக்கூடிய ஆதாரங்களைக் கொண்டுள்ளது. இக் காலத்தில் மக்களுக்கு தேவையான மருத்துவ, சோதிடச் செய்திகளை நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தியமையை அறியலாம். மன்னர்கள் இதற்காக ஆசிரியர்களை அல்லது புலவர்களை ஆதரித்துப் பேணியமையை அறியலாம். மன்னர்களே புலவர்களாகவும் இருந்தனர். இதற்கு யாழ்ப்பாண வைபவமாலை வரலாற்றுக்குச் சான்று பகர்கின்றது.

அடுத்து இம்மரபு இலங்கையில் குருகுல முறையாக வளர்ந்து யாழ்ப்பாணத்தில் ஒரு கல்விப் பாரம்பரியத்தை ஏற்படுத்தியது. இது பெரும்பாலும் இந்து மதக் கல்வி முறையாகவே இருந்தது. இதில் வர்ணக்கோட்பாடு அதிகம் தாக்கம் செலுத்தியது என்பது கசப்பான உண்மை. இது தவிர பரம்பரையான, குலமுறையான பயிற்சி/கல்வி என்பது இங்கு பெரும் தாக்கம் ஏற்படுத்தி இருக்கிறது. மரபுவழிவந்த வழிகாட்டலாகவும், பரம்பரை வழியாகவும் பேணப்பட்டு வந்தது. வர்க்கமுறை தொடர்ந்து பேணுபவதாகவும் இருந்து வந்தது. மற்றும் குருகுலமுறையில் ஆன்மீகம் சார்ந்த கல்வியே பெரும்பாலும் பேணப்பட்டது. எல்லோர்க்கும் கல்வி என்ற சிந்தனை எள்ளவும் இல்லாத காலப்பகுதியது. தொடர்ந்து தமிழர் கல்வியை மாற்றியமைத்த புதியதொரு வருகையாக குறிப்பிடக்கூடிய விடயம் கிறிஸ்தவ மிசனரிமார்களின் வருகை. மதம் பரப்பவந்த இவர்கள் அந்நோக்கத்திற்காக கல்வியைப் பிரயோகிக்கும் போது அது யாழ்ப்பாணத்திலும் தமிழர் கல்வியிலும் சிறந்த கல்விப்பாரம்பரியம் வளர வழிவகுத்தது.

இதன் மூலம்

- நிறுவன ரீதியான கல்வி வளம் பெற்றது.
- சமூகவேறுபாடுகள் கல்வியில் வெளிக்காட்டப்படக்கூடாது என்ற கருத்து வெளிப்பட்டது
- கல்வி மூலமான தொழில் வாய்ப்பு உருவாகியது.
- நாளாந்த தேவைக்கு கல்வியைப் பயன்படுத்தி வாழ்வை சீர்செய்யும் முறை வளம் பெற்றது.

- கல்விக்கும் கலாசாரத்திற்குமிடையில் நீண்டதொரு பிணைப்பு காணப்பட்டது.
- தமிழர் கல்வியில் புதிய உள்ளடக்கம், சீர்திருத்தம் வந்தபோதும் அது தனது கலாசாரத்தினை உள்வாங்கியே உட்புகுந்தது.

**இன்று தமிழர் கல்வி மரபு நவீன உலகோடு ஒட்டி வளர்ச்சி அடைந்த போதும்**

- பழமைபோற்றும் பண்பு.
- பழமைக்கும் புதுமைக்குமிடையிலான போட்டி முரண்பாடு.
- புதியதை உள்வாங்கி சமூகவியல் ரீதியாகவும், கலாசார ரீதியாகவும்.

தனித்துவத்தை இழக்கும் பண்புநிலை

போன்றவற்றைக் கொண்டுள்ளது.

**இன்று ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான போர்ச்சூழல் மாணவர் கல்வியைப் பல்வேறு வழிகளிலும் பாதித்துள்ளது. தேவையான**

- வளங்களின் பற்றாக்குறை,
- எதிர்கால இருப்பியம் தொடர்பான பயம்
- நவீன கல்வி வாய்ப்புக்களின் குறைவு
- ஆளணிப்பற்றாக்குறை
- உடனடிப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டிய தேவை
- தொடர் இடப்பெயர்வுகள்
- கல்வியில் தொடர்ச்சியின்மை (கல்வி இழப்பு, கல்வி வாய்ப்பு இழப்பு)

போன்ற கவலைதரு நிலைகள் காணப்படுகின்றன.

**இதனால் புதிய கல்வி முறைமூலம் தொழில் வாய்ப்பு பெற வசதி குறைவு. அதே நேரம் பாரம்பரிய முறைகள், தொழில் கல்வியை மேம்படுத்த முடியாத நிலை போன்ற நிலைகளும் விழுமியப் பண்புகளில் தரக்குறைவு, அறிவிற்கும் ஆற்றுகைக்குமிடையிலான பாரிய வேறுபாடு, சமூக நலன்பற்றிய அக்கறை குறைந்து சுயநலம் முன்னிலைப்படுத்தல், தமது தொழில் சார்ந்தவர்களை உருவாக்குவதில் பின்னிற்றல், எதிர்கால தேவைபற்றிய தீர்க்கதரிசனம் மிகக் குறைவு, போன்ற விரும்பத்தகாத நிலைகளும் காணப்படுகின்றது. இந்நிலையில் தமிழர் கல்வியின் போக்கிற்கு மாற்றங்கள் அவசியமாக உள்ளது. பொதுவாக**

- கல்வி உலகில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கும் மனப்பாங்கு.
- மாற்றங்களை உடன்பாடான மனப்பாங்குடன் ஏற்றுக்கொள்ளுதல்.
- எமது பிரதேச வளங்களின் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு.
- எதிர்கால எமது சந்ததியினரின் தேவைக்கு விட்டுச் செல்லவேண்டிய பயன்தரு எச்சங்கள்,
- தொழில்நுட்ப, ஆய்வு கற்கைளில் மாற்றங்கள்,
- வளமிகு மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல்
- தீர்க்கதரிசனத்துடனும், எதிர்கால தேவைகள் பற்றிய சிந்தனையுடனும் செயலாற்றுதல்

**இவ்வாறான நிலையில் எதிர்கால ஆசிரியர்கள் பல்வேறு வகையான திறன்களையும் தேர்ச்சிகளையும் உள்வாங்க வேண்டிய தேவையுள்ளது.** குறிப்பாக,

- ஆங்கிலக்கல்விக்கான முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு

*உலகமயமாதல், தகவல் தொழில்நுட்பப்புரட்சி, பொருளாதார மாற்றங்கள் போன்றன கல்வியை ஒரு விற்பனைப் பொருளாக மாற்றமடையைச் செய்துள்ளதுடன், நுகர்வோருக்கு தேவையானவற்றை சந்தைநிலையறிந்து தொழிலாளர்களை உற்பத்தி செய்யும் பொது ஊடக மொழியாக ஆங்கிலக்கல்வி மாற்றமடைந்து வருகின்றது.*

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களின் பாவனை, அவை தொடர்பான விழிப்புணர்வு

*தகவல் மற்றும் பல்லூடகத் தகவல்கள் தொடர்பான தேர்ச்சி, தகவல் தொடர்பாடல் சாதனங்கள், அவற்றின் பயன்கள், பிரயோகிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள், இடங்கள், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள், புதிய சாதனங்களின் வருகை பற்றிய விழிப்புணர்வு,*

*இலத்திரனியல் கருவிகள் மூலமான தொடர்பாடல் முறைகள் பற்றிய விளக்கமும் தேர்ச்சியும் அவசியமாகின்றது.*

- ஆளிடைத்தொடர்பு திறன்களும் (Interpersonal Skills)

*எழுத்துமூலத் தொடர்பாடல் திறன்கள், தேர்ச்சிகள்*

*வாய்மொழித் தொடர்பாடல் திறன்கள், தேர்ச்சிகள்*

*சைகை மூலம் மேற்கொள்ளப்படும் திறன்கள், தேர்ச்சிகள்*

*படங்கள், குறியீடுகள், ஒலி, ஒளி மூலம் மேற்கொள்ளப்படும் திறன்கள், தேர்ச்சிகள்*

*தனிநபர்களுக்கிடையிலான தொடர்பாடலுக்கு அவசியமான மனித விழுமியப்பண்புகளும், தொடர்பாடல் நுட்பங்கள், முறைகள் தொடர்பான தேர்ச்சி இங்கு முக்கியமாகக் கொள்ளப்படுகின்றது. குறிப்பாக*

வணக்கம் செலுத்துதல், அறிமுகப்படுத்துதல், தன் வினாக்களை தெளிவாக முன்வைத்தல், விடைகளை முன்வைத்தல், கருத்துக்களை தெரிவித்தல், விவாதித்தல், நன்றி கூறுதல் என பல்வேறு வகைப்பட்ட தொடர்பாடல் செய்முறைகளும், மற்றவர் கருத்துக்கு மதிப்பளித்தல், விட்டுக்கொடுத்தல், பாராட்டுதல், ஒத்துணர்வு, கருத்தை மரியாதையுடன் மறுத்துரைத்தல் போன்ற பண்புசார் திறன்களும் காணப்படுதல் அவசியமாகும்.

- சுய வழிப்படுத்தல (Self Directions) தேர்ச்சிகள்.

| | |
|---|---|
| வகைகூறுவதற்கான சுய வழிப்படுத்தல் - | கற்றல் கற்பித்தலில் |
| சமூக பொறுப்பிற்கான சுய வழிப்படுத்தல் - | சமூக இடைவினைச் செயற்பாடுகளில் |
| ஒத்துழைப்பதற்கான சுய வழிப்படுத்தல். - | அறிவு, மனப்பாங்கு, நடத்தை போன்றவற்றின் வெளிப்பாடு |

- கல்வி வளங்களை தேடிக்கற்கும் ஆற்றல்,

| | |
|---|---|
| தனியாள் வளங்கள், | சமுதாய வளங்கள், |
| எழுத்துவடிவ வளங்கள், | இலத்திரனியல் சாதனங்கள், |
| இயற்கை வளங்கள், | நானாவித சேகரிப்புக்கள், |
| பாடசாலையிலுள்ள வளங்கள் | |

- உபகரணங்களின் கையாள்கை

  பாரம்பரிய கற்றல் கற்பித்தல் சாதனங்கள்.

  எறிகருவிகள், இலத்திரனியல் ஊடகங்கள், மின்சாதனங்கள்

  கணினியும் அதனோடிணைந்த தகவல் தொழில்நுட்பக் கருவிகளும்

- வாசிப்புத் திறன் விருத்தியும் பரந்த வாசிப்பும்

| | |
|---|---|
| கற்றலுக்காக வாசித்தல் | கற்பித்தலுக்காக வாசித்தல் |
| பொழுது போக்கிற்காக வாசித்தல் | அறிவிற்காக வாசித்தல் |

  எழுத்துருக்களில் இருந்து மட்டுமன்றி படவுருக்கள். ஓவியங்கள், சித்திரங்கள் எல்லாவகையான புலக்காட்சியிலிருந்தும் நேர்சிந்தனையை வளர்த்துக்கொள்ளல

- செயற்பாட்டுக் கல்வியில் நாட்டங்காட்டுதல்

  குறிப்பிட்ட பாடவேளையில் கேட்டு, பார்த்து, தொட்டுணர்ந்து, செய்துபார்த்து, மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து கற்றல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதை உறுதிப்படுத்தல்

- பிரச்சினை தீர்க்கும் திறனும் சிந்தனையும்:

  பிரச்சினை இனங்காணல்,

  கருதுகோளமைத்தல் மற்றும் தீர்வுகாணல்

  புத்தாக்க ஆர்வமும், அறிவியலாண்மையும்

  விமர்சன சிந்தனையும், முறைமைச் சிந்தனையும்

- ஆய்வுகளில் ஈடுபடுதலும் செயல்திட்டங்களில் ஈடுபடுதலும்

  தனது வாண்மை விருத்திக்காகவும், மாணவரின் கற்றல் மேம்பாட்டிற்காகவும் ஆய்வு மற்றும் செயல்திட்டங்களில் ஈடுபடுவதுடன் மாணவரையும் ஈடுபடச் செய்தல்

- தன்னையும் தன்னைச் சாந்தவரையும், தன் சமூகத்தையும் பாதுகாக்கும் விழுமியங்களைப் பேணுதல் அவற்றைக் கடைப்பிடித்தல்

| | |
|---|---|
| நம்பகத்தன்மை | கொள்கை மாறாத தன்மை |
| மரியாதை செலுத்தல் | நியாயத்தன்மை |
| திறந்த மனது | ஒருங்கிணைப்புத்திறன் |
| மற்றவர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் | |

மேற்சொன்ன திறன்களும் தேர்ச்சிகளும் சம காலத்தின் தேவையாகவுள்ளது. மாற்றங்கள் சமூகத்தைச் சென்றடைய வேண்டுமென்றால் அவை ஆசிரியர்கள் மூலமாகவே சாத்தியமாகும். இன்று பல்வேறு துன்பநிலையில் அல்லலுறும் மக்கள் சமுதாயத்தின் விடிவிற்கும் விடிவுபிறக்கவும் வழிகாட்டமுடியும். ஆசிரியர்கள் தற்கால தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பயுகம், கோளமயமாக்கல், திறந்த பொருளாதாரம், போன்றவற்றின் தாக்கங்களுக்கு முகங்கொடுத்து தம்மைத் தயார்படுத்த வேண்டிய தேவை இன்றைய ஆசிரியர் குழாத்திடம் உள்ளது. அறிவியல் ரீதியாக மட்டுமன்றி, மனங்களினாலும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய தேவை ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி சமுதாய நிறுவனங்களில் உள்ள ஒவ்வொரு தனி மனிதரிடத்திலும் உள்வாங்கப்பட்டு செயலாற்ற வேண்டிய தேவை இன்றைய காலத்தின் கட்டாயமாகவுள்ளது.

---

"பாட நூல் தழுவிய அறிவு" "பாடநூல் கடந்த அறிவு" என்ற இருவகைச் செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்குரிய பொருத்தமான பிரச்சினைகளைத் தெரிந்தெடுத்தல் வாயிலாக வாழ்க்கை நீட்சிக்கற்றலை வளம்படுத்தலாம். வாழ்க்கை நீட்சிக் கற்றல் புதிய அறிவை நோக்கி நீளும் கற்றலாக அமைக்கப்படல் வேண்டும். இந்நிலையில் அறிவிலே காலாவதியானவர்களை இல்லாதொழிக்கலாம்.

பொருத்தமான பிரச்சினைகள் அறிவாதார உசாவல் விருப்பை (Epistemiccuriosity) தூண்டவல்லவை. இந்தச் செயற்பாடுகள் ஒருவரது அறிவு இருப்பில் நிலை மாற்றத்தை ஏற்படுத்த வல்லவை.

பிரச்சினைத் தளக்கற்றலில் ஆண்மாணவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களும் அணுகுமுறைகளும் பெண் மாணவிகளுக்கும் கிடைக்கப்பெறும் பொழுதுதான் பால்நிலைச் சமத்துவத்தைக் கல்வியில் ஏற்படுத்த முடியும். பிரச்சினைத் தளக்கற்றலை ஆண், பெண் இணைந்த குழுநிலையில் இயக்கிய பொழுது பின்வரும் செயற்பாடுகள் கண்டறியப்பட்டன. (யாழ். பல்கலைக்கழக ஆய்வு 27-02-2004)

1. ஆண்கள் சொல்வதை எழுதும் எழுதுவினைஞர்களாக பெண் மாணவிகள் ஆக்கப்பட்டனர்.
2. பெண் மாணவிகள் ஆண்களாற் கவனக் கலைப்புக்கு உள்ளாக்கப்பட்டனர்.
3. பொருளாதார வறுமைப் பின்புலத்தைக் கொண்ட பெண் மாணவி ஒருத்தி எவற்றிலும் பங்கு கொள்ளாத மௌன நிலையில் இருந்த வேளை அந்தப் பெண்ணைத் தூண்டி உற்சாகப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படாதிருந்தன.
4. பெண்களிடத்து அதீத பணிவும் ஆண்களிடத்து அடங்காத் துடிப்பும் நிலை நிறுத்தப்பட்டிருந்தன.

ஆண் மாணவர்கள் பெண் மாணவிகள் மீது வெறுப்பைக் காட்டவில்லை. மாறாக, பெண்களை அடக்கி ஆள்வதற்குரிய தந்திரோபாயங்களைப் பயன்படுத்திய வண்ணமிருந்தனர். குழுச் செயற்பாடுகளின் போது பரவலாக்கப்பட்ட தலைமைத்துவத்துக்குப் பதிலாக ஆண்களின் தலைமைத்துவமே ஒப்பீட்டளவில் மேலோங்கிய நிலையிற் காணப்பட்டது. தொடர்பாடல் திறன்களைப் பொறுத்தவரை இங்கிதமற்ற மொழிப்பிரயோகங்களும் "கிண்டல் மொழிகளும்" ஆண்களிடத்துச் சார்பு நிலையில் மேலோங்கல் கொண்டிருந்தன.


குழு உறுப்பினர்களிடம் நிகழ்ந்த உரையாடல்கள் பெருமளவில் ஆண்களின் கட்டுப்பாடுகளுக்கே உட்பட்டிருந்தன.

பிரச்சினைத் தளக்கற்றலின் வெற்றியும் சிறப்பும் குறித்த கற்றல் இலக்குடைய அர்ப்பணிப்புடன் தொடர்புடையது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட குழுவில் அனைத்து உறுப்பினர்களிடத்தும் இந்த அர்ப்பணிப்புக் காணப்பட்டது. புதிய புதிய கருத்துக்களின் தேவையைக் குழு உறுப்பினர்கள் தெளிவாக உணர்ந்து கொண்டனர். பிரச்சினைத்தளக்கற்றலைத் தமது பரீட்சையுடன் தொடர்பு படுத்திப்பார்த்தலிலே மாணவர்கள் தீவிர விருப்பு காட்டினார்களேயன்றி, தமது ஆளுமை வளர்ச்சிக்கு அதனால் கிடைக்கப்பெற்ற நன்மைகளைப் பற்றிய மதிப்பீடு மேலோங்கிக் காணப்படவில்லை.

எமது கல்வி முறையும், சமூக இயல்பும், தனிமனித இலாபங்களையே மிகையாக மீளவலியுறுத்தி வருகின்றமையால் பிரச்சினைத் தளக் கற்றலையும் மாணவர்கள் அதே கண்ணோட்டத்தில் எதிர் கொள்கின்றனர்.

*(நன்றி : "கல்வியும் பால்நிலைச் சமத்துவமும்", சபா ஜெயராசா, பக்-57-58)*

# ஒரு அதிபரின் டயரியில் இருந்து



-நிஷா-

2009 ஆம் ஆண்டு அதன் இறக்கையை விரித்து ஒன்றரை மாதங்கள் ஆகிவிட்டதா? காலத்தின் வேகமான சுழற்சியின் சூத்திரத்தை மட்டும் மனிதன் அறிந்து கொண்டால் இத்தனை வேகத்தை அனுமதிக்கமாட்டான் போலும்.

இந்த ஆண்டில் புதிய திட்டங்களுடன் வகுப்பறைக்குள் பிரவேசித்த வகுப்பாசிரியர்களை வகுப்பு தரிசிப்பிற்காக அனுகினேன்.

10ஆம் வகுப்பு C. உற்சாகமாக மொழி கற்பிப்பதில் ஈடு பட்டிருந்தார் திருமதி சீலன் என்னை கண்டதும் மாணவர்கள் எழுந்து வணக்கம் சொல்ல வகுப்பறைக்குள் நுழைகிறேன்.

5E வழி முறையைப் பின்பற்றுவதற்காக குழுக்களாகப் பிரித்த நிலையில் காட்சியளிக்கிறது வகுப்பு.

வகுப்பறைச் சுவர்களிலே மாணவக் குழுக்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது மனதிற்கு மிகவும் சந்தோசத்தை தருகிறது.

சிறுகதை இலக்கணம் பற்றிய அகிலனின் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற கட்டுரையில் இருந்து இவ்வாறான ஆரம்ப அறிமுகத்துடன் பாடத்தை தொடங்குகிறார் சீலன்.

சிறுகதை என்றால் அது அளவில் சிறிதாக இருக்க வேண்டும் தனி மனித வாழ்க்கை அல்லது சமூதாய வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட போக்கை அது சுவையோடு பிரதிபலிக்க வேண்டும். கதையின் கருப் பொருள் வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஒரு கதாபாத்திரத்தின் இயல்பைக் கூறுவதாகவோ ஆழமான மனித உணர்வுகளில் ஒன்றை வெளிப்படுத்துவதாகவோ வாழ்க்கையின் நிகழ்ச்சியை சுவைபட எடுத்துரைப்பதாகவோ வாழ்க்கையின் ஒரு சிக்கலை ஆழமாக அல்லது அழுத்தமாக எடுத்துக்காட்டுவதாகவோ இருக்கலாம். ஆனால் ஒரு மனிதன் அல்லது ஒரு உணர்வு அல்லது ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு சிக்கல்தான் அதில் தலை தூக்கி நிற்க வேண்டும். படித்து முடித்த உள்ளத்தில் எது ஊற்றுப் பெருக்கைப் போல் உணர்ச்சிகளைப் பூத்துச் சொரிகிறதோ அதுவே சிறந்த சிறுகதை எனக் கொள்ளலாம்.

அழகாக சிறுகதைக்கான விளக்கத்தை வகுப்புக்கு அளித்த அவர் சிறுகதைக்கு இலக்கணம் உண்டா? இல்லையா? என்பது பற்றிய உங்கள் கருத்துக்களை குழுவாக கலந்துரையாடி முன்வைக்குக என்ற குழுவுக்கான கேள்வியுடன் தனது கற்பித்தலை நிறுத்தி விட்டு மாணவர்களின் குழுச் செயற்பாட்டைக் கவனிக்கிறார். ஆசிரியரோடு சேர்ந்து குழுக்களின் பால் கவனத்தை செலுத்திய என் கவனத்தை குழு B யில் சிவந்த கண்ணும் சோர்ந்த முகமுமாய் இருந்த ஒரு மாணவி ஈர்க்கிறாள்.

திருமதி சீலனின் கற்பித்தலில் அதிகமாக மாணவர்கள் சென்றடைந்ததை அவர்களின் குழு முன்வைப்பு சுட்டிக் காட்டியது. அதற்காக அவரைப் பாராட்டி விட்டு வகுப்பறையை விட்டு வெளியேறி குழு B யின் குறிப்பிட்ட மாணவி பற்றி தனிமையில் விசாரிக்கிறேன்.

மெடம் அவள்ர பெயர் லிசா போன வருடம் 09 ஆம் வகுப்பில் நல்ல கெட்டிக்காரியா இருந்த பிள்ளை இப்போ வீட்டு வேலைகள் செய்து வருவதில்லை.

மற்றப்பாட ஆசிரியர்களும் இவ வகுப்பில் கவனம் செலுத்துவதில்லை எனக் குறிப்பிடுகிறார்கள்.

"காரணம் என்னவென லிசாவிடம் விசாரித்தீர்களா" எனக் கேட்டேன் ஓம் மெடம் இரவில் கணினி வகுப்பிற்கு போவதாக சொல்கிறாள் என்று அவர் முடிக்கவில்லை, என்னை மின்னல் தாக்கியது போன்ற ஒரு சாக்.

உடனே அந்த பிள்ளையை காரியாலயத்திற்கு வரவழைத்து அவரின் தந்தையை கூட்டிக் கொண்டு அடுத்த நாள் வரச் சொல்கின்றேன்.

ஏன் மெடம் என்று பயந்தவாறே கேட்ட லிசாவை ஒன்றுக்குமில்லை உங்கள் அப்பாவுக்குத் தெரிந்த ஒருவரை பற்றி விசாரிக்க வேண்டும் என்கின்றேன்.

உற்சாகமாக தலையாட்டியவாறே சென்ற லிசாவின் தந்தை அடுத்த நாள் என்னை காரியாலயத்தில் வந்து பார்க்கிறார்.

லிசாவின் நடத்தைக்கு என்ன காரணம் என்பதை அவரிடம் கேட்கிறேன்.

தெரியவில்லையே வீட்டில் கணினி வேண்டும் என்று கேட்டார்கள் அதனால் ஒன்று வாங்கிக் கொடுத்திருக்கின்றேன். இரவில் லிசா நாங்கள் தூங்கிய பிறகும் கணினியில் வேலை செய்து கொண்டிருப்பாள்.

நல்லா படிக்கக் கூடிய பிள்ளை தானே மெடம் தொந்தரவு செய்வானேன் என்று நாங்கள் போய்ப் பார்ப்பதில்லை என்கிறார் அவர்.

அவர் கூறியதை அழகாக செவிமடுக்கிறேன்.

பின்பு உங்கள் நன்மைக்காகதான் கூறுகிறேன் எதற்கும் இரவில் அவவின் அறையில் கணினியில் என்ன செய்கிறா என்பதை ஒருக்கா அவதானியுங்கள் என்கிறேன்.

கோபம் பொத்துக் கொண்டு வருகிறது லிசாவின் அப்பாவுக்கு.

என்ன பிள்ளையை சந்தேகப்படுகிறீர்களா எனக் கேட்டவாறே கதிரையை விட்டு விடுக்கென எழுந்து வெளியேறிச் செல்கிறார்.

02 கிழமை போகிறது.

லிசாவின் போக்கில் மாற்றமில்லை.

சிவந்த கண்ணும் சோர்ந்த முகமுமாய் வகுப்பில் தூங்கி வழியும் அவளின் பிரச்சினை என்னவென்று தெரியாமல் என்ன வழிகாட்டலைச் செய்வது? கடைசியில் நானும் வகுப்பாசிரியரும் லிசாவின் வீட்டுக்குச் செல்கிறோம்.

பொருளாதார வசதி நிறைந்த குடும்பம் அப்பா பேங் அலுவலகர்.

அம்மா சர்வதேச நிறுவனமொன்றில் எழுது வினைஞர்.

இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் கொண்ட அடக்கமான குடும்பம்.

லிசாவினுடைய அதிபரும் ஆசிரியரும் வீட்டுக்கு வந்த சந்தோஷத்தில் விழுந்து விழுந்து உபசரிக்கிறாள் லிசா.

விடைபெற்று வரும் வழியில் மெதுவாக லிசாவின் அம்மாவிடம் மகளின் நடத்தையை இரவில் கண்கானிக்கச் சொல்கிறேன்.

முன்பு ஒரு முறை உங்கள் கணவனிடமும் வேண்டுகோள் விடுத்ததைக் கூற அப்படி எதுவும் என் கணவர் சொல்லவில்லையென அவசரமாக மறுக்கிறார்.

எதற்கும் தான் அவதானிப்பதாக உறுதி கூறுகிறார்.

அடுத்த நாள் எனது காரியாலய அறையில் என்னைச் சந்திப்பதற்காக காத்திருக்கின்றனர் லிசாவின் பெற்றோர்.


என்னைக் கண்டதும் அழ ஆரம்பித்துவிட்ட பெற்றாரைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போடுகிறது.

சிறிது நேரம் ஒன்றும் பேசாது அவர்களை அவதானித்துக் கொண்டிருக்கிறேன்.

சிறிது நேரத்தில் நிதானமாய் பேச்சை முதலில் ஆரம்பித்தவர் லிசாவின் தந்தைதான்.

மோசம் போய்விட்டேன் மெடம்.

கணினி பாடங்களை இலகு படுத்தும் எல்லாப் பாடத்திற்கும் கணினி தேவையென்று சொன்னார்கள்.



புதிய விடயங்களை அறியவும் பாட அறிவை நிறையப் பெற்றுக் கொள்ளவும் internet வசதி நல்லதெண்டு சொன்னதால் தான் நான் கணினி ஒன்று வாங்கிக் கொடுத்தேன்.

ஆனால்இந்தப் பிள்ள படிக்கிறேன் படிக்கிறேன் என்று தேவையில்லாத விடயங்களையெல்லாம் internet இருந்து down load பண்ணி விடிய விடிய பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றது.

அதுமட்டுமில்லாமல் E-mail தொடர்புகளை ஏற்படுத்தி எல்லோருக்கும் அனுப்புறதும் எல்லோரும் இவக்கு தேவையில்லாத புகைப்படங்கள் அனுப்புறதுமாய் காலத்தைப் போக்கியிருக்கிறா மெடம்

உங்களுக்கு எப்படி நன்றி சொல்லதென்று தெரியல்ல மெடம் என்று கன்னத்தில் கோடாய் வழிந்த கண்ணீரோடு இரு கரங்களையும் கூப்புகிறார். "பரவாயில்லை காலம் கடந்து விடவில்லை.

கணினி தேவைதான். ஆனா சரியான மேற்பார்வை செய்யாதது உங்கட பிழை.

இனியாவது படிக்கிற பிள்ளை எங்க போகுது? எப்ப வருது? என்ன புத்தகம் பார்க்குது? யாரோட சேருது? என்ட விஷயங்கள் எல்லாம் மிச்சம் தெளிவாக பெற்றார் தெரிஞ்சு வச்சிக் கொள்ள வேண்டும்.

இல்லாட்டி பிள்ளைக்கு ஒரு நல்ல வழிய பெற்றாரால் காட்ட முடியாம போகும். இன்றைக்கு எத்தன பெற்றார் பிள்ளைகளை மாத்திரம் குறை சொல்லிக் கொண்டு படிக்கவில்ல பொறுப்பில்ல பழக்க வழக்கம் கூடாது போதை வஷ்த்து பயன்படுத்துகிறான் என்று சொல்கிறார்கள் இது அத்தனைக்கும் காரணம் பெற்றோரின் கண்காணிப்பின்மை என்பதை அவர்கள் விளங்கிக் கொண்டால் சரியென ஒரு சொற்பொழிவே ஆற்றி முடிக்கும் என்னை நன்றியுடன் கைகூப்பி விடை பெறுகின்றனர் லிசாவின் பெற்றோர்.

என்றாலும் இன்று எத்தனை லிசாக்கள் வசதி வாய்ப்பு என்ற போர்வையில் பெற்றாரின் கண்கரிப்பின்றி என்ற கேள்வி என்னை பூதாகரமாக தாக்கவே செய்தது.



**ப. அருந்தவம்**
ஆசிரிய ஆலோசகர்(விவசாயம்)
வலிகாம் கல்வி வலயம்
மருதனார் மடம்

வாழ்க்கைக்கல்வி

*பாடசாலைகள் தோறும் விவசாயக் கழகங்கள் அமைக்கப்பட்டு அதனூடாக விவசாய அபிவிருத்தி முயற்சிகளை உத்வேகப்படுத்தமுடியும். பாடசாலையில் விவசாயம் கற்கும் மாணவர் மட்டுமன்றி விருப்புடன் ஈடுபடும் சகல மாணவரையும் கொண்டதாக இக்கழகம் அமைக்கப்படும்*

# நாட்டின் விவசாய அபிவிருத்தியில் பாடசாலைகளின் பங்கு:

இலங்கை சிறந்த முறையில் உணவு உற்பத்தியை மேற்கொள்ளக்கூடியதொரு நாடாகும். இங்கு இதற்குரிய வளங்கள் மலிந்து காணப்படுகின்றன. அத்துடன் உணவுற்பத்தி முயற்சிகளில் முக்கியமானதாகக் கருதப்படும் விவசாயத்திற்கு பொருத்தமான காலநிலையும், நீர்வளம், நிலவளம் என்பனவும் சிறப்பாக அமைந்திருப்பது மிகவும் சாதகமான அம்சமாகும். தற்போது விவசாயமும் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைக்கும் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றன. அத்துடன் விவசாயத்தினூடாக நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இன்னும் வேலைவாய்ப்பைப் பெற்று வருகின்றனர். எனினும் பெறுமதி வாய்ந்த பல்வேறு வளங்களும் மனித உழைப்பும் பெருமளவில் காணப்பட்ட போதிலும் விவசாய முயற்சி மூலம் போதிய உணவுத் தன்னிறைவுத் தன்மையை நாம் இன்று வரை அடைய முடியவில்லை.

முதலாம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் இலங்கை தென்னாசியாவின் தானியக் களஞ்சியமாகத் திகழ்ந்தது. ஆனால் இன்று எமது பொன்னாடு உணவுத் தேவைக்குக் கூட மாற்று நாட்டில் கையேந்தி நிற்க வேண்டிய நிலை உள்ளது. இன்று எமது நாட்டு மக்களின் நுகர்வுக்கு வேண்டிய உணவில் 32% உணவை நாம் இறக்குமதி செய்கிறோம். இவ்வாறு நாம் இறக்குமதி செய்யும் பெரும்பாலான உணவுப் பொருட்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்பது மனவேதனைக்குரிய விடயமாகும்.

2010ம் ஆண்டளவில் எம்மால் செய்கை பண்ணக்கூடிய, உணவுப் பொருட்களின் இறக்குமதியை முற்றாகத் தடுக்கும் நோக்குடன் "நாம் பயிரிடுவோம் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலின் கீழ் உள்ளூர் உணவுற்பத்தியைத் துரிதப்படுத்தும் தேசிய வேலைத்திட்டம் ஒன்று இன, மத, சாதி, கட்சி பேதமின்றி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வேலைத்திட்டத்தில் மாணவரும் இணைவது இன்றியமையாதது.

**பாடசாலைகளின் செயற்பாடு:-**

பாடசாலைகள் தோறும் விவசாயக் கழகங்கள் அமைக்கப்பட்டு அதனூடாக விவசாய அபிவிருத்தி முயற்சிகளை உத்வேகப்படுத்தமுடியும். பாடசாலையில் விவசாயம் கற்கும்

மாணவர் மட்டுமன்றி விருப்புடன் ஈடுபடும் சகல மாணவரையும் கொண்டதாக இக்கழகம் அமைக்கப்படும். இக்கழகம் காலத்துக்குக் காலம் பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு மாணவர்களும் தம்மாலியன்ற பங்களிப்பை வழங்க முடியும்.

மேலும் தற்போது கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் 2008/12 படி தரம் 10, 11ல் வாராந்தம் ஒதுக்கப்பட்ட ஒரு பாடவேளை தேசிய முக்கியத்துவம் கருதி விவசாய பாடத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இம் மாணவரையும் இம்முயற்சியில் ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

**மாதிரிப் பாடசாலைத் தோட்டம் அமைத்தல்:-**

அபிவிருத்தி அடைந்துவரும் இன்றைய காலகட்டத்தில் நவீன விவசாய அறிவும், தொழில் நுட்பமும் இலங்கைக்கும் உரியதாகியுள்ளது. ஆனாலும் இவ் அறிவும், தொழில் நுட்பமும் இன்றும் நமது கிராமிய விவசாயிகளைப் பூரணமாகச் சென்றடைந்துள்ளது என்று கூற முடியாது.

இன்று பாடசாலைகள் அறிவை மட்டும் வழங்கும் நிறுவனங்களாகச் செயற்படுவதில்லை. இவை சமூகத்திற்கு தன்னாலியன்ற பங்களிப்பைச் செய்யும் இடமாகவும் திகழ்கின்றன. இதனால் இன்றைய பாடசாலைகள் சமூக இயக்கத்தின் அச்சாணிகளாகக் கருதப்படுகின்றன. இவை சமூகத்தில் காணப்படும் முன்னேற்றகரமான இயல்புகளை வளர்ப்பத்திலும், பின்னடைவான இயல்புகளைக் களைவதிலும் தன்னாலியன்ற பங்களிப்பைச் செய்யும் நிறுவனங்களாகவும் மாற்றங்கண்டு வருகிறது. மேலும் காலத்தின் தேவைக்கேற்ப அறிவையும், தகவல்களையும் பிள்ளைகளினூடாக சமூகத்திற்குப் பரப்பும் உன்னத பணியையும் இவை செய்து வருகின்றன. இந்த வகையில் பாடசாலையில் மாதிரிப் பாடசாலைத் தோட்டத்தை அமைத்து அங்கு முன்மாதிரியான செயற்பாடுகளில் ஈடுபடுவதனூடு நவீன செயற்பாடுகளை மாணவர் தளம் உள்வாங்கிக் கொள்வதுடன் தாம் வாழும் சமூகத்திற்கும் பரப்பி விவசாயிகளை பிற்போக்கான பாரம்பரிய முறைகளிலிருந்து விலக்கி நவீன விவசாயத்தினுள் நுழைந்து சிறப்பானதும், சீரானதுமான உணவுற்பத்திக்கு வழிவகை செய்தல் வேண்டும்.

**மாணவர் மத்தியில் வீட்டுத்தோட்டங்களைப் பிரபல்யப்படுத்துதல்:-**


நமது நாடு இன்றுவரை விவசாயக் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாடாகவே உணரப்பட்டு வருகிறது. எமது நாட்டில் வீட்டுத்தோட்டங்கள் பொதுவானதொன்றாகும். நாம் தற்போது எதிர்நோக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, மந்த போசணைநிலை, உணவுப் பேண்தகவின்மை போன்றவற்றிற்கான சிறந்த தீர்வாக வீட்டுத்தோட்டங்களைக் கருதலாம். எனவே தற்போதுள்ள வீட்டுத் தோட்டங்களை மேலும் மேம்படுத்துவதற்கு மாணவரை அதற்கேற்ப கையாண்டு நாட்டின் விவசாய அபிவிருத்திக்கு அத்திவாரமிடலாம்.

மாணவர் மத்தியில் வீட்டுத்தோட்டப் போட்டிகளை நடத்தி வெற்றிபெறுவோருக்கு தகுந்த வெகுமதிகளைக் கொடுப்பதன் மூலம் அவர்களிடையே ஆர்வத்தை மேலும் தூண்டலாம்.

சராசரி மனிதனொருவன் வருடம் ஒன்றிற்கு 74கி.கிராம் மரக்கறியும் 45 கி.கிராம் பழங்களும் உண்ண வேண்டும். ஆனால் இலங்கையில் சராசரி மனிதன் 37கி.கிராம் மரக்கறியும், 15 கி.கிராம் பழங்களுமே உண்பதாக ஆய்வு ஒன்று எடுத்துக் காட்டுகிறது. இங்கு மாணவர்கள் மூலம் வீட்டுத்தோட்டங்களைப் பிரபல்யப்படுத்துவதால் போசனைத் தேவையின் ஒரு பகுதியையேனும் ஈடுசெய்து கொள்ள முடியும். தகுந்த முறையில் வீட்டுத்தோட்டம் ஒன்றைத் திட்டமிட்டு உருவாக்கிப் பேணுவதன் மூலம் ஒரு குடும்பம் தமது வருமானத்தில் 30% இனை சேமித்துக் கொள்ள முடியும்.

இன்று பாடசாலைகள் அறிவை மட்டும் வழங்கும் நிறுவனங்களாகச் செயற்படுவதில்லை. இவை சமூகத்திற்கு தன்னாலியன்ற பங்களிப்பைச் செய்யும் இடமாகவும் திகழ்கின்றன. இதனால் இன்றைய பாடசாலைகள் சமூக இயக்கத்தின் அச்சாணிகளாகக் கருதப்படுகின்றன.

தமது உணவுத் தேவையின் ஒரு பகுதியை தமது வழிநடத்திலேயே உற்பத்தி செய்வதால், அந்த உற்பத்திப் பொருள்சார்பாகப் பொதியிடல், கொண்டு செல்லல், ஏற்றி இறக்கல், சேமித்தல், விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளின் போதான இழப்புகளும் தவிர்க்கப்படும். அத்துடன் நமக்கு வேண்டிய



உணவை நாமே உற்பத்தி செய்து கொள்வதால் தரமான பொருளை நுகர்வதுடன், இரசாயனங்களால் நஞ்சூட்டம் பெற்றுள்ளதா? எனும் ஐயமின்றி ஆரோக்கியமான உணவு வகைகளையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

வீட்டுத்தோட்டம் மாணவனின் சிறந்த பொழுதுபோக்கு முயற்சியாக அமைவதுடன், அவனிற்கு ஒரு பொருளாதார ஊன்று கோலாகவும் இது திகழ்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மாணவன் தனது பிரதேச உணவு உற்பத்திக்கு தன்னாலியன்ற பங்களிப்பைச் செய்கின்ற ஓர் உன்னத முயற்சியாகவும் இது அமையும்.

**விவசாய தினம் கொண்டாடுதல்:-**

பாடசாலைப் பயிர்நிலத்தில் நடப்பட்ட பயிர்கள் பூக்கும் காலத்தில் அல்லது அறுவடைக்குத் தயாராக உள்ள காலத்தில் மாணவரின் பெற்றோரையும் அயல் சமூகத்தையும் வரவழைத்து விவசாய தினம் ஒன்றை ஒழுங்கு செய்யலாம். இத்தினத்திற்கு வருகை தருபவர்களிற்கு பல்வேறு புதிய விவசாய விளைவை அதிகரிக்கும் உத்திகளையும் எடுத்துக் காட்டலாம்.

இத்துடன் இத்தினத்திற்கு விவசாயத் திணைக்களம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் போன்றவற்றின் அதிகாரிகளை வரவழைத்து அவர்களுடனான கருத்துப்பரிமாற்றத்திற்கும் சந்தர்ப்பத்தை வழங்கலாம். இச் செயற்பாடுகள் ஊடாக பல்வேறு நவீன கருத்துக்களும் பலரையும் சென்றடைய வாய்ப்பாக அமையும்.

**பொருட்காட்சிகள் ஒழுங்கு செய்தல்:-**

பாடசாலையில் குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையேனும் விவசாயப் பொருட்காட்சி ஒன்றை நடத்துவதன் மூலம் பாடசாலையைச் சுற்றியுள்ள சமூகத்திற்கு நவீன விவசாய செயற்பாடுகள் பற்றிய சிறந்த விளக்கத்தை அளிக்கமுடியும். அத்துடன் இப் பொருட்காட்சிக்கு வருகை தருவோருக்குச் சிறந்த தாவர இன வித்துக்கள், நாற்றுக்கள் நடுகைத் துண்டங்கள் என்பவற்றை இலவசமாக அல்லது குறைந்த விலையில் வழங்கி நாட்டின் விவசாய அபிவிருத்திக்கு ஊக்கத்தை வழங்கமுடியும்.

**உள்ளூர் உணவை உட்கொள்ளும் கலாசாரத்தைக் கட்டி எழுப்புதல்:-**

இன்று கூட நமது உள்ளூர் சந்தைகளில் நமது உள்நாட்டு உற்பத்திகளை விட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களிற்கே அதிக கிராக்கி காணப்படுகிறது. உதாரணமாக நமது நாட்டில் சிறந்த முறையில் உற்பத்தி செய்து நுகரக் கூடிய பல்-வேறு பழங்கள் இருந்தபோதும் நாட்டின் மூலை-முடுக்கெங்கும் உள்ள சந்தைகளில் அப்பிளும், ஒரேஞ்சுமே நிறைந்து காணப்படுகிறது. எனவே இவற்றைத் தவிர்ப்பதற்கு மாணவரை சிறுவயதிலிருந்தே உள்ளூர் உற்பத்திப் பொருட்களை நுகரும் கலாசாரத்தை பாடசாலையூடாக உருவாக்க வேண்டும். அப்பிளிற்கு பிரதியீடாக நமது நாட்டின் பல்வேறு பழங்களையும் உண்ணலாம். அத்துடன் இப்பழங்களின் மருத்துவ முக்கியத்துவம், போசாக்கு ரீதியான முக்கியத்துவம் போன்வற்றையும் எடுத்துக் காட்டி அவற்றின் பால் மாணவரையும், அவர்சார்ந்த சமூகத்தையும் கரிசனை கொள்ளச் செய்யலாம்.



**உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தியாகும் உணவுப் பொருட்களைப் பிரபல்யப்படுத்துதல்:-**

இலங்கையராகிய நாம் 2006ம் ஆண்டில் மட்டும் 13 இலட்சம் மெற்றிக்தொன் கோதுமை மாவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதிசெய்து நுகர்ந்துள்ளோம். இதற்கு நாடு 20 மில்லியன் ரூபாவுக்கு மேலான பணத்தைச் செலவு செய்துள்ளது. எனவே நாம் கோதுமைமாவிற்கு பிரதியீடாக நமது நாட்டில் உற்பத்தியாகும் அரிசி, சிறுதானியம் கொண்டு உருவாக்கும் உணவுப் பண்டங்களைச் செய்கை பண்ணும் தொழில் நுட்பங்களை மாணவருக்கு அறிமுகப்படுத்தி சமூகத்தில் இவ் உணவு வகைகளைப் பிரபல்யப்படுத்தலாம். இதன் மூலம் உள்ளூர் உணவுப் பொருட்களை நுகரும் செயற்பாடு மேம்படும்.

**பல்வேறு சர்வதேச தினங்களையும் கொண்டாடுதல்:-**

சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்ட பல்வேறு தினங்களையும் பாடசாலைகள் தமது இயல் அளவிற்கேற்ப கொண்டாடலாம். குறைந்தது அன்றைய நாளில் குறித்த தினத்துடன் தொடர்புடைய ஆற்றலுடையவரைக் கொண்டு ஒரு கருத்துரையினை காலைக் கூட்டத்தில் வழங்கலாம். விவசாய அபிவிருத்தியுடன் தொடர்பான சில தினங்கள்:-

மார்ச் 15 - அகில உலக நுகர்வோர் தினம்

ஏப்பிரல் 17 - சர்வதேச விவசாயிகளின் புரட்சிச் செய்பாட்டுத்தினம்

| | | |
|---|---|---|
| மே 22 | - | உலக உயிரினப் பல்லினத்துவ தினம் |
| ஜூன் 05 | - | உலக சூழல் தினம் |
| ஜூன் - 17 | - | ஐக்கிய நாடுகள் பாலைவனமாதல் மற்றும் வறட்சியை இல்லாதொழிக்கும் தினம். |
| ஒக்டோபர் 16 | - | உலக உணவு தினம் |
| ஒக்டோபர் | - | சர்வதேச வறுமை ஒழிப்புதினம் |
| டிசம்பர் 05 | - | சர்வதேச கிருமிநாசினி எதிர்ப்பு தினம். |

**வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்திட்டங்களைப பயன்படுத்துதல்:-**

1997ம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் தரம் 12, 13 மாணவர்களுக்கான பாடசாலை மட்டத்திலான வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்திட்டம் என அழைப்படும். இவ் வேலைத்திட்டத்தில் மாணவர் ஈடுபடும்போது நாட்டின் விவசாய அபிவிருத்தியுடன் தொடர்பான விடங்களில் மாணவர் ஈடுபடும் வகையில் வழிகாட்டல்களை மேற்கொள்ளலாம்.

**வாழ்க்கைத் தகைமை விருத்திக் செயற்திட்டங்களைப் பயன்படுத்துதல்:-**

1997ம் ஆண்டு புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் தரம் 12, 13 மாணவர்களுக்கான பாடசாலை மட்டத்திலான வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்திட்டம் என அழைப்படும். இவ் வேலைத்திட்டத்தில் மாணவர் ஈடுபடும்போது நாட்டின் விசவாய அபிவிருத்தியுடன் தொடர்பான விடயங்களில் மாணவர் ஈடுபடும் வகையில் வழிகாட்டல்களை மேற்கொள்ளலாம்.

**இளைஞர்கள் விவசாய முயற்சியில் ஈடுபடுவதை ஊக்குவித்தல்:-**

இன்றைய இளைஞர்கள் உடை கசங்காத தொழிலையே மேற்கொள்ள ஆர்வமாக உள்ளனர். கடின உடல் உழைப்பு மூலம் வருமானம் பெறும் தொழிலை நாடுவதில்லை. பாடசாலையானது மாணவரை எத்தொழிலிலும் ஈடுபடத்தக்க நற்பிரஜையாக உருவாக்க வேண்டும்.

பாடசாலைகள் மாணவனை பயிர்ச்செய்கை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி போன்ற தொழில்களில் ஈடுபடுவதற்கும் அவர்களை ஆர்வங்கொள்ளச் செய்தல் வேண்டும். நாம் சிறந்த முறையில் மேற்கொள்ளும் எத்தொழிலும் இழிதொழில் அல்ல என்பதை மாணவ மனங்கொள்ளச் செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையும், ஒவ்வொரு மாணவரும், ஒவ்வொரு தனிமனிதரும் தன்னாலியன்ற உணவுற்பத்தி முயற்சியில் ஈடுபட வேண்டும். குறைந்தது தாமே தமக்குரிய மரக்கறி, பழங்களையாவது உற்பத்தி செய்து உண்ணவேண்டும். வெற்று நிலங்கள் எங்கேனும் பயிர்செய்து நாட்டைப் பசும் போர்வையாக்க வேண்டும்.

வீட்டுக் கழிவுகளையும், தோட்டக் கழிவுகளையும் கூட்டுருவாக்க மண்வளத்தை மேம்படுத்த வேண்டும். இவ்வாறாக நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சிந்தித்து இதனை தமது தலையாய கடமையாகக் கொண்டு செயற்பட்டால் எமது நாட்டை சுபீட்சம் மிக்கதொரு நாடாகக் கட்டியெழுப்ப முடியும்.

---

பெண் ஆசிரியப் பணியாளர்களுக்கு நியமனம் வழங்கும் போது அவர்களது உடலியல் மற்றும் குடும்பநிலைகள், அவர்களின் தேவைகள் குறித்த பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர் எண்ணிக்கை பாடப்புலம் என்பன கருத்தில் கொள்ளப்படுவதில்லை. வாழ்க்கையின் உண்மையான நிறைவுத்தன்மை குடும்ப உறவிலேயே தங்கியுள்ளது. இவற்றினைக் கருத்தில் கொள்ளாது திருமணமானவர்களைக் கூட கணவனைக் கிழக்கிலும் மனைவியை வடக்கிலும் நியமனம் செய்து பாடசாலை வழங்குவது உண்மையான குடும்ப உறவை பாதிப்பதுடன் அவர்களது உள்ளாந்த மன உணர்வுகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் ஆசிரியப் பணி மீது உண்மையான விருப்பற்று செயலாற்றும் நிலை உருவாகின்றது. அதுமட்டுமன்றி குடும்ப மட்டத்தில் முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள், எதிர்ப்புக்கள் பல இடம்பெறக் காரணமாகின்றது. தாய்மையடைந்த நிறைமாதக் கர்ப்பிணி ஆசிரியைகள் நீண்டதூரம் போக்குவரத்துச் செய்வதால் உடல்உள ரீதியில் பாதிப்புக்குள்ளாகின்றன. பிள்ளையின் நிறைவான வளர்ச்சியும் பாதிப்புறுகின்றது. எதிர்கால இளம் சந்ததியினர் குறைபாட்டுடன் பிரவசிக்கப்படுவதற்கு முறையற்ற காரணமற்ற இடமாற்றங்கள் காரணமாகின்றன.

*(நன்றி: 'ஆசிரியத்துவமும் பால்நிலை அறிகையும்' திருமதி. கேந்திரேஸ்வரி இராதாகிருஷ்ணன், பக்: 103)*



# 5ம் தரப் புலமைப் பரீட்சையும் ஆசிரியமும்

விவாதம்

துரைமடன்

> நான் அவரிடம் நீங்களே இப்படிப் பிள்ளையை தனியார் வகுப்புகளுக்கு கொண்டு செல்வது, அதுவும் அந்த பிள்ளை களைப்புற்று சோர்வுற்று இருப்பதற்கு நீங்களே காரணமாவது சரியா? என்று கேட்டேன்.

சமீபத்தில் என்னுடன் படித்த சக தோழி ஒருவரை சந்தித்தேன். அவர் தற்போது ஆசிரியராகக் கடமை புரிகின்றார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். அதில் ஒருவர் தற்போது ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சைக்கு தயாராகிக்கொண்டிருக்கின்றார். அந்த தோழியுடன் ஐந்தாம் தர புலமைப்பரீட்சை தொடர்பிலான உரையாடல் ஏற்பட்டது. அவர் கூறிய கருத்துக்கள் என்னை திகைக்க வைத்தன.

'எனது பிள்ளை மூன்று தனியார் வகுப்புக்களுக்கு (ரீயூசன்) செல்வதாக குறிப்பிட்டார். தனக்கு நேரமே இல்லை. இந்தப் பிள்ளையை மாறி மாறி வகுப்புகளுக்கு கொண்டு செல்வதிலேயே எனக்கு நேரம் போகுறது' என்றார்.

நான் அவரிடம் 'நீங்களே இப்படிப் பிள்ளையை தனியார் வகுப்புகளுக்கு கொண்டு செல்வது, அதுவும் அந்த பிள்ளை களைப்புற்று சோர்வுற்று இருப்பதற்கு நீங்களே காரணமாவது சரியா?' என்று கேட்டேன். ஆனால் அவரோ 'ஒரு ரீச்சருடைய பிள்ளை இந்தப் பரீட்சையில் பாஸ் பண்ணாவிடில் என்னுடைய கௌரவம் என்னாவது' என்றார்.

அப்படியானால் உங்கள் கௌரவத்திற்காக இந்த பிள்ளையை பாடாப்படுத்துவது சரியா? அதுவும் நீங்கள் கல்வி உளவியல் எல்லாம் படித்தவர். நீங்களே இந்த மாதிரி நடந்தால் சாதாரணமானவர்கள் இதைவிட மோசமாகவல்லவா நடப்பார்கள். நீங்கள் எல்லாம் படித்தவர்கள். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டியவர்கள். இப்படி பிள்ளைகளின் மனப்பாங்கு விருத்திக்கும் ஆக்கச் செயற்பாடுகளுக்கும் எதிராக பிள்ளைகளை நடத்திக் கொண்டு இருப்பது எந்த விதத்தில் சரி.

இப்படியெல்லாம் அந்த நண்பியுடன் பேசும் பொழுது அவர் எல்லாம் சரிதான் நாமும் இந்த சமூகத்தில் தானே வாழ்கிறோம். 'நாளைக்கு என்னுடைய பிள்ளை சித்தியடையவில்லை என்றால் எனக்கல்லவோ தலைக்குனிவு' என்று கூறிக்கொண்டே இருந்தார்.

இன்று ஆசிரியர்கள் பெற்றோர்களாகவும் உள்ளார்கள். குறிப்பாக ஐந்தாம் தர புலமைப் பரீட்சைக்கு தயார்ப்படுத்தும் அவசர கோலத்தில் அள்ளுண்டு வரும் ஆசிரியர்களும் நம் மத்தியில் உள்ளார்கள். இவர்களுக்கு தாம் படித்த கல்வித்தத்துவம், கல்வி உளவியல் என்பவையெல்லாம் பரீட்சை பெறுபேறுகள்

சார்ந்த விடயமாக மட்டுமே உள்ளன. வகுப்பறையில் இவர்கள் காட்டும் முகமும் வீட்டில் இவர்கள் காட்டும் முகமும் வேறு வேறானவை. தங்கள் சுய கௌவரத்தை நிலைநாட்டுவதற்கு 5ம் தரபுலமைப் பரீட்சையை ஒரு படிக்கல்லாகவே நோக்குகிறார்கள். இது வேதனைக்குரியது.

சாதாரணமானவர்கள் தங்கள் பிள்ளைகள் கல்வியில் முன்னேற வேண்டும் என எதிர்பார்ப்பது நியாயமானது. பொதுப் பரீட்சைகளில் தங்கள் பிள்ளைகள் அதிபுள்ளிகள் பெற வேண்டுமென விரும்பி அதற்கு மட்டுமே பிள்ளைகளை தயார்படுத்தும் ஒரு யந்திரத்தனத்துக்குள் அவர்கள் இழுபடுவதை நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் ஆசிரியர் சமூகத்திற்குள் இத்தகு சாதாரண மனநிலையில் இயங்குபவர்களை நாம் என்னவென்று கருதுவது.

ஒரு மாணவனின் திறமைகளையும் ஆற்றல்களையும் ஒரு குறிப்பிட்ட மணித்தியாலங்களில் நடத்தப்படும் 'பேப்பர் பேனா' பரீட்சைகளினால் தீர்மானிக்க முடியுமா? இந்தக் குறைபாடு ஏன் எம்மில் பெரும்பாலோருக்கு விளங்குவதில்லை. மாணவனின் அடைவு மட்டம் இந்த குறுகிய சில மணித்தியாலங்களுள் எழுதும் பரீட்சைகளினால் மட்டும் தீர்மானிக்க முடியாது.

பாடசாலைகள் பிள்ளைகளை சமூக வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்கின்ற நிறுவனம் என்ற நிலையில் இருந்து, பல்வேறு புதிய மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது. அதாவது பாடசாலைகள் சமூகத்தில் ஏற்றுக் கொண்ட பொறுப்புக்களும் வகைசொல்லலும் விரிவடைந்து வருகின்றது. ஆனால் நாம் குறிப்பிட்ட சில பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்வது பாடசாலை கல்வியின் முக்கிய நோக்கமாக இருந்து வரும் இந்த மரபு இன்னும் மாற்றமடையாமலே உள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தங்கள் புதிய கல்விக் கொள்கைகள் யாவும் புதிய மனிதரை உருவாக்குவதற்கான மற்றும் மாறிவரும் உலகில் ஏற்படும் சவால்களுக்கு ஏற்ப வாழ்வதற்கான தகுதிகளை வளர்த்துக் கொள்வதற்கான விருத்திக் கோலங்களை பாடசாலை கலாசாரம் தனக்குள் உள்வாங்கிப் பேணி வரவேண்டும்.

ஆனால் நடைமுறையில் என்ன நடைபெறுகின்றது? எந்த புதிய கல்விச் சீர்திருத்தங்களும் எம்மை மாற்றியமைக்கவில்லை. புதிய கலாசார உணர்திறனுக்கான ஏற்பாடுகள் பொருந்தி வரவில்லை. மாறாக சில குறிப்பிட்ட பரீட்சைகளுக்கு தயார்படுத்தும் நோக்கமே உயர்ந்ததாக இன்றுவரை நோக்கப்படுகின்றது. இதற்கு ஆசிரிய பெற்றோர்களும் மாட்டிக்கொள்ளவே செய்கிறார்கள்.

* * * * *

குறிப்பிட்ட ஒரு பாடசாலையில் 5ம் வகுப்பில் மூன்று பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் சுமார் 40 மாணவர்கள் வரையில் உள்ளனர். இந்த பாடசாலையின் அதிபர் 5ம் தரப் புலமைப்பரீட்சையில் எமது மாணவர்களுள் சுமார் 70பேர் வரையிலானோர் சித்தியடைய வேண்டுமென்ற எதிர்பார்ப்புக் கொண்டவர். இதனையே ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தலாகவும் வழங்கிக் கொண்டு இருக்கிறார்.

***பிரிவு*** - A தரம் பிரித்த மாணவர் தொகுதியை கொண்டது. அதாவது இவர்கள் கெட்டிக்கார மாணவர்கள் என்று குறிப்பிடலாம். இந்த வகுப்பாசியர் இந்த வகுப்பாசிரியர் கற்பித்தலில் ஆர்வம் கொண்டவர். இவர் வேறு இடங்களில் உள்ள மாதிரி வினாத்தாள்களையெல்லாம் மாணவர்களை வாங்க வைத்து தனது கற்பித்தல் நடவடிக்கையை தொடர்ந்து கொண்டு இருப்பவர். இதைவிட எந்த ஒரு மாணவரும் வகுப்புக்கு சமூகம் தராமல் இருக்கக்கூடாது என்ற நிபந்தனையையும் முன்வைத்துள்ளார். எப்போதும் வகுப்பறையில் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் மட்டும்தான் குறியாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும் மனப்பாங்கு கொண்டவர். வகுப்பறை எப்போதுமே மாணவர்களது மகிழ்ச்சிகள் விழுங்கிக் கொண்டிருக்கும். இந்த மாணவர் தொகுதியிலும் அரைவாசிப் பேர் 'மொக்குகள்' என்று அடையாளம் காட்டுவதில் இந்த ஆசிரியர் தனது கெட்டித்தனத்தை வெகுவாக காட்டக்கூடியவர்.

இவ்வாறு காட்டக்கூடிய மாணவர்களுக்கு கேள்வி நியாயம் எதுவும் இன்றி உடனே தண்டனை கொடுப்பதில் ஆசிரியரை விட அதிபர் வலு கெட்டிக்காரர். சில நேரம் சில மாணவர்கள் தங்கள் பெற்றோர்களை அழைத்து வந்தால் மட்டுமே வகுப்பறைக்கு அனுமதிப்பார். கடும் சட்ட திட்டங்கள் கல்வியின் பெயரால் முன்வைக்கப்படுகிறது.

***பிரிவு*** - B ஆசிரியர் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பார். தாம் மட்டும் அல்ல வகுப்பறைச் சூழலும் மாணவர்களும் கூட மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பார். அத்தகு மனப்பாங்கு நிலை நின்றே தனது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பார். இங்கு மாணவர்கள் விருப்புடன் கற்கிறார்கள். ஒருநாள் லீவு எடுப்பதாயினும் கூட மாணவர்கள் ஆசிரியரிடம் முன் கூட்டியே அனுமதி பெற்றுச் செல்கிறார்கள். அதைவிட அந்த ஒரு நாள் தங்களுக்கு பெரும் இழப்பாகவும் கருதுகிறார்கள்.

ஆனால் அதிபர் இந்த ஆசிரியருடன் எப்போதுமே முரண்பட்டுக் கொண்டு இருப்பார். இந்த ஆசிரியர் ஒன்றுமே கற்பிப்பதில்லை. பிள்ளையுடன் சேர்ந்து கும்மாளம் போட்டுக்கொண்டு இருப்பதாகவே அவர் நினைப்பு. இந்த மாணவர்களது சில பெற்றோர்களும் கூட இந்த ஆசிரியரை மாற்ற வேண்டுமென எத்தனையோ முறை அதிபருக்கு முறைப்பாடு இட்டுள்ளார்கள். ஆனால் இந்த ஆசிரியர்களது கற்பித்தலில் மாணவர்கள் அதிகம் நாட்டம் உள்ளவர்களாகவே இருந்து வருகின்றார்கள்.

***பிரிவு*** - C மாணவர்கள் ஏற்கனவே தரப் பிரிப்பு வடிகட்டலில் மிகவும் கீழானவர்கள். இந்த வகுப்புக்கு

ஆசிரியாராக நியமிக்கப்பட்டவரும் கூட சோம்பல் மனப்பான்மை கொண்டவர். புத்தாக்கமான ஆக்க மறுமலர்ச்சிச்சிந்தனைவயப்படாதவர். ஆனால் எப்போதும் கையில் பிரம்பு வைத்துக்கொண்டு மாணவர்களை அதட்டி வெருட்டி அமைதியாக வைத்திருப்பதே தனது பெரும் பணியாக கருதுகின்றார்.

மாணவர்களின் கற்றல் திறன்களை விருத்தியாக்குவதிலும் மகிழ்ச்சிகரமான கற்றலுக்குள் மாணவர்களை உள் வாங்குவதிலும் இந்த குறிப்பிட்ட ஆசிரியர் பெரிதும் அக்கறை செலுத்துவதில்லை. இதைவிட இவர் வகுப்பறைக்கு வெளியிலான ஏனைய பணிகளில் தான் அதிகம் நாட்டம் கொண்டவர். அதிபரும் இதை தான் ஊக்குவித்து வருகிறார்.

இந்த வகுப்பில் உள்ள மாணவர்களது பெற்றோர்களும் அடிக்கடி பாடசாலைக்கு வந்து தங்கள் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடுவதோ அல்லது தங்கள் அவதானங்களை தெரிவிப்பதோ மிகக் குறைவு. இதே நேரம் இந்த வகுப்பில் உள்ள 6 மாணவர்கள் தங்கள் வகுப்புப் பிரிவை மாற்றித் தரும் படி நேரடியாக அதிபரிடம் கேட்டும் மற்றும் பெற்றோர்கள் மூலம் தெரியப்படுத்தியும் கூட இதற்கு பொருத்தமான மாற்று நடவடிக்கைகள் எதனையும் அதிபர் மேற்கொள்ளவில்லை. இதனால் அந்த மாணவர்கள் படிப்படியாக அந்த பாடசாலையில் இருந்து இடைவிலகிச் செல்லும் நிலைமையும் ஏற்பட்டது.

பிரிவு - A இல் உள்ள 4 மாணவர்கள் தொடர்ந்து உளப்பாதிப்புக்குள்ளாகி பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் நிலைமையும் ஏற்பட்டது. பிரிவு - B யில் உள்ள மாணவர்கள் மகிழ்ச்சிகரமான கற்றலில் மட்டுமல்ல படைப்பாக்கத்திறன் கொண்டவர்களாகவும் வெளிப்பட்டார்கள். ஆசிரியர் - மாணவர், மாணவர் - மாணவர், ஆசிரியர் - பெற்றோர் இடையிலான உறவு மேம்பட்டதாகவே இருந்தது. எதிர்பார்த்தது போல் இந்த வகுப்பில் உள்ள மொத்தமான 39 மாணவர்களும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள். இதைவிட இந்த வகுப்பு ஆசிரியரும் பின்னர் இந்த பாடசாலையில் இருந்து வேறு பாடசாலைக்கு மாற்றம் பெற்று சென்றுவிட்டார். பிரிவு - C யில் 9 மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெற்றார்கள்.

**இடையீடு**

இந்த பாடசாலையின் அதிபரின் முகாமைத்துவம் சரியானதா?

ஒரே வகுப்பில் உள்ள மாணவர்களை மேல் இடைக் கீழ் என வகைப்படுத்துவது சரியானதா?

மாணவர்களிடையே வேறுபாடுகள் உருவாக்கும் கோலங்கள் நடைமுறைகள் வெளிப்படுவது சரியா?

பிரிவு - A ஆசிரியர் பணி சரியா?



பிரிவு - C ஆசிரியர் ஆசிரியர் பணிக்கு மிகப் பொருத்தமானவரா பிரிவு - B ஆசிரிய பணியை அதிபர் மற்றும் பெற்றோர் புரிந்து கொள்ளாமைக்குரிய காரணம் என்ன?

பிரிவு - B ஆசிரியரின் பொருத்தமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் விளைவை புரிந்து கொள்ள முடிகிறதா? பாடசாலைக்கு அதிபராக இருக்கும் தகுதியை இந்த குறிப்பிட்ட அதிபர் கொண்டுள்ளாரா? பெற்றோர் சமூகமும் பாடசாலையும் இணைந்து செல்ல வேண்டுமா அப்படியாயின் நாம் பின்பற்றக்கூடிய நடைமுறைகள் என்ன?

பாடசாலைகள் பெற்றோர் ஆகிய இரு சாராரினதும் புரிந்துணர்வின் அடிப்படையில் நாம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் என்ன?

பாடசாலைகளில் கற்பித்தல் மாத்திரமன்றி பிள்ளைகளின் உடல் உள வளர்ச்சி மற்றும் சமூகத் தொடர்பு போன்ற தேவைகளுக்கான இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது அவசியமல்லவா?

பாடசாலைகள் வெறுமனே பரீட்சைகளுக்கு தயார் செய்யும் நிறுவனங்கள் அல்ல. இந்த புரிதல் ஏன் எம்மிடையே செல்வாக்குச் செலுத்தவில்லை.

பிள்ளைகள் சுயமாக கற்பதற்கான நேரத்தை ஒதுக்கீடு செய்வதில் பாடசாலைகள் எந்தளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

பாடசாலைக்கு வேண்டிய தகவல்களை வெளிப்படுத்துவது பெற்றோர்களது பூர்ணமான உதவியையும் உத்திழைப்பையும் பாடசாலை பெற்றுக்கொள்கிறதா? இதற்கான வழிமுறைகள் உண்டா?

இன்று பாடசாலைகள் மீது ஏற்பட்டுவரும் எதிர்பார்க்கைகள் என்ன?

ஆசிரியர்கள் மகிழ்ச்சியுடன் தொழில் செய்ய முடியாமல் இருப்பதற்கான காரணங்கள் என்ன?

இன்று எதிர்பார்க்கப்படும் கல்வி அடைவு மட்டங்களை நோக்கிச் செல்வதற்கு பாடசாலை முகாமைத்துவ அணுகுமுறைகளில் ஏற்படவேண்டிய மாற்றம் என்ன?

இதுபோல் இன்னும் கேள்விகள் தொடரலாம்....

# ஆசிரிய வாண்மை விருத்தியில் செயல்நிலை ஆய்வின் வகிபங்கு

முனைவர் த. கலாமணி,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஆசிரியம்



## வாண்மையாக ஆசிரியம்

ஆசிரியத் தொழில் இன்று ஒரு வாண்மையாகக் (Profession) கொள்ளப்படுகின்றது. வாண்மை என்பது உயர் தொழிலைக் குறிக்கும் ஒரு பதமாகும். வாண்மை என்ற பதப்பிரயோகத்துடன் வாண்மைத்துவம் (Professionalism), வாண்மைத்துவப் பொறுப்பு (Professional Responsibility), வாண்மைப் பயிற்சி (Professional Training) ஆகிய பதங்களும் இன்று புழக்கத்தில் உள்ளன. வாண்மைத்துவம் என்பது இரு அடிப்படை அம்சங்களை உள்ளடக்கியது. அவையாவன:

1. அது வாடிக்கையாளரை முதன்மைப்படுத்துவது (Client-Centered)

2. அது அறிவை அடியாதாரமாகக் கொண்டது (Knowledge - Based)

ஆசிரியம் (Teacher Profession) ஒரு வாண்மை என்ற வகையில் வாண்மைத்துவம் குறித்த இவ்விரு அம்சங்களின் அடிப்படையிலேயே ஆசிரியரின் கடமைப் பொறுப்புகள் வரையறை செய்யப்பட வேண்டும். அதாவது தனது வாடிக்கையாளர்களான மாணவர் நலன்களை முதன்மைப்படுத்துவதாகவும், அறிவார்ந்த நிலையில் தனது செயல் ஆற்றுகையை (Performance) முன்னெடுப்பதாகவும் ஆசிரியத்துவம் அமைய வேண்டும்.

ஆசிரியம் ஒரு வாண்மையாகக் கருதப்படும் நிலையில் இன்று ஆசிரியர்களுக்குப் புலமை சார்ந்த அதிகாரம் தரப்பட்டுள்ளது. இதனால், ஆசிரியர்கள் தமது செயலாற்றுகையின் தரத்துக்குப் (Quality Performance) பொறுப்புக் கூற வேண்டியவர்கள் ஆவர். இப்பொறுப்பானது வாண்மைத்துவப் பொறுப்பு (Professional Responsibility) எனப்படும். இது, ஒவ்வொரு மாணவரும் தமது முழுவலுவை அடையச் செய்யும் வகையில் அம்மாணவர்களுக்கு உதவுதலைக் குறிக்கும். இவ்வகையில் ஆசிரியரின் கடமைப் பொறுப்புகளாக பின்வருவனவும் உள்ளடக்கப்படுகின்றன.

1. ஆராய்வுச் செயன்முறையினூடாக மாணவர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல்.

2. அவ்வழிமுறைகளைப் பிரயோகித்து அவற்றின் பலாபலன்களை மதிப்பீடு செய்தல்

*ஆசிரியம் ஒரு வாண்மையாகக் கருதப்படும் நிலையில் இன்று ஆசிரியர்களுக்குப் புலமை சார்ந்த அதிகாரம் தரப்பட்டுள்ளது. இதனால், ஆசிரியர்கள் தமது செயலாற்றுகையின் தரத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் ஆவர்.*

3. இம்மதிப்பீட்டின் அடிப்படையில் கல்விச் செயற்பாடுகளை மீளமைத்தல்.

இப்பொறுப்புகளை ஆசிரியர் ஒருவர் நிறைவேற்ற வேண்டுமெனின், புதிய அறிவு, புதிய திறன்கள், புதிய முறைகள், புதிய நுட்பங்கள், புதிய உபாயங்கள் என்பன குறித்து ஆசிரியர் கரிசனை கொள்ள வேண்டும். இவற்றை ஆசிரியர்களுக்கு வழங்குவதாகவே வாண்மைப்பயிற்சி (Professional Training) அமைய வேண்டும். ஆசிரியம் ஒரு தொடர் தொழில் (Career) என்ற வகையில் இப்பயிற்சி தொடர்ச்சியானதாகவும் நீடித்ததாகவும் அமைய வேண்டும். வாண்மைப் பொறுப்புக்கும் அப்பால் ஆசிரியர்கள் முகம் கொடுக்க வேண்டிய மற்றுமொரு சவாலும் ஆசிரியர்க்குண்டு. இன்று, கல்விக்குரிய முதலீடும் வளங்களும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, சமூகத்தாலேயே நிறைந்த எதிர்ப்பார்ப்புகளுடன் வழங்கப்படுகின்றன. எனவே முழுச் சமூகத்துக்கும் பொறுப்புக்கூறல் அல்லது வகை கூறல் (Accountability) என்பது ஆசிரியம் எதிர்நோக்கும் முக்கிய அறைகூவலாக விளங்குகின்றது.

மேலும், இருபதாம் நூற்றாண்டிலும் இருபத்தோராம் நூற்றாண்டின் முற்கூறிலும், விஞ்ஞான - தொழிநுட்ப - இலத்திரனியல் துறைகளின் வளர்ச்சி காரணமாகவும் சாதன விருத்தி காரணமாகவும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற உலகியல் மாற்றங்கள் பிரமிப்பையூட்டுவன. இம்மாற்றங்கள் காரணமாக கல்விப் புலத்திலும் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளன. இதனால் கல்வி இலக்குகளும் குறிக்கோள்களும், பாடப்புலம் கலைத்திட்ட அமைப்பும் விருத்தியும், முறையியல், கல்வி வளப்பகுப்பாய்வு, வகுப்பறை முகாமைத்துவம், பாடசாலை நிர்வாகம் என விரியும் பல்வேறு துறைகளிலும் மாற்றங்கள் நிகழும். பாடசாலைகளில் இம்மாற்றங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய முக்கிய முகவர்களாக (Change Agents)வும் ஆசிரியர்களே விளங்குகிறார்கள்.

மாற்றமொன்று நேரானதாகவும் வெற்றிகரமாகவும் அமைவதற்கு அம்மாற்றத்தை முன்னெடுப்பவர்கள் அச்செயன்முறையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதோடு, அம்மாற்றத்துக்கு உரித்துடையவர்களாகவும் தம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பது அனைவரதும் ஏகோபித்த கருத்தாகும். ஆசிரியர்கள் (அதிபர்களும் கூட) தம்மை எவ்வளவு தூரம் இதில் ஈடுபடுத்திக் கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே வெற்றியும் தோல்வியும் அமையும். மாற்றம் காண்பதற்கான உபாயங்கள், வெற்றியைத் தரவல்ல அநுபவங்களில் கல்வியாளர்களை ஈடுபாடு கொள்ளச் செய்யும்போதே, நின்று நிலைக்கவல்ல, நீடித்த மாற்றம் நிகழ முடியும். இவ்வகையில், மாற்றச் செயன்முறையில் (Change Process) கல்வியாளர்களை ஈடுபாடு கொள்ளச் செய்வதற்கான ஓர் உபாயமே செயல்நிலை ஆய்வு ஆகும்.

உலகப் போக்குகளை ஒட்டியதாக, காலத்துக்குக் காலம் கல்வியில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் கல்விச் சீர்திருத்தங்களாக முன்வைக்கப்படுவது வழக்கம். இக்கல்விச்சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்காகப் பயன்படுத்தப்படக்கூடிய ஏனைய உபாயங்களைவிட, செயல்நிலை ஆய்வு நடவடிக்கைகளில் கல்வியாளர்களை ஈடுபடுத்துதல் அதிசக்தி வாய்ந்த ஓர் உபாயமாகும்.

### செயல்நிலை ஆய்வு பற்றிய விளக்கம்

மரபுவழி ஆய்வாளர் ஒருவர், வழமையாக, கல்விப் பிரச்சினை ஒன்றை அல்லது கல்விசார் விவகாரம் ஒன்றை ஆராய்ந்து அதுகுறித்த தனது கண்டறிதல்களை வெளியிடுவார். இக்கண்டறிதல்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொதுவாக அதிபர்களிடமோ அல்லது வகுப்பாசிரியர்களிடமோ விடப்படுகின்றது. கொள்கை யொன்றை விரிவுபடுத்துவதோ அல்லது புதிய கொள்கையொன்றை உருவாக்குவதோதான் மரபுவழி ஆய்வின் உத்தேச நோக்காகும். இதற்கு மாறாக, செயல்நிலை ஆய்வில் ஈடுபடும் கல்வியாளர்கள் தமது தொழிலைச் சிறப்பாகச் செய்வதற்கு அவசியமான வழிமுறைகளைக் கண்டறியும் பிரதான நோக்கோடு, குறித்த விவகாரம் ஒன்றுடன் சம்பந்தப்பட்ட குறிப்பான ஒரு குழுவினரைப் பற்றியும் அவ்விவகாரம் தொடர்பான சூழமைவு பற்றியும் சிந்திக்கின்றனர். குறிப்பான பிரச்சினைக்குரிய அந்நிலைமைகளிலிருந்து அவர்களை விடுவித்து முன்னேற்றம் காணல் செயல்நிலை ஆய்வின் பிரதான நோக்கமாகும். பாடசாலையில் அல்லது வகுப்பறையில் இடம்பெறும் நாளாந்த நடவடிக்கைகளுடன் கூடியதாகவே, செயல்நிலை ஆய்வையும் மேற்கொள்ள வேண்டியது கல்வியாளரின் பொறுப்பாகின்றது. நடைமுறையை ஆராய்வுக்கு உட்படுத்தி (Practice as - Inquiry), அதன்பேறான கண்டறிதல்களை உடனடியாக நடைமுறையில் பிரயோகிக்கும் முதன்மையான இலக்கைக் கொண்டது செயல்நிலை ஆய்வாகும். இவ்வகையில், செயல்நிலை ஆய்வானது கல்வியாளர்களின் உடனடியான விவகாரங்களுக்கும் வினாக்களுக்கும் விடைகாண முயல்கின்றது.

### செயல்நிலை ஆய்வின் ஆரம்பம்

சமூக விஞ்ஞானத் துறையிலும் கல்விசார் பிரச்சினைகளிலும் விஞ்ஞான முறையைப் பிரயோகிக்கும் ஒரு வழிமுறையாகவே செயல்நிலை ஆய்வு ஆரம்பமானது. சுதேச அமெரிக்க விவசாய நடவடிக்கைகளுக்குப் பங்களிப்புச் செய்த ஓர் ஆய்வின் கூட்டிணைந்த செயல் நடவடிக்கைகளின் விபரிப்பாகவே "செயல்நிலை" ஆய்வு என்ற பதப்பிரயோகம் Collier (1945)என்பவரினால் விருத்தியாக்கப்பட்டது. 1940களில், "குழுஇயக்கம்" (Group dynamics) சம்பந்தமான ஆய்வு நடவடிக்கைகளுக்குத் தலைமை

தாங்கியவர்களுள் ஒருவரான Lawing, சமூக சேவையாளர்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பரிசோதனைகளில் செயல்நிலை ஆய்வைப் பயன்படுத்தினார்.

மாற்றத்துக்கான ஒரு செயன்முறையாக செயல்நிலை ஆய்வு வெற்றி அளித்ததன் காரணமாக, 1950களில், கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் கல்லூரியின் பீடாதிபதியாக இருந்த Corey என்பார், கற்பித்தற் செயன்முறையில் செயல்நிலை ஆய்வுக் கோட்பாடுகள் பிரயோகிக்கப்படுவதற்குக் காரணகர்த்தராக விளங்கினார். தமது சொந்தத் தொழில் நடைமுறைகள் குறித்த தெறிப்புச் சிந்தனையில் ஆசிரியர்கள் ஈடுபடுவார்களேயானால் அவர்கள் தமது நடத்தைக் கோலங்களை மாற்றியமைத்து, தமது தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள் எனவும் Corey நம்பினார்.

1960களில், நிறுவன விருத்திசார் நடவடிக்கைகளிலும் மனிதத் தொடர்பு விருத்திப் பயிற்சி நெறிகளிலும் முதன்மையாக செயல்நிலை ஆய்வு பயன்படுத்தப்பட்டது. "தொழில் அநுட்டானம் செய்பவர்களே தமது நடைமுறைகள் குறித்த செய்முறை ஆய்வை மேற்கொள்ளலாம்" என்ற செயல்நிலை ஆய்வு குறித்த கருத்தானது 1970களில் ஐக்கிய அமெரிக்காவில் தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. அக்காலத்தைய "ஆய்வு நிபுணர்கள்" செயல்நிலை ஆய்வை மலிவானதாகவும் வரையறுத்த பயன்களை மட்டும் உடையதாகவும் கருதியமையே இதற்குக் காரணமாகும். ஆனால் 1970களிலும், 1980களிலும் அவுஸ்திரேலியாவிலும் இங்கிலாந்திலும் கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு செயல்நிலை ஆய்வே கருவியாய் அமைந்தது. இவ்விரு நாடுகளிலும் பாடசாலைச் சீர்திருத்தங்கள் தொடர்பாக செயல்நிலை ஆய்வு வெற்றியளித்த காரணத்தினால், ஆசிரியர் பயிற்சியிலும் அலுவலர் விருத்தியிலும் பூரணத்துவம் பெறுவதற்கான ஓர் அம்சமாக ஐக்கிய அமெரிக்காவில் மீண்டும் அங்கீகாரத்தைச் செயல்நிலை ஆய்வு பெற்றுக்கொண்டது.

### செயல்நிலை ஆய்வின் அநுகூலங்கள

கற்பித்தல் முறைகளையும் தலைமைத்துவப் பாங்குகளையும் நேரான முறையிலும் ஆக்க பூர்வமாகவும் கண்டறியவும் பரிசோதிக்கவும் கூடிய சந்தர்ப்பங்களை ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் செயல்நிலை ஆய்வு வழங்குகின்றது. அதிக விளைதிறன் மிக்க கற்பித்தலினூடாகவும் பாடசாலைகளை நிர்வகிப்பதனூடாகவும் மாணவர்களின் அடைவை முன்னேற்றுவதற்கான ஒரு வழிமுறையாக செயல்நிலை ஆய்வின் வலுவை ஆய்வாளர்கள் பரிசீலித்து அறிந்துள்ளார்கள்.

செயல்நிலை ஆய்வில் ஈடுபடும் கல்வியாளர்கள் தமது சிந்தனையில் அதிக நெகிழ்ச்சியுடையோராகவும், புதிய கருத்துக்களை அதிகம் வரவேற்போராகவும், புதிய பிரச்சினைகளை விடுவிக்கக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். செயல்நிலை ஆய்வுச் செயற்திட்டங்கள் ஆசிரியர்களின் சிந்திக்கும் திறன்களிலும் அவர்கள் தமது செயற்படுத்து திறனை உணர்ந்து கொள்ளலிலும், ஒன்றாக வேலை செய்வோருடனான அவர்களது தொடர்பாடலிலும், வாண்மை விருத்தி, மாற்றத்துக்கான செயன்முறை ஆகியவை குறித்த அவர்களது மனப்பாங்குகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

செயல்நிலை ஆய்வில் ஈடுபாடு கொள்ளும் கல்வியாளர்கள், அறிவார்ந்த ரீதியிலும் வாண்மை நிலையிலும் வளர்ச்சியடைவதோடு, பயனளிக்கவல்ல தொடர்புகளை பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத் தோழர்களுடனும் நிறுவி தமது சுயமதிப்பையும் அதிகரித்துக் கொள்கிறார்கள் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இச்செயல்நிலை ஆய்வாளர்கள் ஆழ்ந்த வாசிப்பு, கலந்துரையாடல், தெறிப்புசிந்தனை, கருத்துக்களின் பகுப்பாய்வும் மதிப்பீடும் என்பன போன்ற பல்வேறு அம்சங்களிலும் கரிசனை கொண்டு, அவை தொடர்பான பல்வேறு வினாக்களையும் தம்முள்ளே எழுப்புகின்றனர். செயல்நிலை ஆய்வு நடவடிக்கைகள் ஆசிரியர்களின் ஆக்க ஆளுமையை விருத்தி செய்ய உதவுவதோடு, தம்மைத் தாமே மதிப்பீடு செய்துகொள்ளும் ஆர்வத்தையும் தூண்டுகின்றன. ஆசிரியர்களை அவர்களது தளைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக எடுத்து வைக்கப்படும் ஒரு காலடி எனவும் செயல்நிலை ஆய்வு குறிப்பிடப்படுகின்றது.

மொத்தத்தில் செயல்நிலை ஆய்வின் அநுகூலங்கள் குறித்து ஆய்வுசெய்வோர், செயல்நிலை ஆய்வாளர்கள் வாண்மை நிலை சார்ந்தும் தனியாள் நிலை சார்ந்தும் வளர்ச்சியுறுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் தமது ஆய்வு முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளார்கள். அதே வேளை, தமக்குத் தாமே அதிகாரம் அளிக்கும் உணர்வைப் பெற்றுக் கொள்வதோடு, எதிர்காலத்தில் தமது கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான பொறுப்பையும் செயல்நிலை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதும் இந்த ஆய்வுகளின் பேறான முடிபுகளாகும்.

### செயல்நிலை ஆய்வுச் செயன்முறையின் படிநிலைகள

செயல்நிலை ஆய்வு ஒரு செயன்முறை என்ற வகையில் படிநிலைகளை அது உள்ளடக்கியதாகும். பொதுவாக அது பின்வரும் படிநிலைகளை உள்ளடக்கிய ஒரு வட்டச்சுற்றுச் செயன்முறை (Cyclical Process) ஆகும்.

* பொதுவான விவகாரமொன்றை அல்லது பிரச்சினையொன்றை இனங்காணல்
* சம்பந்தப்பட்ட தகவல்களைச் சேகரித்தல்
* செயலுக்கான திட்டமொன்றை (செயல்நிலைத் திட்டமொன்றை) விருத்திசெய்தல்

* செயல்நிலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
* விளைவுகளை மதிப்பிடல்
* திருத்தியமைக்கப்பட்ட கருத்துடன் அல்லது பிரச்சினையுடன் செயலாய்வுச் செயன்முறையை மீள ஆரம்பித்தல்.

செயல்நிலை ஆய்வானது உச்சப் பயனைத் தர வேண்டுமெனில், ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நிர்வாகிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு கூட்டிணைந்த செயல் நடவடிக்கையாக அது அமைய வேண்டும். பிறருடனான கூட்டிணைவானது பொறுப்புணர்வையும் அர்ப்பணிப்புணர்வையும் அதிகரிக்கச் செய்யும்.

நடைமுறையில், செயல்நிலை ஆய்வுச் செயன்முறையின் படிநிலைகளை பின்வருமாறு சுருக்கமாக விபரிக்கலாம்.

**படிநிலை 1 : சொந்த நாட்டமுள்ள கல்விப்புலத்தில் விவகாரம் ஒன்றை அல்லது அபிப்பிராயம் ஒன்றை இனங்காணல்.**

தனது வேலைச் சூழலில், ஆய்வுசெய்வதனால் பயனளிக்கக்கூடிய ஒரு விவகாரத்தை அல்லது அபிப்பிராயத்தை கல்வியாளர்கள் தெரிந்தெடுக்க வேண்டும். உதாரணமாக, வாசிப்புக் கற்பித்தல், கணிதம் கற்பித்தல், கணினிப் பயன்பாடு, கூட்டுறவுக் கற்றலை நடைமுறைப்படுத்துதல் போன்றவை சம்பந்தமானதாக செயல்நிலை ஆய்வுக்குரிய விவகாரம் தெரிந்தெடுக்கப்படலாம்.

**படிநிலை 2 : சொந்த விருப்புள்ள பரப்புடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையொன்றை அல்லது விவகாரமொன்றை வரையறை செய்தல்.**

ஆய்வுப் பிரச்சினையையும் ஆய்வு செய்யப்படவுள்ள ஆய்வு வினாவையும் தெளிவாகக் கூறுதலே செயல்நிலை ஆய்வுச் செயன்முறையின் திருப்பு முனையாக அமையும் முக்கிய படிநிலையாகும். தற்போதுள்ள நிலைமைக்கும் மாற்றம் காண விழையும் நிலைமைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விபரித்தல் மூலம் ஆய்வுப் பிரச்சினையை வரையறை செய்தல் பயனுள்ள ஓர் அணுகுமுறையாகும். இதனபின், தற்கால நிலைமைக்கும் மாற்றங் காண விழையும் நிலைமைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுக்கான காரணங்களின் மீது கவனத்தைக் குவித்தல் வேண்டும். இக்காரணங்களின் அடிப்படையில் "பிரச்சினை பற்றிய கூற்று" (Problem Statement) அல்லது அது தொடர்பான முதன்மை ஆய்வுவினா (Main Research Question) தெளிவாக எடுத்துரைக்கப்பட வேண்டும். ஆய்வின் ஏனைய படிநிலைகளுக்கு இட்டுச் செல்லும் முக்கியமான அம்சமாக "பிரச்சினைக் கூற்று" அல்லது "முதன்மை ஆய்வுவினா" விளங்குவதனால், இது திட்டவட்டமாக உரைக்கப்பட வேண்டும்.

**படிநிலை 3 : ஆய்வுச் சஞ்சிகைக் கட்டுரைகள், நூல்கள், ஆய்வு அமர்வுகள் போன்றவற்றிலிருந்தான சம்பந்தப்பட்ட தகவல்களை மீளாய்வு செய்தல்.**

குறித்த ஆய்வுப் பிரச்சினை தொடர்பான தகவல்களைக் கண்டறிந்து கொள்வதற்கு சம்பந்தப்பட்ட ஆய்வுச் சஞ்சிகைக் கட்டுரைகளை செயல்நிலை ஆய்வாளர் மீளாய்வு செய்ய வேண்டும். வழமையாக, வாண்மைத்துவச் சஞ்சிகைகள் சிலவற்றினதும் நூல்கள் சிலவற்றினதும் சுருக்கமான மீளாய்வு போதுமானது. இந்த மீளாய்வானது, பிரச்சினை பற்றிய விளக்கத்தையும், இதை ஒத்த பிரச்சினைகளுக்கு ஏனையோர் எவ்வாறு முகம்கொடுத்திருக்கிறார்கள் என்பது பற்றிய சில கருத்துக்களையும் குறித்த ஆய்வை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது குறித்த சாத்தியமான வழிமுறைகளையும் ஆய்வாளருக்கு வழங்குகின்றது. இவ்வாறான மீளாய்வு "இலக்கிய மீளாய்வு" என்ற பரந்த பொருளில் மரபுவழி ஆய்வில் பயன்படுத்தப்படும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்படிநிலையில் ஆய்வுச் சஞ்சிகைக் கட்டுரைகளையும் நூல்களையும் மீளாய்வு செய்வதில் ஏற்படக்கூடிய சில பொதுவான தவறுகள் பின்வருமாறு:

* செயல்நிலை ஆய்வுச் செயற்திட்டத்தைத் தொடங்குவதற்காக அவசரமான மீளாய்வொன்றை மேற்கொள்ளல்.
* இரண்டாம் தரவு மூலகங்கள் தரும் தகவல்களில் பெரிதும் தங்கியிருத்தல்.
* ஆய்வு முறைகளிலோ அளவீட்டுச் செயன்முறைகளிலோ கவனம் செலுத்தாது ஆய்வுப் பெறுபேறுகளில் மட்டும் கவனத்தை குவித்தல்.
* ஆய்வுப் பிரச்சினையுடன் மறைமுகமாக அல்லது நேரடியாகவன்றித் தொடர்புபட்ட விடயங்களை மீளாய்வு செய்யத் தவறுதல்.
* உசாத்துணை நூல்விபரத் தகவல்களைப் பிழையாகப் பதிவுசெய்தல்.

**படிநிலை 4 : செயல்நிலை ஆய்வுச் செயற்திட்டத்தில் எடுத்தாளப்படுகின்ற ஆய்வு வினாக்களை இனங்காணலும் ஆய்வுப் பிரச்சினையை மீளவரையறுத்தலும்.**

ஆய்வு வினாக்கள் ஆய்வாளரின் சொந்த அனுபவங்களையும் அவரின் வாசிப்பறிதல்களையும் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட வேண்டும். அத்தோடு, அடிப்படையில் குறித்த ஆய்வுப் பிரச்சினை சார்ந்த தரவுகளைப் பெற்று, ஆய்வுப் பிரச்சினையை மீளவும் தெளிவாக வரையறை செய்து கொள்ள வேண்டும். இது மாற்றங்காண விழையும் நிலைமைகளைத் தோற்றுவிப்பதற்கான செயல்-

நிலைத் திட்டமொன்றை (Action Plan) விருத்தி செய்து கொள்ளவும் அடிப்படையாக அமையும்.

**படிநிலை 5: ஆய்வுப் பிரச்சினைக்கு அல்லது முதன்மை ஆய்வு வினாவுக்கு விடைகாணக்கூடிய செயல்நிலைத் திட்டமொன்றை அல்லது செயற்கிரமத்தை விருத்தி செய்தலும் நடைமுறைப்படுத்தலும்.**

இப்படிநிலையில், செயல்நிலைத் திட்டத்தை கட்டம் கட்டாக வகுத்து, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான செயல் நடவடிக்கைகளின் வரிசைக்கிரமம் ஒன்றும் தீர்மானிக்கப்படும். பின்னர், இச்செயல் நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக, வரிசைக் கிரமத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

**படிநிலை 6 : மாற்றங்களைக் கண்காணித்தலும் பெறுபேறுகளின் அடிப்படையில் அடுத்த வட்டத்துக்கான விதப்புரைகளை முன்வைத்தலும்.**

இப்படிநிலையில் குறித்த ஆய்வுப் பிரச்சினை சார்பாக மாற்றங்காணும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயல் நடவடிக்கைகள் விளைத்த மாற்றங்கள் கவனத்திற் கொள்ளப்படும். இம்மாற்றங்கள் குறித்த பெறுபேறுகளின் அடிப்படையில், குறித்த செயல்நிலை ஆய்வுச் செயற்திட்டம் எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது எனத் தீர்மானிக்கப்படும். அதேவேளை, எதிர்பார்த்த மாற்றங்களில் நிறைவேறாதனவற்றைக் குறித்துக் கொண்டு, அந்நிலைமை தொடர்பான பிரச்சினையை மீளவரையறை செய்ய வேண்டியமைக்கான நியாயப்பாடுகள் தெளிவுறுத்தப்படும். மீள்வரையறை செய்யப்பட்ட பிரச்சினை தொடர்பாக அல்லது புதியதொரு பிரச்சினை தொடர்பாக இதே வரிசைக் கிரமத்திலுள்ள படிநிலைகளைக் கொண்ட அடுத்த வட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறாக, குறித்த நிலைமை தொடர்பாக, தொடர்ச்சியாக முன்னேற்றத்தைக் காண்பதற்கு செயல்நிலை ஆய்வு வழிவகுக்கின்து. செயல்நிலை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு விவகாரங்களும் நிறுவன நடைமுறைகள், கலைத்திட்ட அமுலாக்கம், பாடசாலை கவிவுநிலை போன்ற வெவ்வேறு பரப்புகள் தொடர்பாகத் தெரிந்தெடுக்கப்படலாம். செயல்நிலை ஆய்வு என்பது பல்வேறு அனுகூலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதோடு. பிரதானமாக கல்வியாளர்கள் ஒருவரை திறனுள்ள தொழி நுட்பவியலாளர் என்ற நிலையிலிருந்து புலமைசார் தொழில் ஆற்றுநர் (Scholarly Practioner) என்ற வாண்மை நிலைக்கு உயர்த்தும் அதேவேளை, மாணவர்களின் கல்விசார் அடைவுகளையும் முன்னேற்றுகிறது.

---

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களில் 95% மான ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களே. ஆண்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றுவந்தாலும் பெண் ஆசிரியர்களுக்கு மட்டுமே பாடசாலைகளில் ஆரம்பக் கல்விப் பொறுப்புக்களை வழங்குவதில் முதலிடம் வழங்கப்படுகின்றது. ஆரம்பகல்வி நியமனத்தைப் பெற்றுவரும் ஆண்வர்க்கத்தினருக்கு புறக்கிருத்திய செயற்பாடுகளுக்குரிய பணிகளை வழங்கி மேன்மைப்படுத்தி வைத்திருப்பதைக் காணமுடிகின்றது. இதற்குப் பல காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளன. பெண்கள் தாய்மைப் பண்புடன் தொடர்புடையவர்கள் என்றும் இளையோரை சிறுவர்களை சிறந்த முறையில் சமூகமயப்படுத்துபவர்கள் என்றும் இளையோருடைய வாழ்வில் பணிக்காலம் முழுவதும் பின்னிப் பிணைந்து வாழ்பவர்கள் என்றும் பெருமைப்படுத்தப்பட்டு பணிகள் பல ஒப்படைக்கப்படுகின்றன. அவ்வாறாயின் ஆண்கள் ஆசிரியத் தொழிலுக்குப் பொருத்தமற்றவர்கள் என்ற கருத்தும் உழைப்புச் செறிவு மிக்க தொழில் துறைக்கே பொருத்தமானவர்கள் என்றும் கருதப்படலாம். இந்நிலையில் தான் மீண்டும் தொழில் உலகில் பாகுபாடும் பேதங்களும் சமத்துவமின்மையும் தோற்றம் பெற்று வருகின்றது. ஆசிரியத் தொழில் என்பது பால்நிலை வேறுபாடற்றது என்ற கொள்கையை கல்வியியலாளர்களும் முகாமையாளர்களும் ஏற்கவில்லை என்பது புலனாகின்றது.

ஆணாதிக்கத்தை மேலோங்கச் செய்வதுடன் சமூகத்தில் இளையோரை வழிப்படுத்தலில் பெண்களே பொறுப்புடையவர்கள் என்பதையும் கோடிட்டுக் காட்டுவதாக அமைகின்றது. அவ்வாறாயின் ஆண்கள் மென்மையுணர்வற்ற வர்க்கங்களா? இந்நிலைமையானது பெண் ஆசிரியை மீது விதிக்கப்படும் பாரிய பொறுப்புக்களாகவும் அழுத்தங்களாகவும் அமைந்துவிடுகின்றது. பாரிய சமூகப் பொறுப்புக்களில் பெண் ஆசிரியைகள் மட்டும் முன்னுரிமைப்படுத்தப்படுவதும் ஏனைய நிர்வாகப் புறக்கிருத்தியப் பணிகளில் ஓரங்கட்டப்படுவதும் ஆசிரியைகளின் ஊக்கமின்மைக்கே நிலைக்களனாக அமைந்து விடுகின்றது.

*(நன்றி: 'ஆசிரியத்துவமும் பால்நிலை அறிகையும்' திருமதி. கேந்திரேஸ்வரி இராதாகிருஷ்ணன், பக்:105-106)*

*சிறப்புச் சிறுகதை*

# வெப்பியாரம்

**ஆழியாள்**



வர்ணாவுக்கு எதுவும் பிடிக்கவில்லை. அப்பா, அம்மாவை அடிப்பது பிடிக்கவில்லை. அவள் யாழினி, டெஸ்டுக்கு படிக்கவில்லை என்று சொல்லிவிட்டு தன்னை-விட விஞ்ஞானத்தில் ரெண்டு மார்க்குகள் கூட வாங்கினது பிடிக்கவில்-லை. பள்ளிக் கூடத்தில் ரவிக்கு அடிவிழுவது பிடிக்கவில்லை. வர்ணா-வை இரண்டாம் பிள்-ளையாய் ஆக்கிய தை-யல், சித்திரப் பாடங்கள் பிடிக்கவில்லை. மாஸ்-டர் அங்கிளை துப்புரவாகப் பிடிக்கவில்லை.

ஆனால் சனி, ஞாயிறு ஸ்கொலஷிப் வகுப்பு பிடித்திருந்தது. சட்டையைத் தொட்டில் போல் பிடிக்க காந்தனும், ரவியும், யாழினியும் மரத்திலிருந்து போடும் நாவப் பழங்கள் பிடித்திருந்தன. அண்ணா-வியாரிடம் கூத்துப் பழகப் பிடித்திருந்தது. வாண்டு மாமா, நட்சத்திரமாமா பிடித்திருந்தனர். உருளைக்-கிழங்குக் கறி பிடித்திருந்தது. கண்ணைப் பூஞ்சிக் கொண்டு சூரியனைப் பார்க்கவும், தொந்தவு இல்லாது கனநேரம் தனியே இருக்கவும் பிடித்திருந்தது.

இத்தனை 'பிடித்திருந்தது' இருந்தாலும் பிடிக்-காதவை தான் அவளை தினமும் போட்டு உலுப்பின. ஏன் இப்படி சிலது பிடிக்காமல் போகிறது என்ற தனியே யோசிப்பாள். பிடிக்காததுகளை பிடிக்கிற மாதிரி ஆக்கிக் கொண்டால் இந்தக் கரைச்சல் வராது என்று யோசனையில் வரும். இன்னுங்கொஞ்சம் யோசித்துக் கொண்டு போனால் எல்லாம் மறந்து போனமாதிரி இருக்கும். கண்ணைப் பூஞ்சி வானைப் பார்த்தபடி இருப்பாள். கண்ணில் சித்திரங்களாக, பாம்புகளாக, சக்கரங்களாக பல வர்ணக் குழம்புகளில் கோலங்கள் நெளிந்து வரும். மனம் சந்தோசத்தில் துள்ளி மகிழும். சரியான நேரத்தில் அக்கா, 'சாப்பிட-வாம்மா வர்ணா' என்று குரல் கொடுப்பாள். கோலச்-சித்திரங்கள் சிதறி, வர்ணங்கள் தளும்பிச் சிந்தி.... எல்லாம் கலைந்து கருமேகங்களாய் ஓடும். கோபம் பொத்துக் கொண்டு வரும். அக்காவின் கெஞ்சலில் அது அடங்கிவிடும். பேசாமல் சாப்பிடப் போவாள் வர்ணா.

அப்படி சாப்பிட்டுக் கொண்டிருந்த போதுதான் முன்பகுதி அனெக்ஸில் இருக்கும் விஜயா டீச்சர் பிள்ளைபெற, நாளை யாழ்ப்பாணம் போறதாக கதைத்துக் கொண்டனர். அனெக்ஸின் பிற் பகுதியில் வர்ணா குடும்பம் இருந்தது.

கதைத்தது போலவே மறுநாள் காலையில் விஜயா டீச்சர் அவளின் அம்மாவோடு யாழ்ப்பாணத்துக்கு கிளம்பிவிட்டாள். 'நல்லாப் படி வர்ணா நீ கெட்டிக்-காரி' என்று வாய்க்கு வாய் சொல்லியபடி கைகாட்டிப் போனாள். எல்லோரும் வழியனுப்பி வைத்தனர்.

அப்பவே ஊரில் ஊரடங்குச் சட்டம் உண்டு. ஆனால் அவள் போன சில நாட்களில் எடுத்ததுக்கு எல்லாம் ஊரடங்குச் சட்டம் அமுலில் வந்தது. ஊரே ஊமைக் கோட்டானாய் மாறிப் போனது. எல்லோ-ரும் நேரத்துக்குப்படுத்துக் கொள்வார். நாய்கள் கூட்ட-மாகத் திரியாது. சில கருத்த உடை உருவங்கள் மோட்-டார் சைக்கிளில் ரோந்து வரும். சில கறுவல்கள் நடந்து வரும்.

வர்ணா தன் படிப்பு நேரம் முடிந்ததும் வீட்டில் சாப்பிட்டு விட்டுக் விஜயா டீச்சரின் முன்பக்க அனெக்ஸிற்கு வருவாள். அங்கு மாஸ்டர் அங்கிள் தயாராய் இருப்பார். அவர்கள் இருவரும் மதில்சுவர் ஓரத்திற்குப் போய் காத்திருப்பார்கள். தூரத்தில் பளிச்சென்ற விளக்குகளுடன் மோட்டார் சைக்கிள் வரும் பொழுது கழுத்தை நீட்டி எட்டிப் பார்ப்பாள் வர்ணா. அவை கிட்ட வருகையில் மாஸ்டர் அங்கிள் தலையைக் குனியுமாறு கூறுவார். அவள் நாற்காலி-யில் குந்தி விடுவாள். வாகனங்கள் கடந்தபின் மீண்டும் நாற்காலில் ஏறி இருளின் நிசப்தப் போர்வையை கண்வெட்டாது உள்வாங்குவாள். எப்போதாவது தாண்டும் வெளிச்சங்களைத் தவிர குறிக்கீடுகள் எதுவும் இருப்பதில்லை.

நாற்காலியில் நின்றபடியே. அவள் போக்கில் விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதாளத்தை விதம்விதமாக வடிவமைப்பாள். அடுத்தமாத அம்புலி-மாமாவில் விக்கிரமாதித்தன் பதில் சொல்லாவிட்டால் அவள் தலை சுக்கு நூறாய் வெடிக்குமே. யாழினி-யிடம் இது பற்றி நாளை கதைக்க வேண்டும் என்று

யோசனை விரியும். கணக்கு செய்கைவழிகளை ஞாபகப்படுத்திப் பார்ப்பாள்.

பின்புற அனெக்ஸிலிருந்து அம்மாவின் குரல் வர்ணாவை அழைக்கும் போது மணி பத்தைத் தாண்டியிருக்கும். 'வாறன் அம்மா' என்று மாஸ்டர் அங்கிளின் கைகளை விலக்கி நாற்காலியிலிருந்து குதிக்க முற்படுவாள்.

'விடிய எழும்பி படிக்க வேணும். நாளைக்கும் வாங்கோ சரியா?' 'மதி-ல்ல நிண்டு மோட்ட சைக்கிள் பாப்பம் என்ன!' என்று கூறிய படி அவ-ளின் உடைகளை சரிப்-படுத்தி அனுப்பி வைப்-பார். இப்படித்தான் ஊரடங்கு இரவுகள் இதமாயக் கழிந்தன.

சில நாட்களில் மதி-லடிக்குப் போக அவளுக்கு மனம் ஒப்பாமல் இருக்கும். ஆனால் மாஸ்டர் அங்கிள் "வர்ணா, வர்ணாக்குட்டி" என்று கூப்பிட்ட படி இருப்பார்.

"போய் என்ன எண்டு கேள்" என்பாள் அம்மா.

"எனக்கேலாது."

"போய் என்ன எண்டு கேட்டுட்டு ஓடிவா"

"ஏலாது"

"அவருக்குகெண்டு ஒரு பிள்ளை பிறந்த பிறகு உன்ன கூப்பிடவா போறார். போவன் மோன"

"......................................"

"உன்னில் விருப்பத்தில் தானே கூப்பிடுகிறார். பாவம்....போ" என்று அம்மா சொல்லுவாள்.

வர்ணா போவாள். மாஸ்டர் அங்கிள் அவளை மதிலடிக்கு கூட்டிப் போவார். 'நல்ல பிள்ளை நிண்டு ரோட்டைப் பாருங்கோ, நல்ல பிள்ளையெல்லா' என்று அவள் ஏறி நிற்கும் நாற்காலியோடு ஒண்டி அவளோட நிற்பார்.

மாஸ்டர் அங்கிளின் மூச்சு சத்தம் வர்ணாவின் காதில் பெரிசாய் வந்துவிழும். கைகளால் அவளின் கால்களை அமுத்திவிடுவார். 'அந்தா மோட்ட சைக்கிள் வருது' என்று தன் நெஞ்சோட வர்ணாவின் முகத்தை அமுத்துவார். அவளுக்கு எரிச்சலாய் இருக்கும்.

"நான் போகப் போறன்" என்பாள்.

"ஏன்?...." அங்கிள் கனிவாயச் சிரிப்பார்.

"நித்திரை வருது"

"சரி, சரி இன்னுங் கொஞ்ச நேரம் என்ன?"

"இல்ல போகப் போறன்"

"அச்சாப் பிள்ளையெல்லா கொஞ்ச நேரம் நில்லுங்கோவன்" என்றபடி அவளோடு ஒண்டிக் கொண்டு நிற்பார். முதுகைத் தடவுவார். அவள் இருமும் போது அம்மா அவளது நெஞ்சைத் தடவி விடுவதுண்டு. அதுபோல அவரும் தடவி விடுவார். நல்ல சுகமாக இருக்கும். "உங்கட பள்ளிக்கூடத்தில் உங்களுக்கு யாரைப் பிடிக்கும்?" என்றெல்லாம் கேட்பார்.

ஒரே இந்தக் கேள்விகளைத் தான் திரும்பத் திரும்பிக் கேட்பார். எத்தினதரம் சொன்னாலும் மறந்தும் போயிருவார். 'எப்படி மாஸ்டர் அங்கிள், மாஸ்டர் படிப்பு படிச்சார்' என்று வர்ணாவுக்கு புதிதாய் யோசிக்க வரும்.

அன்றைக்கு ஒரு நாள் வர்ணாவை மதிலடியில் இருந்து முன் அனெக்ஸில் உள்ள அறைக்குள் தூக்கிக் கொண்டு போனார் மாஸ்டர் அங்கிள் அவளை, தன் கட்டிலில் இருத்திவிட்டு மின் விளக்-கை அணைத்து வருவதாகக் கூறி 'சுவிட்ச்' இருந்த இடத்துக்குப் போனார்.

வர்ணாவுக்கு என்னவோ போலிருந்தது. உள்ளு-ணர்வு அலைக்கழித்தது. அறைக்கதவு வழியே புகுந்து முற்றத்துக்கு எட்டுக்கால் பூச்சி போல தாறுமாறாய் ஓடி வந்தாள். தன் வீட்டு அனெக்ஸ் வாசலுக்கு வந்ததும் அம்மாவின் நினைப்பு வந்தது. ஓடி வரு-வதை அம்மா கண்டால்... 'ஏன் ஓடி வாறாய்?' என்று துளைத்து வாயைப் பிடுங்கிவிடுவாள். அதனால் மெதுவாக நடந்து போய் மேசையிலுள்ள கொப்பி-களை அடுக்குவது போல் அடுக்கினாள். ஓடினதில் கால் வலித்தது. கட்டிலில் சுருண்டாள்.

மறுநாள் இரவு. வீட்டில் படித்துக் கொண்டிருந்த-போது மாஸ்டர் அங்கிள் "வர்ணா, வர்ணாக்குட்டி, என்று முற்றத்தில் கூப்பிட்டபடி வந்தார். வர்ணா மூச்சுக்காட்டாமல் இருந்தாள். எழும்பி வரவில்லை. அவரோ அம்மாவிடம் 'அன்ரி பொம்பிளைப் பிள்-ளை பிறந்திருக்கு, தந்தி வந்திருக்கு' என்றார். 'அப்படி-யா தம்பி நல்லம். கடவுளுக்கு நன்றி.' என்று சொல்லிவிட்டு.

'வர்ணா! இனி உன்ன மாஸ்டர் அங்கிள் கூப்பிட மாட்டார். போ.... உன்ர பவிசு எல்லாம் பொயிற்று' சிரித்தவாறு அம்மா பகிடி பண்ணினாள்.

"இனி அங்க போகமாட்டன். எனக்கேலா. ஏலாதெண்டா ஏலா" வர்ணாவின் தொண்டை மூன்-றாம் வீடு வரை கேட்டது.

"சீ...சீ..."

"அப்படிச் சொல்லாதேங்கோ அன்ரி. நீ வாம்மா வர்ணா" என்று கைகளை நீட்டியபடி அவளைத் தூக்க வந்தார் மாஸ்டர் அங்கிள்.

வர்ணாவுக்கு எதுவும் பிடிக்கவில்லை.



# வாசகர் பக்கம்

கடந்த இதழில் துரைமடன் "அகமும் புறமும்" ஆக 5ம் தரப்புலமைப் பரீட்சை உணர்த்தும் கோலங்கள் எனும் தலைப்பில் எழுதிய கட்டுரை யதார்த்தமானது. அவரது பார்வை நோக்கு பாராட்டத்தக்கது. இன்றைய காலத்தில் வேண்டப்படுவது.

கல்வியியலாளர்கள் பற்றி போகிற போக்கில் விமர்சனம் செய்வது சரியான நிலைப்பாடு. இன்று சிலர் உலகவங்கியின் பரிந்துரைகளை ஆலோசனைகளை எந்தவித விமர்சனமும் இன்றி முழுமையாக ஏற்றுக் கொள்ளும் நிலையே உள்ளது. உலகமயமாக்கலின் துரித வேகத்துக்கு எம்மை மாற்றியமைக்கும் அவசரப் பணிகளை சிரமேற் கொண்டு செயற்படும் கல்வியியலாளர்கள் அதிகாரிகள் தான் எம்மத்தியில் அதிகமாக உள்ளார்கள் உருவாகிவருகின்றார்கள்.

இந்த நிலையில் மாற்றுக் கல்வி மற்றும் எமது சமூகத் தேவை கருதிய செயற்பாட்டுக்கு உதவும் வகையில் செயற்படும் "அறிவு, மனப்பாங்கு" அற்றவர்களைத் தான் நாம் உருவாக்கி வருகின்றோம். 5ம் தரப்புலமைப் பரீட்சைக்கு M.Ed பட்டம் பெற்றவர் தனியார் வகுப்புகளை நடத்தி கல்வி வணிகமாக உருப்பெறுவதற்கு காரணமாக இருந்து செயற்படும் பண்பை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்வது? இது நியாயமான கேள்வியே.

சமீபத்தில் விஞ்ஞான ஆசிரியர் ஒருவர் 5E மாதிரியில் கற்றல் கற்பித்தல் தொடர்பில் கட்டுரையொன்று எழுதியிருந்தார். இவர் பாடசாலைக்கு வெளியில் முழு நேர "ரியூசன் மாஸ்ரர்" இவரிடம் நாம் கேட்பது, இந்த 5E முறையைப் பயன்படுத்தி பாடசாலை மற்றும் ரியூசன் வகுப்புகளில் என்ன மாதிரி கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்?

அவரால் பதில் சொல்ல முடியாது. ஏனெனில் 5E முறையை அவர் அங்கெல்லாம் பயன்படுத்துவதே இல்லை. ஆனால் அவர் M.E.d. பட்டம் இதனால் தன்னை அடையாளப்படுத்த உப்புச்சப்பு இல்லாமல் அது தொடர்பில் கட்டுரை எழுதுகின்றார். என்ன பரிதாபம்?

பொதுவில் இத்தகு மாணவர்களைத் தான் கல்வியியல் துறை உருவாக்கி வருகிறது. இன்னும் நமது கல்வியியல் மரபு குறித்து கேள்விகள் எழுப்ப வேண்டும்.

இந்தத் துணிச்சல் அகவிழிக்கு இருப்பதையிட்டு பாராட்டுகின்றோம்.

ஆர். புவனேஸ்வரன்
கொழும்பு.

வவுனியா கல்வியியல் கல்லூரியைச் சேர்ந்-தவர்கள் பலர் தொடர்ந்து அதிகமாக அகவிழியில் எழுதி வருகிறார்கள். ஏனைய கல்வியியல் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர்கள் ஏன் எழுதுவதில்லை.

கற்றல், தேடல், ஆய்வுப் பண்பு போன்ற அம்சங்கள் இல்லாதவர்கள் தான் அதிகமாக கல்வியியல் கல்லூரிகளில் கல்வியியலாளர்களாக வந்துள்ளார்களா? தற்போது வெளிவரும் கல்விசார் கட்டுரைகள், நூல்கள் போன்றவற்றை தொகுத்துப் பார்க்கும் போது பேராசிரியர்கள் சபா. ஜெயராசா சோ. சந்திரசேகரன் போன்றோரது முயற்சிகள் தான் அதிகமாக உள்ளன. இவர்கள் இருவரும் தொடர்ச்சியைப் பேணுகிறார்கள். ஆனால் ஏனையவர்கள் மத்தியில் இவர்களுக்குள்ள ஆர்வம் தூண்டல் உழைப்பு ஏன் இல்லை?

முஸ்லிம் கல்வியியலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வு உருவாகவில்லையா? அல்லது அகவிழி அவர்கள் மத்தியில் உருவாகும் கட்டுரைகளைப் போடக் கூடாதளவிற்கு இனவாதப் போக்கு உடையதா? ஏனென்றால் அகவிழியில் அதிகம் முஸ்லிம் கல்வியியலாளர்களிடமிருந்து கட்டுரைகள் வெளிவரவில்லை.

இதற்கான விளக்கம் பதில் ஏதும் இருந்தால் அடுத்த இதழில் எதிர்பார்க்கிறேன்.

எம்.எம்.எம். பௌசர்
குருநாகல்.

ஆ.ர் :- அகவிழி இனவாதப் போக்கு உடையது அல்ல. ஆலோசனைக் குழுவில் முக்கியமான முஸ்லிம் கல்வியியலாளர்கள் உள்ளார்கள். பல்வேறு முஸ்லிம் பாடசாலை மற்றும் முஸ்லிம் ஆசிரியர்களுடன் நாம் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள்.

அகவிழியில் அவ்வவ்பொழுது முஸ்லிம் நண்பர்களது கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் அவை போதாது. பலரும் எழுதுவதாக இல்லை. கட்டுரைகள் தொடர்ந்து வருமானால் அவை நிச்சயம் இடம் பெறும்.

நண்பர் பௌசர் அவர்களே தாராளமாக நீங்கள் எழுதுங்கள். எழுதக்கூடியவர்களை தூண்டுங்கள்.

முஸ்லிம் சமூகத்திலிருந்து ஆசிரிய ஆய்வாளர்கள் பலர் உருவாக வேண்டும்.

அவர்களுக்கு நாம் களம் அமைத்துக் கொடுக்க விருப்புடன் உள்ளோம்.

5ம் தரப் புலமைப் பரீட்சை குறித்து தொடர்ந்து பல்வேறு கட்டுரைகள் வெளிவருவது ஆரோக்கியமானது. ஆனால் கல்வியியலாளர்கள் மத்தியில் இந்த விவாதம் விழிப்புணர்வு எதையும் ஏற்படுத்துவதாக இல்லை.

நம்ம சூழலில் விமர்சன மரபு எதுவும் இல்லை. கல்விக் கொள்கை உருவாக்கங்களிலும் நம்மவர்கள் சிறந்த பங்களிப்பு செய்யும் வகையில் இல்லை. அரசாங்கம் என்ன சொல்கிறதோ தப்பாமல் அதை கடைப்பிடித்து அதன்படி ஒழுகுவது தான் சிறந்த காரியம் என்று நம்புகிறார்கள்.

பாடசாலை மட்டங்களில் இது தொடர்பிலான கலந்துரையாடல் வேண்டும் என்ன செய்யலாம்?

தி. பாலச்சந்திரன்
கொழும்பு

ஆ.ர் :- பொதுவாக பாடசாலைகளில் தரவட்டச் செயற்பாட்டை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். நாம் இதனை காத்திரமாகவும் ஆரோக்கியமாகவும் முன்னெடுக்கலாம். ஏனெனில் தரவட்டம் என்பது ஒரு பாடசாலையில் பணியாற்றும் அதிபர் ஆசிரியர்கள் தன்னார்வத்தோடு தாமாக முன்வந்து ஒரு குழுவாக சேர்ந்து வாரத்தில் ஒரு நாள் தவறாமல் ஒன்று கூடிச் செயல்படுவதே தரவட்டம். இங்கு பாடசாலையின் தரம் செயற்பாடுகள் பாடசாலை எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆசிரியர்களின் பணியின் தன்மை போன்றவை தொடர்பாக கலந்துரையாடலாம். இதனால் தங்கள் மகிழ்ச்சியையும் பெருக்கிக் கொள்ள முடியும். இங்கு நாம் பல்வேறு விடயங்களை கலந்துரையாட முடியும்.

நாம் ஏன் இதனை முன்னெடுக்கக் கூடாது பாடசாலைகளில்.

---

மட்டக்களப்பில் அகவிழி ஆசிரியர் வந்து அகவிழியின் பயன்பாடு பற்றி நேரடியாக அல்லாமல் மறைமுகமாக உணர்த்தும் வகையில் பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து கொண்டுள்ளார். அன்று நமது பாடசாலையில் கல்வி விழிப்புணர்வு சில மணி நேரமாவது இருந்தது. பின்னர் பழையபடி யாவரும் அதே பாணியில் - சேவையில் மூழ்கிவிட்டனர்.

ஆசிரியர்கள் தம்மை 'இற்றைப்படுத்தும்' நிலையில் இன்று இல்லை. இதற்கு புதிய மருந்துதான் கண்டு பிடிக்க வேண்டும்.

அகவிழி ஆசிரியர் அடிக்கடி எமது பாடசாலைக்கு வர வேண்டும். தங்களது நடைமுறை ரீதியான கருத்துக்கள் எம்மை அதிகம் சிந்திக்க வைத்தன.

இந்த சிந்தனை இன்னும் தொடர வேண்டும். நம்முடைய செயற்பாட்டில் மாற்றம் வரவேண்டும்.

ச.மகேஸ்வரன்
மட்டக்களப்பு

---

"மாணவரின் ஒழுக்க வளர்ச்சியில் ஆசிரியர் பங்கு" என்றும் கட்டுரை கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று மாணவர்களிடம் நல்லொழுக்கப் பண்புகளை வளர்த்துச் சமுதாயத்தில் பண்புள்ளவர்களாக வாழ பயிற்றுவிப்பதாகும் என்பதை தெளிவாக சுட்டிக்காட்டியது.

ஆனால் இன்றைய நடைமுறையில் மாணவரின் ஒழுக்க வளர்ச்சியில் ஆசிரியர் எந்தளவிற்கு பங்கு கொள்ள முடிகிறது? முன்னைய காலத்தில் ஆசிரியர் - மாணவர் உளவு ஆரோக்கியமாக இருந்தது. அதாவது மாணவர்களது ஒழுக்க வளர்ச்சியில் ஆசிரியர் கண்ணும் கருத்துமாக இருந்தார். இதைவிட மாணவர்களுக்கு முன்மாதிரியாக ஆசிரியர்களது ஒழுக்கம் இருந்தது. இந்த ஆசிரியர்களை மாணவர்கள் பின்பற்றக் கூடியதாக இருந்தது.

ஆனால் இன்று ஆசிரியர் - மாணவர் உறவு என்ன? ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன் மாதிரியாக உள்ளார்களா? திரு.லோகேஸ்வரன் தனது அனுபவத்தில் இருந்தும் நடைமுறை உண்மைகளிலிருந்தும் இது பற்றி சிந்திப்பது நல்லது. அவ்வாறான அனுபவங்கள் படிப்பினைகள்தான் எமக்கு வேண்டும்.

வெறுமனே கோட்பாடுகளை மட்டும் கூறாமல் அவற்றை நடைமுறைப்படுத்தும் போது எழும் சிக்கல்கள் சவால்களையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்

கோ.மாணிக்கவேல்
ஓய்வு பெற்ற ஆசிரியர்.

---

பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா அவர்கள் "ஆசிரியர்க்கு மெய்யியல் அவசியமாவது ஏன்? என்ற கட்டுரையை அகவிழியில் (சன 2009) எழுதியிருந்தார். இந்தக் கட்டுரை என்னை அதிகம் சிந்திக்கத் தூண்டியது.

பொதுவாக ஆசியர்களுக்கு மெய்யியல் அறிவு துளியும் இருப்பதில்லை. கல்வித்தத்துவம் கல்வி உளவியல் போன்ற பாடங்களைப் படித்தாலும் அவை சோர்வு தரும் பாடங்களாகவே கற்பிக்கப்படுகின்றன. மாறுபட்ட தரிசன வீச்சு நிரம்பிய உயிர்ப்பான சிந்தனைத் தேடல் உள்ள ஆசிரியர்களை உருவாக்குவதில இந்தக் கல்வியியல் கற்கை முறை தவறுவிட்டுள்ளது. பிரயோக மெய்யியல் நிலை முழுமையாக கடத்தப்படுவதில்லை. இதனால் மெய்யியலை கல்வி தொடர்பான பிரச்சினைகளுக்கு பிரயோகிப்பது என்பது இல்லாமல் போய்விட்டது. ஏன்? எதற்கு? எவ்வாறு? போன்ற வினாக்களை எழுப்பும் நிலைமை உருவாகவில்லை. இதனால் தான் மெய்யியல் தெளிவு பெற்ற ஆய்வாளர்கள் எம்மிடையே நடமாடவில்லை.

இது பற்றி நான் விரிவாகப் பேச முடியும். வேறொரு சந்தர்ப்பத்தில் கட்டுரையாக எழுதி அனுப்புகிறேன்.

செ.காண்டீபன்
கொழும்பு.

**அகவிழி**

**AHAVILI**
3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com

## சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப் பெயர்) : ______________________

கற்பிக்கும் பாடசாலை : ______________________

பாடசாலை முகவரி : ______________________

தொலைபேசி/தொலைநகல் இல. : ______________________

மின்அஞ்சல் முகவரி : ______________________

கற்பிக்கும் பிரிவு : ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி : ______________________

இத்துடன் ரூபா [ ] க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல [ ] இணைத்துள்ளேன்.

கையொப்பம் திகதி

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள்

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமஷல் வங்கி, வெள்ளவத்தை
நடைமுறைக் கணக்கு எண் 1100022581

Commercial வங்கியின் எந்த கிளைகளிலிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | 50/= |
| ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | : | 1000/= |

## அகவிழி விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | 7000/- |
| உள் அட்டை (முன்) | : | 6000/- |
| உள் அட்டை (பின்) | : | 5000/- |
| உள் பக்கம் | : | 4000/- |
| நடு இருபக்கங்கள் | : | 6500/- |

தொடர்புகட்கு

**Colombo**
3, Torringto Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

**Jaffna**
189, Vembadi Road, Jaffna.
Tel: 021-2229866


**Trincomalee**
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

**Batticaloa**
37, Old Rest House
Tel: 065-2222097

# சேமமடு பதிப்பகத்தின்
## புதிய வெளியீடுகள்




பேரா.சபா.ஜெயராசா
ISBN:955-1857-24-0
விலை : 250/-
CBCN:2008-11-25-025



பேரா.சோ.சந்திரசேகரம்
கலாநிதி.மா.கருணாநிதி
ISBN:955-1857-27-1
விலை : 340/-
CBCN:2008-12-28-028



கே.ரீ.கணேசலிங்கம்
ISBN:955-1857-25-7
விலை : 480/-
CBCN:2008-11-26-026



பேரா.சபா.ஜெயராசா
ISBN:955-1857-28-8
விலை : 250/-
CBCN:2008-12-29-029



அ.ஸ்ரீகாந்தலட்சுமி
ISBN:955-1857-26-4
விலை : 750/-
CBCN:2008-11-27-027



எஸ்.அன்டனி நோர்பேட்
ISBN:955-1857-29-5
விலை : 350/-
CBCN:2008-12-30-030

சேமமடு

## சேமமடு பொத்தகசாலை
## CHEMAMADU BOOK CENTRE

UG.49,50, People's Park, Colombo - 11, Sri Lanka.
Tel : 011-247 2362, 232 1905 Fax: 011-244 8624
E-Mail: chemamadu@yahoo.com

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

முரளி கொமினிகேஷன்
185, டன்பார் வீதி,
ஹற்றன்
தொ.பே.இல: 051-2222041/42/43

குமரன் ரேட் சென்டர்
18, டெய்லியர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல: 052-2223416

அருணா ஸ்ரோஸ்
38, கம்பளை வீதி,
நாவலப்பிட்டி.
தொ.பே.இல: 077-4728883

நியூ கேசவன் புக்ஸ்டோல்,
56, டன்பார் வீதி,
ஹற்றன்.
தொ.பே.இல: 051-2222504
051-2222977

அபிஷா புத்தகக் கடை
137, பிரதான வீதி,
தலவாக்கல.
தொ.பே.இல: 052-2258437

அருள் ரேட் சென்டர்
19, பிரதான வீதி,
தலவாக்கல
தொ.பே.இல: 052-2258584

எம்.ஐ.எம். ஷியாட்
46, கோட்ஸ் வீதி,
மாவனெல்ல, 71500
கை.தொ.இல: 0777-065123

அகவிழி நிலையம்
81ஏ, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே.இல: 026-2224941

அறிவாலயம் புத்தகக்கடை
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: 0777-222366

நூர் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்
132, பிரதான வீதி,
கிண்ணியா 03
தொ.பே.இல: 026-2236266

அகவிழி நிலையம்
37, ஓல்ட் ரெஸ்ற் கவுஸ்
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 065-222-2097

பி. ஜெகதீஸ்வரன்
அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி
மட்டக்களப்பு .
தொ.பே.இல: 077-1261718
கை.தொ.இல: 077-9028679

அன்பு ஸ்ரோஸ்
14, பிரதான வீதி,
கல்முனை
தொ.பே.இல: 067-2229540

எம். சண்முகராஜா
56, பதுலுசிறிகம
பதுளை
தொ.பே.இல: 055-2229137/072408521

புக் லாப்
172, ராமனாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290
கை.தொ.இல: 0777-840318

எஸ். ஏ. முஹீர்
ஆசிரிய நூலகர்
மர்க்கஸ் வீதி
மூதூர் - 05
தொ.பே. இல: 060 226 1158,
077 991 7758

கவிதா புத்தகக் கடை
வவுனியா
தொ.பே.இல: 0572223556

S. ஏகாந்தராஜன்
50/9, றாகல பஜார்,
ஹல்கிறனோயா,
தொ.பே.இல. 072-3715909

பராசக்தி ஏஜன்சீஸ்
71, பிரதான வீதி
பண்டாரவளை
தொ.பே.இல: 0572223556

M.T.M தெளசீர்
127/2, கண்டி வீதி
திகாரிய
தொ.பே.இல: 033-2292736/
0777-411543/071-4493154

பூபாலசிங்கம் புத்தகக் கடை
202, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல: 011-2422321

பூபாலசிங்கம் புத்தகக் கடை
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: 4515775/2504266

சேமமடு புத்தகக்கடை
UG 50, 52 பீப்பில்ஸ் பார்க்
கொழும்பு 11.
தொ.பே.இல: 011- 2472362

ஜோதி புக் சென்டர்,
கிரான் பாஜார்,
மன்னார்
தொ.பே.இல: 023- 2222052

அகவிழி நிலையம்
189, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2229866

அகவிழி நிலையம்
66, பேராதனை வீதி,
கண்டி.
தொ.பே.இல: 081-2224041
கை.தொ.இல: 077-9148987

A.L. அனீஸ் அலி
302/A, நெசவு நிலைய சந்தி,
பொத்துவில் - 02
தொ.பே.இல. 077-9183597/060-2635567

ஜானு புத்தக நிலையம்
ஆஸ்பத்திரி வீதி,
களுவாஞ்சிக் குடி.
தொ.பே.இல: 077-6446046